


கல்கி
KALKI
14.10.1962
30 காசு





சிகிச்சை நிலையங்களின் வளர்ச்சி

1930-ம் ஆண்டு இந்தியா ஒரு துணிவான பரிசோதனையை செய்தது. உலகத்திலேயே முதலாவது அரசாங்க கர்ப்பத்தடை சிகிச்சை நிலையத்தை அப்போதிருந்த மைசூர் அரசாங்கம் தொடங்கியதுதான் அந்த துணிவான சோதனை. ஆனால் முதலாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில், குடும்பக் கட்டுப்பாடு இயக்கம் மக்களின் திட்டமாக மாறும் வரை, இந்த இயக்கம் நன்கு முன்னேறவில்லை. இரண்டாவது திட்டம் 21 கிராம சிகிச்சை நிலையங்களுடனும் 126 நகர சிகிச்சை நிலையங்களுடனும் தொடங்கியது. 1962 மார்ச் முடிவில் 1391 கிராம மற்றும் 704 நகர நிலையங்கள் இருந்தன. மூன்றாவது திட்டத்தின் லட்சிய அளவு 6000 கிராம சிகிச்சை நிலையங்களும் 1,550 நகர சிகிச்சை நிலையங்களுமாகும்.

ஆனந்தம் ஆரோக்கியம் அடைய

குடும்பத்தை திட்டமிடுங்கள்

அருகிலுள்ள அரசாங்கம் அங்கீகரித்துள்ள

குடும்பக் கட்டுப்பாடு நிலையத்திற்கு

சென்று ஆலோசனை பெறுங்கள்

சுபகிருது, புரட்டாசி 28உ

கல்கி

அக்டோபர் 14, 1962

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே ; சம்பவங்களும் கற்பனையே.



வகையறிந்து புகைபிடிப்போர் வாக்கு...
புகைபிடிக்கும் இங்கிதம் பற்றி வரிசையாக விரைவில் வெளிவரப் போகும் எட்டு விளம்பரங்களை எதிர்பாருங்கள்.
புகைபிடிக்கும் இங்கிதம் என்றால் அதில் தொல்லை ஏதும் இல்லை; அதற்கு மாறாக, உங்களுக்குப் பன்மடங்கு இன்பம், பிறருக்கும் நன்மை.
ஒருசில குறிப்புக்களை மனதில் வைத்துக் கொண்டாலே போதும். பண்பாடறிந்து புகை பிடிப்போர்-அன்னார் எங்கிருப்பினும்-கருத்துடன் கைக் கொள்ளும் பாணியே அவை!
இழுக்க இழுக்க இன்பம்- இறுதிவரை!
Panama
20
CIGARETTES
விசேஷக் கலவை செய்வோர்:
கோல்டன் டொபாக்கோ கம்பெனி ப்ரைவேட் லிமிடெட், பம்பாய்-56.
பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.
GT. 609 TAM
Grant's Advtg.



மலர் 22 | இதழ் 11

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

பணி மலர்கிறது

மக்கட்குலம் முழுதும் பேர் ஆர்வத்துடன் எதிர்நோக்கிய ராஜாஜி — கென்னடி சந்திப்பு நிகழ்ந்த பின் "காயா, பழமா?" என்று கேட்டனர் நிருபர்கள். "தூதும் பணி மலரத் தொடங்கி யிருக்கிறது; காய்ப்பதும், பழுப்பதும் பிற்பாடு" என்று தமக்கே உரிய முறையில் உவமை நயம் மிளிரப் பதிலளித்தார் ராஜாஜி.

அணு சோதனைகளை நிறுத்துவதற்கு ருஷியா இணக்கம் தெரிவித்தால் இப்போதே தாமும் சோதனையை நிறுத்துவதாகக் கென்னடி அவர்கள் ராஜாஜியிடம் கூறியிருக்கிறார். பாதாளச் சோதனை, நிலமட்டச் சோதனை, வானவெளிச் சோதனை இவற்றில் அணு குண்டுகளைப் பாதாளத்தில் சோதனை செய்வதை மற்ற வல்லரசு கண்டுபிடிக்க இயலாது என்று கூறப்படுகிறது. 'இருந்தாலும் இதற்காக மற்றச் சோதனைகளையும் நிறுத்தா திருப்பது நியாயமாகாது. இரகசியமாக நடைபெறும் தீங்குக்காகப் பகிரங்கத் தீங்கையும் அநுமதிப்பது சரியாகாது' என்று சமீபகாலத்தில் ராஜாஜி எழுதியும் பேசியும் வந்திருக்கிறார். இந்த ஆணித்தரமான வாதத்தின் உண்மையைக் கென்னடியும் உணர்ந்திருப்பது வரவேற்க வேண்டிய விஷயமாகும். பாதாளச் சோதனைகளை நிறுத்துவது குறித்து உடன்பாடு காண இயலாவிடினும், பூமி மட்டத்திலும், சூழலிலும் நடக்கும் சோதனைகளை நிறுத்த ருஷியா இணங்கினால் அந்த அளவுக்கேனும் சோதனைகளை நிறுத்தத் தாமும் தயார் என்று அவர் கூறியுள்ளார். ஐ. நா. சபையில் சோதனை நிறுத்தத்தைத் தடை செய்யும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அமெரிக்கா அதனை மதித்துக் கடைப் பிடிக்கும் என்றும் இதமாக மொழிந்துள்ளார் கென்னடி.

ஆயுத பலத்தை ஆத்மீக பலம் சந்தித்ததால் மலர்ந்த சில நலங்கள் இவை. ராஜாஜியின் ஆத்ம பலத்தாலும், அறிவு பலத்தாலும் கவரப்பட்ட அமெரிக்க ஜனாதிபதி, அவருடைய பணிகளைத் தாம் தொடர்ந்து கவனித்து வரப்போவதாகக் கூறி யிருக்கிறார். இந்த மலர்ச்சியே, காயாகிக் கனியாகி உலகமெங்கும் அன்பின் சுவையைப் பரப்ப வேணும் என வேண்டுகிறோம்.

ஐ. நா. பொதுக் காரியதரிசியுடனும் ராஜாஜி அணு ஆயுத சோதனை நிறுத்தம் குறித்து விவாதித்து வருகிறார். சோதனைகளை நிறுத்த வேண்டும் என்று கோரும் தீர்மானத்தை ஐ. நா. நிறைவேற்றினால் மட்டும் போதாது; அதனை ஒரு நாடு மீறினால் உலக நாடுகள் அந்த நாட்டைக் காரிய ரீதியில் கண்டிப்பதற்கும் இத்தீர்மானத்தில் ஷரத்து விதிக்க வேண்டும் என்று ராஜாஜி வலியுறுத்தி வருகிறார்.

எந்த ஒரு வல்லரசும் மற்ற வல்லரசின் இணக்கத்தை எதிர்பார்க்காமல், தன்னைப் பொறுத்த மட்டில் நியாயமாக நடந்துகொண்டு ஆயுத சோதனையை நிறுத்த வேண்டும் என்பதுதான் ராஜாஜியின் முக்கியமான புத்திமதி. இந்தப் புத்திமதியை ஏற்று நடக்க எவ்வளவோ தர்ம பலம் வேண்டும். அதனால்தான் ஒருதலைப்பட்சமாக ஆயுத சோதனையை நிறுத்த வேண்டுமென ராஜாஜி கூறுவதை ஏற்க அமெரிக்கா — அதே போலத்தான் ருஷியாவும் — தயங்குகிறது. எனினும், 'இவ்வருட இறுதிக்குள் முக்கியமான ஒரு முடிவு ஏற்படும்' என்று ராஜாஜி கூறியிருப்பது, இன்று பூத்துள்ள பணி கனியாகும் நாள் எட்டத்தில் இல்லை என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

டாக்டர் சுப்பராயன் மறைவு





மகாராஷ்டிர கவர்னர் டாக்டர் சுப்பராயன் அவர்கள் காலமானார் என்ற செய்திகேட்டுத் திடுக்கிட்டோம். அவருக்குக் 'குமாரமங்கலம் ஜமீன்தார்' என்று பெயர். ஆனால் அவரிடம் ஜமீன்தார் பகட்டை எவரும் கண்டதில்லை. எல்லோருடனும்! வித்தியாசமின்றி அன்புடன் பழகியவர் அவர். ராஜாஜியிடம் நிலையான பக்தி கொண்டிருந்தார்.

ஆட்சி மொழி விஷயத்தில் தைரியமாகத் தமிழ் மக்களின் உணர்ச்சியை எடுத்துக் கூறும் தீரராக விளங்கினார்.

டாக்டர் சுப்பராயன் விளையாட்டரங்கில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். பல வருஷ காலம் இந்திய கிரிக்கெட் குழுவுக்குத் தலைவராகவும், மற்றும் பல பதவிகளிலும் இருந்து பணியாற்றியிருக்கிறார். இலக்கியத்திலே மிகுந்த ஈடுபாடு கொண்டவர் அவர். வளரும் தமிழ் இலக்கியத்தை ஆழ்ந்து கவனித்து வந்தார். பேராசிரியர் கல்கி அவர்களின் எழுத்திலும் கல்கி பத்திரிகையிலும் எப்போதும் அவருக்குத் தனியான ஈடுபாடு.

டாக்டர் சுப்பராயன் மறைவில் நாடு ஒரு நல்ல தலைவரை இழந்துவிட்டது!







செல்லும் வழியில்....

1. சென்ற செப்டம்பர் 26-ந் தேதியன்று லண்டன் செல்லும் வழியில் ஜினீவா விமான நிலையத்தில் ராஜாஜி சிறிது இளைப் பாறினர். அப்போது அங்குள்ள இந்திய தூதராலய முதல் காரியதரிசி ஸ்ரீ ஜாமனும், ஏர் இந்தியா ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஸ்ரீ வேங்கடராமன் தம்பதியும் அவரை வர வேற்றனர். ஸ்ரீமதி வேங்கடராமன் அன்புடன் கொண்டு வந்திருந்த உப்புமாவை ராஜாஜி ருசித்துச் சாப்பிட்டார்.

2. முதல் நாளிரவு பம்பாயிலிருந்து புறப் படும்போது விமான நிலயத்தில் ஸ்ரீ பிஜூ மோடியுடனும், மற்றும் பலருடனும் ராஜாஜி.


3. ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட், ஸ்ரீமதி மலானி, ஸ்ரீ பி. ராமராவ் ஆகியோருடன் அளவளாவுகிறார்.

4. சென்னையிலிருந்து பம்பாய் வரை சென்று ராஜாஜியை வழி அனுப்பிய கல்வி அதிபர் ஸ்ரீ சதாசிவம், தூதுகோஷ்டியின் இதர அங்கத்தினர்கள், பேரன்மார் ஆகியோ ருடன் ராஜாஜி.

5. காந்தி சமாதான கழகத்தின் தூது கோஷ்டியைச் சேர்ந்த ஸ்ரீ திவாகர், ராஜாஜி. ஸ்ரீ பி. சிவராவ்.

6. தூதுகோஷ்டியுடன் அமர்ந்திருப்பவர் பம்பாய் விமான நிலயத்தின் மானேஜர். ஸ்ரீ சதாசிவத்துக்கு இடப்புறம் நிற்பவர் ராஜாஜியுடன் அமெரிக்கா சென்றுள்ள டாக்டர் சத்தியநாராயணு.










ஊர் வம்பு



காந்தி ஜயந்தி வாரம் - சில தீர்மானங்கள்





கலை வழியே கடவுள் காட்சி

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பாரதக் கலைகள் யாவுமே தெய்வ தரிசனத்தைத்தான் குறிக்கோளாகக் கொண்டவை. எனினும் நடைமுறையில் சிற்பம், சித்திரம், இலக்கியம் இவற்றைவிட சாஸ்திரிய மான சங்கீதமொன்றே இன்றைக்கும் நம் நாட்டில் லௌகிகமாக இல்லாமல் ஈசுவர பரமாக இருக்கிறது. இந்திய ஏழிசை முறைகளுக்கும் மேனாட்டு இசைமுறைகளுக்குமுள்ள இந்த மாறுபாட்டை இளையாற்றங்குடி சதஸின் ஏழாவது தினப் பேரவையில் விளக்கினார் பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்கள்.

நமது இசை நயங்கள் உலகெங்கிலும் பரவியிருப்பதை அவர் விளக்கினார். ஸ்காட்லாந்தில் நம்முடைய மோகன ராகம் இருக்கிறதாம். சீனாவில் சுத்த சாவேரி இருக்கிறதாம். ஆஸ்திரியா நாட்டில் ஸிம்மேந்திர மத்தியமம் உள்ளதாம். இதேபோல நம் இசைக் கருவிகளிலும் பல வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளன. நான்மறைக் காலத்தில் வாசிக்கப்பட்ட கச்சபி வீணை இங்கே இப்போது மறைந்து விட்டாலும் பிலிப்பைன் நாட்டில் 'கட்பபி' என்று பெயர் பெற்று இன்றும் வாசிக்கப்படுவதாக அவர் கூறினார். இசையால் உலக மாந்தரை யெல்லாம் ஒன்றாக இசைக்கலாம் என்பதில் ஐயம் என்ன?

திருவாடானை அய்யாமணி சிவம் ''இந்த சதஸினால் நாங்கள் அடைந்த பயன்'' என்ற தலைப்பில் பேசினார். இவ்வளவு ஆகம பண்டிதர்களையும் ஒன்று சேர்த்து ஆகமங்களின் நிலையையும், அவைகளில் புத்தகமாக அச்சானவை, அச்சாகாதவை, கிடைக்கக் கூடியவை எவை என்று அறியவும், அவற்றில் உள்ள தத்துவங்களை அறியவும், சிவாசாரியார்களில் இத்துறையில் விஷயமறிந்தோர் யார் என்பதை யெல்லாம் தெரிந்து கொள்ளவும் நம் வாய்ப்பளித்த ஆசாரிய ஸ்வாமிகளின் பெரும் கருணைக்கு ஆஸ்திக சமூகம் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறது என்பதை அவர் புலப்படுத்தினார்.

அன்று காலை காரண ஆகம ஆராய்ச்சிக் கூட்டம் நடைபெற்றது. பிற்பகல் பேராசிரியர் சாம்பமூர்த்தி கோஷ்டியினர், தியாகையர் அவர்கள் இயற்றிய ''நௌகா சரித்திரம்'' என்ற நாடகத்தை இசையரங்காக நடத்தினர். 'வேத சிவாகமங்களின் ஒற்றுமை'' ''சக்தி பேதம்' இவை பற்றிப் பேச்சுக்கள் நடைபெற்றன. இரவு எட்டரை மணிக்குத் தில்லியிலிருந்து வந்திருந்த அமரேசுவர சாஸ்திரி கோஷ்டியினர் துளசி ராமாயணக் காலக்ஷேபம் நடத்தினார்கள்.

எட்டாம் நாள் காலை தந்திர ஆராய்ச்சிக் கூட்டம் நடைபெற்றது. திபேத்திய பிட்சுக்களும், அஸ்ஸாம் பூஜாரிகளும் தமிழக, கேரள தாந்த்ரீகர்களும் கலந்து கொண்டனர். திபேத் உள்பட பூஜாகிரமம், மந்திரங்கள், முத்திரைகள், பாவனைகள் யாவும் மிகப் பெரும்பாலும் ஒன்றாகவே, ஒரே அடிப்படையில் தோன்றியனவாகவே இருக்கின்றன. இந்த அருமைப்பாடுகளைத் திபேத்திலிருந்து தலாய்லாமாவின் பிரதிநிதிகளாக வந்திருந்த நவங் லேக்டன், துப்டன் லேக்ஷே என்ற இரு லாமாக்கள் எடுத்துக் கூறியதைக் கேட்கக் கேட்க மகிழ்ச்சியும், வியப்பும் ஒற்றுமை உணர்ச்சியும் ஓங்கின. அன்று பிற்பகலிலும் இவர்கள் உரை நிகழ்த்தினர். ஸ்வாமிகளின் ஆசியைப் பெறும் வாய்ப்புத் தங்களுக்குக் கிடைத்தது அரியதாகும் என்று இந்தப் புத்தமத குருமார் கூறியது அவர்களது விநயத்தையும், ஸ்ரீ பெரியவர்களின் ஞான விலாஸத்தையும் புலப்படுத்திற்று. திபேத்திய விஹாரங்களின் அமைப்பைக் கூறி, அதற்குத் தத்துவ ரீதியில் விளக்கமும் அளித்தனர் அவ்விரு லாமாக்கள். நமது ஆசாரிய ஸ்வாமிகள் நீண்ட நாள் வாழ்ந்திருக்கப் பிரார்த்தித்து அவர்கள் உரையை முடித்துக் கொண்டது உள்ளத்தைத் தொட்டது.

பிற்பகல் ''தந்த்ர சாஸ்திரம்'' பற்றிய உரைகளும் நடந்தன. அஸ்ஸாமியப் பண்புகளைப் பற்றி காமாக்யா ஆலய பூஜாரி பிரமதநாத் சர்மா விளக்கினார். இதிலிருந்து மந்திரம், தந்திரம், யந்திரம் இவற்றுக்குள்ள அடிப்படை ஒற்றுமையும் இவை யாவும் வேத நெறியில் தழைத்தனவே என்பதும் தெரியலாயிற்று. காமாக்ஷி தேவியின் ஆராதனை மகத்துவமும் காமகோடியில் நன்கு பிரகடனமாயிற்று. அஸ்ஸாம் தாந்திரிகர்கள் வேதசாக்தர்கள் என்றே அழைக்கப்படுவதாகவும் வேதப் பிரமாணங்களைத் தமது ஆராதனை முறைக்கு





கலைவிழாவில் பங்குகொண்ட ஸ்தபதிகள்.

ஆதாரமாகக் காட்டுவதாகவும், அக்னிஹோத்திரம் தாதாச்சாரியார் அவர்கள் கூறினார்.

அன்று இரவு எட்டு மணிக்குத் தாய்லாந்தைச் சேர்ந்த ஸ்ரீசதுராங் மணிசாரத் 'அரும நடனம்' புரிந்து, அவையோரை ஆச்சரியத்தில் ஆழ்த்தினர். அதன் பாவ முத்திரைகள் இந்திய நடனத்தை நினைவூட்டுவனவாக அமைந்திருந்தன. அதன் பிறகு மங்களூரைச் சேர்ந்த பாலகிருஷ்ண ராவ் கோஷ்டி யக்ஷகானம் என்ற முறையில் மகாபாரதத்தின் ஒரு பகுதியை நடித்துக் காட்டினர். வேடம் அணியாமலே கதையைச் சம்பாஷணை உருவில் உணர்ச்சியோடு பக்கவாத்தியங்களுடன் நடித்துக் காட்டினர். நமக்கு எழும் ஐயங்களை யெல்லாம் அவர்களே நடுநடுவே விவாதித்துத் தீர்த்தது புதுமையாயிருந்தது. மொழி புரியாவிட்டாலும், முறை பலருக்குப் பிடித்திருந்தது.

ஒன்பதாம் நாள் காலை திபேத்திய, அஸ்ஸாமிய வழிபாட்டு முறை பற்றி ஆராய்ச்சி நடந்தது. 'வேறுபடு சமயமெல்லாம் புகுந்து பார்க்கில், விளங்கு பரம்பொருளே, நின் விளையாட்டல்லால் மாறுபடும் கருத்தில்லை; முடிவில் மோனவாரிதியில் நதித் திரள்போல் வயங்கிற்றம்மா'' என்று தாயுமானவர் வியந்து மகிழ்வது எவ்வளவு உண்மை என்பது தெற்றென விளக்கமாயிற்று.

பிற்பகல் பஞ்சாப் சர்வகலாசாலை சம்ஸ்கிருதப் பேராசிரியர் டாக்டர் டி. என். சுக்லா கட்டிட நிர்மாணக் கலையாகிய 'வாஸ்து சாஸ்திரம்' பற்றி ஒரு கருத்துரை ஆற்றினர். இவ்விழாவில் பங்கு கொண்ட முக்கியஸ்தர்களில் ஒருவரான ஸ்ரீ கே. பாலசுப்ரமணிய அய்யரவர்கள் இந்த உரையைத் தமிழாக்கினர். சிற்பசாஸ்திரம், பொறி இயல், நகர நிர்மாண இயல், இவை எவ்வளவு நீண்ட காலமாக நம் நாட்டில் உயர் நிலையில் உள்ளன என்பது பற்றிய சுக்லாவின் உரை பெருமித மூட்டியது. சிற்ப சாஸ்திரம் அதர்வ வேதத்துக்குத் துணை நூல் என்றும், கட்டிட அமைப்பாலேயே பரதத்துவத்தை விளக்கும் முறை அது என்றும் அவர் கூறினர். அஸ்ஸாமில் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கூட்டு டைரக்டரான ஸ்ரீ ஜே. பி. சர்மா காமாக்கிய தத்துவம் பற்றிப் பேசினர்.

''கிழக்கு நாடுகளில் இந்தியப் பண்பாடு'' என்னும் பொருள் பற்றிப் படக் காட்சியோடு சர்வ தேச இந்தியப் பண்பாட்டுக் கழகத்தின் முதல்வர் டாக்டர் ரகுவீரா ஓர் அருமையான விரிவுரை ஆற்றினர். கொரியாவிலும், சீனாவிலும், மஞ்சூரியாவிலும், சைபீரியாவிலும் சம்ஸ்கிருதக் கல்வெட்டுக்களும், சம்ஸ்கிருதப் பெயர்கொண்ட இடங்களும் இருக்கின்றனவாம். உலக அதிசயங்களில் ஒன்றான சீனப் பெருஞ் சுவரில் 'ஓம் நமோ பகவதே' எனத் தொடங்கி 'ஓம் தத் ஸ்வாஹா' என முடியும் சம்ஸ்கிருதக் கல்வெட்டு உள்ளதாம். இந்தியரென்றாலே பக்தி செலுத்துபவர்கள் மங்கோலியாவில் இருக்கிறார்களாம். காரணம், இந்திய ஆசாரியர் இருவர் முந்நூறாண்டுகளுக்கு முன்பு மங்கோலியாவுக்குப் புனித கங்கா ஜலத்துடன் சென்று அந்நீரை மங்கோலிய நாட்டு நதிகளிலெல்லாம் கலந்திருப்பதேயாகும். வட கொரியா ஆராதனை முறையில் நமது

போலகம் ராமசாஸ்திரிகள், மண்டலிக வேங்கட சாஸ்திரி ஆகியோருடன் புதுப் பெரியவர்கள்; பாலகிருஷ்ண ராவ் கோஷ்டியின் யக்ஷகானம்.





சதஸில் கலந்து கொண்ட சிவாச்சாரியரும், குருக்கள்மாரும்.

மந்திரம், தியானம் இவை மட்டுமின்றிப் பூஜா ல் கூட இடம் பெற்றிருக்கிறதாம். திபேத்திலும் மஞ்சூரியாவிலும் ஆயுர்வேதமும் அநுசரிக்கப்பட்டிருக்கிறதாம். ருஷியாவின் கடைசி ஜார் மன்னனுக்குத் திபேத்திய வைத்தியர் இருவர் இந்திய ஆயுர்வேத சிகித்சையை அளித்திருக்கின்றனராம். அப்போது பயன்பட்ட ஆயுர்வேத நூல் இன்றும் லெனின் கிராட் மியூஸியத்தில் உள்ளதாம். மங்கமொழியில் 3000 வடமொழிச்சொற்கள் உள்ளனவாம்.

''இதையெல்லாம் எண்ணி இப்படிப் பெருமை பேசினால் போதாது. இன்று அந் நாடுகளில் இந்தியப் பண்பாட்டுச் சின்னங்கள் மங்கி வருகின்றன; சிற்பங்கள் அழிந்து வருகின்றன. இவற்றுக்குப் புத்துயிரூட்ட வேண்டும்'' என்றார் ரகுவீரா.

இரவு சென்னை ரமணமூர்த்திக் குழுவினர் 'தோல் பொம்மலாட்டம்' என்னும் நிழல் வண்ணக் காட்சி மூலம் சீதையை அநுமார் தேடும் பகுதியைச் சித்திரித்தனர். பிறகு கும்பகோணம் மணி அய்யர் குழுவினர் அரிச்சந்திர நாடகத்தைப் பாவைக் கூத்து மூலம் நடத்திக் காட்டினர்.


இருபத்திரண்டாம் தேதி — சதஸின் பத்தாம் நாள்—சிற்பக்கலை வல்லுநர் ஸ்ரீகௌரி சங்கர ஸ்தபதியும் மாமல்லபுரம் சிற்பப் பள்ளித் தலைவர் வை. கணபதி ஸ்தபதியும் பல்வேறு சிற்ப சாஸ்திரங்களைச் சபைக்கு அறிமுகம் செய்து உரையாற்றினர். இத் துறையில் உள்ள நூல்கள், அவற்றில் அச்சானவை, அச்சாகாதவை ஏட்டுப் பிரதிகள் இவைகளைப் பற்றியெல்லாம்பட்டியல்தயாரிக்கப்பெற்றது.

பிற்பகல் பேரவை கூடிற்று. சிற்ப சாஸ்திரம் என்பது பௌதிகம், கணிதம், மிருக இயல், வான சாஸ்திரம், ஜோதிஷம், மந்திரம், யந்திரம், நீதி நூல்கள், புராணம் ஆகிய யாவும் அடங்கியது என்று கௌரி சங்கரஸ்தபதி குறிப்பிட்டார். சம்பிரதாயத்திலிருந்து சிற்பிகள் பிறழ்ந்து கோவில் பணிகள் செய்தால் உற்பாதங்கள் நிகழ்வதாக எச்சரித்தார். திராவிட சிற்பம், நாகர (வட இந்திய) சிற்பம் இவற்றின் அடிப்படை ஒற்றுமை ஆராயப்பட்டது. சிற்ப நூல்கள் யாவற்றையும் தொகுப்பதில் ஆராய்ச்சி நடைபெற வேண்டுமென்று கணபதி ஸ்தபதி கூறினார். சிற்பக் கலைஞர்களை ஓரிடத்தில் கூட்டிய ஸ்ரீ பெரியவர்களுக்கு நன்றி கூறினார்.

''ஆசாரியாள் பாஷ்யங்களில் பாரதக் குறிப்புக்கள்'' என்பது பற்றி ஸ்ரீ ரகோத்தமாச்சார் பேசினார். ''தமிழ் நாட்டில் சிற்பக் கலைகள்'' என்னும் பொருள் பற்றி யாத்திரிகப் பிரமுகர் தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் விளக்க உரை ஆற்றினார். பின்னர், ''இந்திய ஆலயங்கள்'' என்னும் பொருள் பற்றித் தொல் பொருளியல் ஞானம்பவானாகிய டாக்டர் டி. என். ராமச்சந்திரன்அவர்கள் படக்காட்சியோடு அருமையான உரை நிகழ்த்தினார்.

இரவு மெலட்டூர் பாகவத மேளா நடைபெற்றது. தியாகையர் காலத்துக்கு முன் பிருந்த

சாத்தூர் டாக்டர் பிச்சக்குட்டியின் வில்லுப் பாட்டு.







திபெத்திய லாமாக்களான லேக்டனும், லேக்ஷேயும் மொழிபெயர்ப்பாளரும்.

நடனநாடகமாக நடைபெற்றுவரும் பழைமை யான இந்த நாட்டிய பாணியில் பிரகலாத சரித்திரம் நடிக்கப் பெற்றது.

பதினேராம் நாள் முற்பகல் சிற்ப ஆராய்ச்சிக் கூட்டம் தொடங்கிற்று.

பிற்பகல் ''கல்வெட்டில் மகாபாரதம்'' என்பது பற்றிக் கல்வெட்டுத்துறை ஆராய்ச்சி யாளர் ஸ்ரீ பி. ஆர். ஸ்ரீநிவாசனும், ''கல் வெட்டு உணர்த்தும் ஆலய வழிபாடு''பற்றி சென்னை மியூசியம் பரிபாலகர் ஆர். நாக சுவாமியும் ஆராய்ச்சியுரை ஆற்றினர்.

பின்னர் தாய்லாந்து தூதுவர் மேன்மை தங்கிய கலிச் நிர்மன் ஹேமிந்தா ''தாய் லாந்தின் பண்பாடும் ஆலயங்களும்'' என்னும் பொருள் பற்றிக் கருத்துச் செறிவும், கவர்ச்சி யும் மிக்க உரை ஆற்றினர். தாங்கள் பௌத்தர்களாயினும் பெயர், இலக்கியம், கட்டிட அமைப்பு, மொழி, நாகரிகம், ஆலய அமைப்பு, சடங்குகள், விழாக்கள் ஆகிய அனைத்திலும் ஹிந்து சம்பிரதாயமே தங்கள் வாழ்வில் செல்வாக்குப் பெற்றிருக்கிறது என்று அவர் கூறினர். தாய்லாந்தின் கோவில் அமைப்பு முறை முற்றிலும் இந்திய சிற்ப சாஸ்திரத்தைத் தழுவியதாக இருக்கிறது. ராமாயணம், பாரதம் முதலியவை கதைப் போக்கில் மாறுபட்டிருந்தாலும், தாய்லாந்து மக்களின் வாழ்வோடு அகற்ற முடியாதபடி பின்னிக் கிடக்கின்றன என்றார். தங்கள் இராமாயணத்தில் வருகிற அநுமானுக்கு மூன்று மனைவியர் உண்டு என்றும், இவ னுடைய குரங்குச் சேட்டையைக் கண்டு மனைவியர் கேலி செய்தமையால் அவன் இல்லறந் துறந்து, துறவியாய் ஏகினன் என் பதையும் கூறினர். மாணிக்கவாசகரின் திரு வெம்பாவை திரி எம்பாவை என்னும் பெயரில் இன்றும் தாய்லாந்தில் இருப்பதாக வும், திரியெம்பாவை விழா கொண்டா டப்படுவதாகவும், அது தமிழரின் திருவாதி ரைத் திருநாள்தானென்றும் கூறினர். தங்கள் மொழியில் நூற்றுக்கு முப்பந்தைந்துக்கு மேற்பட்ட சொற்கள் சமஸ்கிருதச் சொற்கள் என்பதை அவர் கூறியபோது நம்மிரு தேசங் களின் பண்பாட்டுறவு எவ்வளவு நெருக்க மானது என்பது தெரிந்தது. நெய், பவளம் போன்ற பல தமிழ்ச் சொற்களும் அதே பொருளில் அவர்கள் மொழியில் வழக்கி லிருப்பதாகவும் அவர் கூறினர். பேசும்படச் சுருள் மூலம் நம் நாட்டுத் தோற்றத்தையும், பழக்க வழக்கங்களையும் சபையோரும் கண்டு உணரச் செய்தார். இறுதியில், ''உங்கள் நாட்டுச் சம்பிரதாயங்கள், விழாக்கள் ஆகியவை பற்றி நீங்கள் மறந்து போய், அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டால் எங்கள் நாட்டுக்கு வந்து, பார்த்து, புரிந்து கொள்ளுங்கள்'' என்று அவர் கூறியபோது சபையில் பெருத்த மகிழ்ச்சியாரவாரம் ஏற்பட்டது. முடிவாகச் சொன்னர், ''தாய்லாந்து என்பது இந்தியா வின் சிறிய படிமமே'' என்று.

தாய்லாந்து சர்க்கார் தூதுவர் தாமே கலந்து கொண்டு உரை ஆற்றியது மகாநாட் டுக்கே சிகரம் வைத்தாற் போல் அமைந்தது.

இரவு 9.30 மணிக்குச் சாத்தூர் டாக்டர் பிச்சைக்குட்டி மண்சுமந்த பேரருளாளன் என்னும் திருவிளையாடற் கதையை வில்லுப் பாட்டாக இசைத்து, அவையோரின் பாராட் டையும், ஆசாரியப் பெருமானின் ஆசியையும் பெற்றார்.

இருபத்தி நான்காம் தேதி இந்த அற்புத மான கலைப் பெருவிழா பூர்த்தியுற்றது.



தில்லியைச் சேர்ந்த துர்க்கா பிரசாத் உபாத்யாயா, அமரேசுவர சாஸ்திரி, சா. கணேசன், டாக்டர் ரகுவீரா, தாய்லந்து தூதர் கலிச் நிர்மன் ஹேமிந்தா, கே. பாலசுப்பிரமணிய அய்யர், டாக்டர் டி. என். கக்லா ஆகியோர் சதஸில் பங்கு கொண்டனர்.

அன்று பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் சில:

மக்களுக்கிடையே மேலோன் – கீழோன், ஏழை – பணக்காரன் என்ற வேற்றுமையே இல்லாமல், எல்லோரும் ஒன்று கூடி வடம் பிடித்திழுக்கும் ரதோத்ஸவம் எல்லாக்கோயில்களிலும் நடைபெற வேண்டும்.

தற்போது வயோதிகராயிருக்கும் ஆகம பண்டிதர்களும் சிற்பிகளும் தம் பின் வாரிசுகளுக்கு இக்கலைகளைக் கற்பித்து, அவரவர் சம்பிரதாயம் அழிந்து விடாமல் காத்து வர வேண்டும். இத்துறையில் கற்கவிருக்கும் சிறுவர்களுக்குப் பாட முறைகளைத் தயாரித்து, பரீட்சைகள் வைத்து, தேர்வுப்பத்திரம் அளிக்க வேண்டும். இப்படித் தேர்வு பெற்றவர்கள் ஆயுட்காலம் முழுதும் சிரமமில்லாமலிருக்கும் படி அரசாங்கமும், பொது மக்களும், மடங்களும், கோயில் நிர்வாகிகளும் நிதிவசதி தர வேண்டும். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆகம, சிற்ப பாடங்கள் போதிக்கப்பட வேண்டும்.

இதுவரை அச்சாகாத ஆகம சிற்பச் சுவடிகளை அறநிலைய ஆணைக் குழுவும், ஆஸ்திக ஸ்தாபனங்களும் வெளியிட வேண்டும்.

எல்லாக் கிராமங்களிலும், கிராம தேவதை உத்ஸவங்களில், சம்பிரதாயமாய் உள்ள பம்பை வாத்தியத்துடன் பாரதப்ரவசனம் நடைபெற ஏற்பாடு செய்ய வேண்டும். மக்கள் விழாக்களை அழிந்து போகாமல் நடத்த வேண்டும்.


வருமானம் குறைவாக உள்ள கஷ்டப்படும் அர்ச்சகர்களுக்கு நிதி நிலைமை செழிப்பாக உள்ள கோயில்கள் உதவி அளிக்க வேண்டும்.

அற நிலைய போர்டில் ஸ்தபதிகளின் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் பொதுக் கட்டிடங்கள் கட்டப்படும் போது, அக்கட்டிடங்களில் இந்திய சிற்ப அம்சங்களுக்கு இடமளிக்க வேண்டும்.

கோயில்களில் புத்தகாலயங்கள் நிறுவி, அவற்றில் ஆகம, தந்திர, சிற்ப நூல்கள், ஸ்தல மாகாத்மியம், இதிகாச புராணங்கள், நாட்டு மொழிகளிலுள்ள பக்திப் பிரபந்தங்கள் ஆகியவற்றையும் நம் பண்பாடு வெளிநாடுகளில் பரவியதைப் பற்றிய ஆராய்ச்சி நூல்களையும் சேகரிக்க வேண்டும்.

கோயில்களில் மானசிகப் பூஜை, ஆவாஹனம் முதலியன செய்யப்படும் போது, சேவார்த்திகள் பத்து நிமிஷங்களாவது நிச்சப்தமாயிருந்து தியானம் செய்வதற்குக் கோயில் அதிகாரிகள் ஏற்பாடு செய்ய வேண்டும். (கிறிஸ்துவர்களோ, முகம்மதியர்களோ தமது மாதா கோயில்களிலும் மசூதிகளிலும் மக்கள் அமைதியாக இருக்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டுவர அவசிய முண்டோ?



சதுரங் மணிசாரத்தின் அநும நடனம்.

ஸ்ரீ மடத்து மானேஜர் சி. எஸ். விசுவநாத அய்யர், தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், ஆர்ஜெண்டினா பக்தை ஏஜினியா போர்கினி, டி. என். ராமச்சந்திரன், காமாக்ய பூஜாரி பிரமதநாத் சர்மா, அஸ்ஸாம் சமுதாய அபிவிருத்தி கூட்டு டைரக்டர் ஜே. பி. சர்மா.



இந்துக்கள் வெட்கி வேதனைப்பட வேண்டிய விஷயமல்லவா இது ?)

இதைவிட வேதனை தரும் விஷயம், நம் மரபுக்கு முரணாக நடிக நடிகையர் ஸ்பரிசித்துக் கொள்வதாகத் திரைப் படங்களில் காட்டலாகாது என்று ஒரு தீர்மானத்தின் மூலம் கேட்டுக் கொள்ள வேண்டியிருந்ததே யாகும். நமது பண்பாட்டை ஒரேயடியாகப் புறக்கணித்து விட்டுக் கலை 'முன்னேற்றத்தை'த் தேடும் அறியாமையை என்னென்பது?

சதஸ் நிறைவுற்ற அன்று அதில் கலந்து கொண்ட ஆகம பண்டிதர்கள், சிற்பிகள், பாகவதர்கள், பிரவசன கர்த்தாக்கள் இதர கலைஞர்கள், ஆகியோருக்கு ஸ்ரீ ஜகத்குரு, சம்மானங்களும் விருதுகளும் வழங்கினார்கள்.

அன்று அவர்கள் முடிவாக நிகழ்த்திய உரை சமய ஒற்றுமையை மக்களின் உள்ளத்தில் ஆழப் பதிய வைத்தது. 'ஒற்றுமைக்குள் உய்யவே நாடெல்லாம் ஒரு பெரும் செயல் செய்யும்' வித்தகரை யாவரும் உளமாரப் பணிந்தனர்.

சதஸின் ஓர் அங்கமாகக் கண்காட்சியும் நடைபெற்றது. இந்திய சரித்திரத்தின் பல்வேறு காலங்களைச் சேர்ந்த அற்புதமான வெண்கலச் சிலைகளும், சித்திரங்களும் இவற்றில் இடம் பெற்றிருந்தன. பல்லவர் காலத்துச் செப்பேடுகளும், குப்தர், சளுக்கியர், ராஷ்டிரகூடர், ஹொய்சலர் ஆகியோரது காலத்துத் தெய்வ வடிவுகளின் புகைப்படங்களும் பல பழைய விஷயங்களை மௌன பாஷையில் விளக்கிக் கூறின. சென்னை மியூஸியம், பாண்டிச்சேரியிலுள்ள இந்திய தத்துவ ஆராய்ச்சிக் கழகம், தென் இந்திய அர்ச்சக சங்கம் ஆகியன இக் கண்காட்சியில் முக்கியமாகப் பங்கு பற்றின.

ஆகம, சிற்ப, பாரத, வியாஸ வித்வத் சதஸில் கலந்து கொண்டவர்களில் மூவரை முக்கியமாகக் குறிப்பிட்டேயாக வேண்டும். அன்றன்று நடைபெற்ற விவாத முடிவுகளைக் கோவையாக்கி அழகுபட எடுத்துரைத்த பிரம்மஸ்ரீ அக்னி ஹோத்திரம் தாதாச்சாரியார் அவர்கள், பிறமொழிப் பேச்சாளர் பலரது உரைகளை தமிழ்ப் படுத்தியும், தமது சொந்த ஆராய்ச்சி முடிபுகளைக் கூறியும் உதவி புரிந்த டாக்டர் வே. ராகவன் அவர்கள், சதஸின் போது 'அங்கு இங்கு எனாதபடி எங்கும்' இருந்து ஓடியாடி அரும் பணி புரிந்த வரவேற்புக் குழுத் தலைவர் ஸ்ரீ சா. கணேசன் அவர்கள் ஆகியோரே இம் மூவர். அவர்களை ஆஸ்திக மக்களும் கலைப் பக்தர்களும் என்றும் வாழ்த்துவர். அயல் நாட்டுப் பிரதிநிதிகளை அழைப்பதில் உபகாரம் புரிந்ததோடு, சதஸுக்கு மான்யம் வழங்கிய அரசினரும் பாராட்டுக்குரியவர்களாவர்.



இந்நாடு மட்டுமின்றி உலகம் முழுவதுமே ஐக்கிய உணர்வு பெற சமயமும், சமயத் தோடிணைந்த கலைகளும் தான் உதவும் என்ற பேருண்மையை வெள்ளிடை மலையாக விளக்கி விட்டது இளையாற்றங்குடி சதஸ். இந்துக்களில் சைவம், வைஷ்ணவம், சாக்தம் ஆகிய பல மாறுபட்ட கோட்பாடுகளைத் தழுவுபவர்களும், பௌத்தர்களும், கிறிஸ்துவர்களும் ஒன்று கூடினர். வில்லுப் பாட்டு விருந்து சுகப்பிரம்மம் ஸ்ரீ ராமஸ்வாமியின் உபந்நியாசம்வரை யாவும் நடைபெற்றன. கரக ஆட்டக்காரர்களிலிருந்து வேதத்தை முத்திரையாலேயே விளக்கும் வித்துவான்கள் வரை யாவரும் ஒரு குடும்பமாக இணைந்து நின்றது மறக்கவொண்ணா நிகழ்ச்சியாகும்.

> **வணங்கும் துறைகள் பலபல ஆக்கி**
> **மதி விகற்பால்**
> **பிணங்கும் சமயம் பலபல ஆக்கி**
> **அவை அவை தோறு**
> **அணங்கும் பலபல ஆக்கி நின்மூர்த்தி**
> **பரப்பி வைத்தாய்**

என்று ஆழ்வார் பாடினார். அப்படிப் பிணங்கும் சமயம் யாவும் இணங்கி நிற்கும் அற்புதத்தை இளையாற்றங்குடியில் கண்டு விட்டோம். இதற்குக் காரணம் எந்நாட்டவர்க்கும் பொதுவான ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளின் சங்கல்ப விசேஷமும் சாந்நித்திய விசேஷமும்தான். திபேத்திய லாமாக்களும், அமெரிக்க ஸ்மித்தும், தாய்லந்து தூதுவரும் அவரிடம் ஈடுபடுகின்றனர். ஆர்ஜெண்டினாவில் வாழும் இத்தாலியப் பெண்மணி போர்கினி சுவாமிகளைக் கண்டு பக்தி செலுத்திய பின்தான் இயேசு கிறிஸ்துவின் எளிமையும், பெருமையும் புரிகிறது என்கிறார். எனவே இந்த யதி சிரேஷ்டர்களின் பேராதரவில் கடைபெற்ற பேரவையில் சமரஸம் ததும்பியதில் வியப்பென்ன ?

இளையாற்றங்குடி சதஸின் நிகழ்ச்சிகளும், முக்கியமாக அங்கு நிறைவேறிய தீர்மானங்களும் நம் நினைவில் நீங்காது நின்று நடைமுறைக்கு வழி காட்டவேண்டுமென்பதே நமது பிரார்த்தனை.




குதுகலமுள்ள
இடத்திற்கு
குதித்தோடுங்கள்!
8.95-10.50
7.95-11.95
இனிமையாக வீசும் காற்றினிடையே குஷியாகச்
சிரித்து மகிழ்ந்தவாறு காலம் கழியட்டும்.
எங்குபோக விரும்பினாலும் உங்களை அங்கு
இட்டுச்செல்ல ஓர் பாட்டா ஷூ இருக்கிறது.
நடந்து செல்லுகையில் அது மகிழ்ச்சியையும்
சுகத்தையும் கொடுப்பதுறுதி!
சித்ரா
9.95
13.50
12.95
14.95
24.95
Bata


"1901 வருடம் பிறந்த ஒருவருக்கு இப்பொழுது என்ன வயது?"
"பிறந்தவர் ஆணா,பெண்ணா!"
"ஏன் சார்! உமக்கு அடிக்கடி ஏதோ வியாதி வந்திண்டு இருந்ததே, போயிடுத்தா?"
"வியாதி போயிடுத்து; டாக்டர் தான் போக மாட்டேங்கிறார்."
நான் எப்பொழுதும் காப்பியில் ரொட்டியைத் தோய்த்துத் தான்...
சாப்பிடுவது வழக்கம்!
சரி! 'டை' யையும் ஏன் தோய்க்கிறீர்கள்!
ரோட் இன்ஜின் டிரைவர் தம் துணிகளுக்கு இஸ்திரி போடுகிறார்.
அவர் உடம்பில் சர்க்கரை ரொம்ப இருக்கு என்று டாக்டர் சொன்னார். அதனாலே எறும்புக்குப் பயந்து இப்படி உட்கார்ந்திருக்கிறார்!

நந்தவனம்

சோமு



41. மனமும் மணமும்

செண்பகநாயகி கோவிலுக்குச் செல்லும் போதே வில்வநாதனுடைய உள்ளத்தில் பல உணர்ச்சிகள் பொங்கிக் கொண்டிருந்தன. தாமரைச்செல்வியும் பொன்னுத்துரையும் திருமணக் கோலத்தில் நிற்கும்போது எடுத்த அந்தப் புகைப்படம் வில்வநாதனுடைய இதயத்தில் வேதனை உணர்ச்சிகளை எழுப்பியது.

பாவம்! சுந்தரிக்கு வில்வநாதனின் மனநிலை எப்படிப் புரியும்? செல்வியும் பொன்னுத்துரையும், சதிபதிகளாக நிற்பது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது என்றல்லவா சுந்தரி சொன்னாள்! அதை நினைக்க நினைக்க வில்வநாதனுக்குப் பல விசித்திரமான எண்ணங்கள் எழுந்தன.

அழகு என்பது கண்ணிலே இருக்கிறதா அல்லது பார்க்கிற காட்சியிலே இருக்கிறதா? அப்படியானால் ஒரே படம் சுந்தரியின் கண்களுக்கு ஒரு விதமாகவும் தன்னுடைய கண்களுக்கு வேறு விதமாகவும் தெரிவானேன்?

பொன்னுத்துரையும் செல்வியும் தம்பதிகளாக நிற்பது தனது மனத்தில் ஏன் ஒருவித ஆத்திரத்தை எழுப்ப வேண்டும்? அத்தனை தூரம் தனது பார்வையில் விகற்பம் ஏற்பட்டிருக்கிறதா?

இவ்வாறு எண்ண எண்ண வில்வநாதனுக்கு ஆத்திரம் சீறிக் கொண்டு வந்தது! சுந்தரிக்கு என்ன தெரியும்? சுந்தரிக்கு மட்டும் என்ன? வெளி உலகத்துக்குத் தாமரைச் செல்வியைப் பற்றியும் அவளுடைய உள்ளத்தின் அழகுணர்ச்சிகளைப் பற்றியும் என்ன தெரியும்? வெளி உலகம் புறத் தோற்றத்தை மட்டுமே பார்க்கிறது! செல்வி என்ற மனிதக் கூட்டுக்குள்ளே பொதிந்திருக்கும் மலர் போன்ற மெல்லிய இதயத்தை உலகம் அறியுமா? அப்படிப்பட்ட ஒரு மலருக்கு வாழ்க்கைத் துணையாக வாய்த்த அந்த ஒரு மனிதனுடைய இதயமோ? அதன் தன்மையை உலகம் எப்படி அறியும்?

சிங்கம்புத்தூர் மாளிகையும், அந்த மாளிகையிலே நடமாடுகிற விதம்

விதமான மனிதர்களின் மன இயல்புகளும், வில்வநாதனுடைய கற்பனையிலே வர்ணச் சக்கரமாகச் சுழன்றது! அவன் தனது உள்ளம் என்ற தராசில் தாமரைச் செல்வியின் இதயத்தையும் பொன்னுத்துரையின் இதயத்தையும் நிறை செய்து பார்த்தான். அவனுக்குக் கண் கலங்கிற்று!

சிறு வயதில் வில்வநாதன் படித்துள்ள ஒரு பழைய செய்யுள் அவனுக்கு நினைவு வந்தது. அவ்வையாருடைய பாடல் அது.

பிரமனுக்கு ஐந்து தலை இருந்ததாகவும், அதில் ஒன்று அறுபட்டுப் போனதாகவும் கதை. இன்னும் அறுபடாமல் நிற்கிற நான்கு தலைகளையும் பற்றித் திருகி விட மாட்டேனா என்று பாடுகிறார் அவ்வையார்! ஏன்? பொருத்தமில்லாத இருவரைக் கணவனும் மனைவியும் என்று ஒன்றாக முடி போடுகிறவன் பிரமன்தான்! அவன் விபரீதமாக இரண்டு மனித இதயங்களைச் சதிபதிகளாக இணைத்து விட்டான்! மான் போன்ற ஒரு பெண்ணுக்கு மரம் போன்ற ஒரு மனிதனைக் கணவனாக வகுத்துத் தலையிலே எழுதி விட்டான் அந்தப் பிரமன்! இந்த இணைப்பைக் கண்டு ஆற்றாமல் சீறி எழுகிறது அவ்வையின் கவியுள்ளம்:

> அற்றதலை போக
> அறாததலை நான்கினையும்
> பற்றித் திருகிப்
> பறியேனோ! — வற்றும்
> மரம்அனை யானுக்குஇந்த
> மானை வகுத்திட்ட
> பிரமனையான் காணப்
> பெறின்!

இப்படி மானையும் மரத்தையும் ஒன்று சேர்த்துச் சதிபதிகளாகத் தலையெழுத்து எழுதினானே, அந்தப் பிரமனை நான் காண நேர்ந்தால், அறுந்த ஒரு தலை போக மீதி நிற்கிற நான்கு தலைகளையும் அப்படியே பற்றித் திருகிப் பறித்து விடுவேன் என்று அவ்வையார் பாடினார்! செல்வியும் பொன்னுத்துரையும் போல எங்கோ ஒரு மண வீட்டில் பொருத்தமில்லாத சதிபதிகளைப் பார்த்து விட்டுத்தான் அவ்வையார் இப்படிப் பாடியிருக்க வேண்டும்! — என்று எண்ணினான் வில்வநாதன்!

இவ்வாறு எண்ண எண்ண வில்வநாதனுக்கு விரல்களில் ஒரு மின்சாரம் பாய்ந்தது. கண்களில் சிற்றக்கனல் தீப்பொறிகளைக் கொட்டியது.

''தம்பி! கடைசிச் சித்திரத்தை முடித்து விட்டு உடனே நீங்கள் இங்கிருந்து புறப்பட்டு விட வேண்டும். ஒரு விநாடிகூட இங்கே தாமதிக்கக் கூடாது. நீங்கள் வருகிற வரை நான் பக்கத்துக் குகையிலே காத்துக் கொண்டிருப்பேன்: விரைவில் சித்திரத்தை முடித்து விட்டு வாருங்கள்!'' என்றான் வேணு.

''நீங்கள் நினைக்கிறபடி அதிக நேரம் ஆகப் போவதில்லை!''

இவ்வாறு கூறினான் வில்வநாதன்!

''என்ன! கடைசிச் சித்திரத்தை எப்படி வரைவது என்று குழம்பிக் கொண்டேயிருந்தீர்களே! இப்போது இப்படிச் சொல்லுகிறீர்களே!'' என்று கேட்டான் வேணு.

''ஆமாம். ஒரு முடிவுக்கு வருவது வரைதான் குழப்பம் எல்லாம்! இனி எவ்விதமான குழப்பமுமில்லை. ஒரு வேகம் என்னைப் பற்றி ஆட்டிக் கொண்டிருக்கிறது. என் இதயத்தின் ஆவேசத்தை யெல்லாம் கொட்டி ஒரு வாழ்க்கைச் சித்திரம் வரைவது இதுதான் முதல் தடவை!''

இப்படிச் சொல்லும்போது வில்வநாதனின் விழிகளைக் கவனித்தான் வேணுலிங்கம். ஒரு கலைஞனுடைய படைப்பு வெறி, அந்த விழிகளிலே நெருப்பாக எரிந்து கொண்டிருந்தது. வேணுலிங்கம் எதுவும் மறுமொழி பேசவில்லை. இந்த வெறி எந்த விபரீதத்தில் கொண்டு போய் விடுமோ என்று ஒரு விநாடி தயங்கினான். ஆனாலும் அதிகமாக அதைப் பற்றி அவன் அலட்டிக் கொள்ளவில்லை.

''சரி; நீங்கள் சித்திரத்தை முடியுங்கள்! முடித்து விட்டுக் குகைக்கு வாருங்கள்!'' என்று சொல்லி விட்டு அங்கிருந்து நடந்தான் வேணுலிங்கம்!

வில்வநாதன் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை. அவன் வரைய முனைந்த அந்த இறுதி ஓவியத்தில் எவ்விதமான குழப்பமும் ஏற்படவில்லை. இறகை வர்ணத்திலே தோய்த்த மறு விநாடி வில்வநாதனுடைய உள்ளமும் அதிலிருந்து பொங்கிய ஆவேசமும் சுவரிலே வர்ண ஓவியமாகப் படிந்தன!

திருமணக் கோலத்திலே தாமரைச் செல்வி நிற்கிறாள். மான் போன்ற சாயல்! மானின் விழிகள்! மருண்ட அந்த விழிகளிலே ஏதோ ஒரு தீராத ஏக்கம்! உலகப் பெருங் கவிஞர்களின் காவியங்களுக்கெல்லாம் பொருளாக அமைந்த ஒரு தாபம், அந்த மான் விழிகளிலே மிதக்கிறது! அழகும் மென்மையும் ஒய்யாரமும் ஒன்று சேர்ந்து குலவி நின்ற அந்தப் பெண் மானுக்கு அருகிலே, ஒரு பனை மரத்தை நிறுத்தினான் ஓவியக் கலைஞன்! எதிரே நின்று அந்த மரத்துக்குத் தமது மகளைத் தாரை வார்க்கிறார் அனவரதபுவனபதி! இந்த ஓவியத்தின் பின்னணியிலே அவ்வையார் நிற்கிறார்! காலப் பாதையிலே

கோல் ஊன்றி நிற்கிறார், காலத்தை வென்ற கவிதைக் கிழவியான அவ்வை! இந்தச் சித்திரத்துக்கு அடியிலே அவ்வையாரின் பாடலை எழுதினான் விஸ்வநாதன்! இறகை அப்படியே கீழே எறிந்தான்! வெளியே வந்துவிட்டான் விஸ்வநாதன், தனது சித்திரப் பணியை முடித்துக் கொண்டு!

வாழ்வில் என்ன செய்கிறோம், எதற்காக இப்படிச் செய்கிறோம் என்றெல்லாம் எண்ணிப் பாராமல் உணர்ச்சியின் வேகத்திலே, இதயத்தின் ஆவேசத்திலே, கலையுள்ளம் செய்த மகத்தான தவறு அது என்று எண்ணி, அந்தச் செண்பக வனத்து மரங்கள் எல்லாம் துயரப் பெருமூச்சு விட்டன! அந்தச் செண்பகவனத்திலே உருண்டோடிய சிற்றோடைகள் எல்லாம் அந்தக் காட்சியைக் கண்டு பயந்து, வேகமாக ஓலமிட்டுக்கொண்டே ஓடின!

அப்போது சிங்கம்புத்தூரில் இந்த ஓவியத்தின் முக்கிய பாத்திரங்களான செல்வியும் பொன்னுத்துரையும் மாளிகையின் உப்பரிகையிலே நின்று தென்றல் காற்றை வியந்து கொண்டிருந்தனர்.

''செல்வி! செண்பகநாயகி கோவிலின் சுவர்களிலே புதிய வர்ணச் சாயங்களைப் பூசி அந்தக் கோவிலைப் புதுப்பிக்க வேண்டும் என்று நான் ஒரு காலத்தில் மாமாவிடம் சொன்னேனே, நினைவிருக்கிறதா? அப்போதெல்லாம் கலையையும் அதன் பெருமையையும் உணராமல் ஏதேதோ பைத்தியக்கார யோசனைகளைக் கூறினேன். இனி என்னுடைய வாழ்க்கையின் இலட்சியம் வேறு விதமாக இருக்கும்! உன்னுடைய கலையுள்ளத்தின் கனவுகளையெல்லாம் நனவாக்குவதை விட வேறு எந்த நோக்கமும் எனக்கு இனி இல்லை. நம்முடைய மாளிகை முழுவதும் அழகழகான சித்திரங்கள் திகழ வேண்டும்! நாம் உபயோகிக்கிற ஒவ்வொரு பொருளும் கலையழகோடு ஒளி வீச வேண்டும்!

''யானையேற்றமும் குதிரையேற்றமும் சாதாரண மக்களுக்குப் பொருத்தமாக இருக்கலாம். ஆனால் எனக்கு இனிமேல் அப்படியில்லை. கலைச் செல்வியின் கரங்களைப் பற்றிய கணவனுக்குக் கலையுள்ளம் உருவாக வேண்டும். இனிமேல் நானும் உன்னிடமிருந்து சித்திரக் கலையைப் படித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். எனக்கு அந்தக் கலை வருமா? சொல் செல்வி? சாட்டையைப் பிடித்த கையிலே இறகைக் கொடுப்பாயா நீ?''

இவ்வாறு கேட்டான் பொன்னுத்துரை! செல்வி இந்தக் கேள்விக்கு மறுமொழி கூறவில்லை. தன்னிடம் தனது கணவனுக்கு எத்தகைய அளவற்ற அன்பு இருக்கிறது என்பதை எண்ண எண்ண, அவளுடைய உள்ளத்தில் உருக்கம் உண்டாயிற்று! மாசற்ற அந்த வார்த்தைகளிலே கனிந்த கபடமற்ற அன்பு அவளுடைய கண்களிலே கண்ணீர் மல்கும்படி செய்தது.

"செல்வி! ஏன் உன் கண் கலங்குகிறது? நான் இவ்வாறு கேட்டது தவறு? சித்திரம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்பியது பிசகா? பிசகானால் அதை மறந்துவிடு....!"

இவ்வாறு சொன்னான் பொன்னுத்துரை. செல்வி கூறினாள்:

"பிசகில்லை. இத்தனை அன்பாக இருக்கிறீர்களே! இந்த அன்பையும் நான் ஒருகாலத்தில் மறந்திருந்தேனே என்று நினைத்தேன். அந்த நினைப்பிலே கண் கலங்கிற்று!" என்றாள் செல்வி!

பொன்னுத்துரை செல்வியின் கண்களைத் துடைத்தான். துடைத்துக் கொண்டே சொன்னான்:

"செல்வி! உண்மையிலேயே எனக்குச் சித்திரம் படிக்க வேண்டும் என்று ஒரு ஆசை புதிதாக உண்டாகியிருக்கிறது. கடந்த சில மாதங்களாகவே என்னுடைய முரட்டுத்தனமெல்லாம் எங்கோ பறந்து போய்விட்டது! என்னையும் அறியாமல் ஏதோ ஒருவிதமான உருக்கமும் ஒரு நெகிழ்ச்சியும் உண்டாகிவருகின்றன. எனக்கே புரியவில்லை இந்த மாறுதல்! உன்னை எண்ணி எண்ணி என் மனசிலே ஒருவிதமான மாறுதல் ஏற்பட்டு விட்டது! இதயமும் இதயமும் மன உலகிலே ஒன்றோடொன்று இணையும் போது இப்படியெல்லாம் மாறுதல் ஏற்படும் போல் இருக்கிறது! சில மாதங்களுக்கு முன்பு இந்தமாதிரி யெல்லாம் பேசுவதற்கே என்னால் முடிந்திராது! புதிய கனவுகள், புதிய நினைப்புக்கள், புதிய புதிய வார்த்தைகள் புதிது புதிதாக வந்து கொண்டேயிருக்கின்றன! நீ என்னிடம் அன்பு செலுத்த ஆரம்பித்த அந்த வினாடியிலிருந்து, உன் உள்ளத்திலிருந்து ஒரு மின்சாரம் புறப்பட்டு வந்து என் உள்ளத்தை இயக்க ஆரம்பித்து விட்டது! இந்த மாறுதல்கள் யெல்லாம் அந்த மின்சார இயக்கத்தின் ஆற்றலினால் நேர்ந்த விளைவுதான்! ஆமாம்!"

"அத்தான்! நீங்கள் பேசுகிற வார்த்தைகள் எல்லாம் என்னுடைய அன்பினால் நேர்ந்த மாறுதல் என்று சொல்லுகிறீர்கள். ஆனால் உங்களுடைய அன்பு மொழிகள் என் இதயத்தில் எத்தகைய மாறுதலை உண்டாக்கி யிருக்கின்றன

என்பது உங்களுக்குத் தெரியுமா? அத்தான்! சித்திரமும் சிற்பமுமே வாழ்வின் பெரிய இலட்சியங்கள் என்று ஒரு காலத்தில் நான் கருதினேன். அது உண்மைதான். ஆனால் உங்களுடைய அன்பையும் அதன் ஆழத்தையும் பார்த்த பிறகு, அந்தக் கலைப் படைப்புகள் எல்லாம் ஒரு பொருட்டாகவே தோன்றவில்லை எனக்கு! மனித இதயத்தின் அன்புதான் எல்லாவற்றையும் விட உயர்ந்தது. கற்பனைகளையும், மனத்தின் படைப்புக்களையும், எல்லாவற்றையும் விட உயர்ந்தது அன்புதான்! மாசற்ற உள்ளத்தின் அன்புக்கு எதிரிலே வேறு எதுவும் நிகராக நிற்க முடியாது! இந்த உண்மையைக் கடந்த சில மாதங்களாக நான் நன்றாக உணர்ந்து வருகிறேன். இந்த உணர்வு ஏற்பட்ட வினாடியிலிருந்து நான் இறகை எறிந்து விட்டேன். வர்ணங்களைக் கொட்டி விட்டேன். நம்முடைய புண்ணியத் தமிழ் நாட்டிலே எத்தனையோ பல தலைமுறைகளாக வழங்கி வருகிற பெண்மைக் குலத்தின் இலட்சியத்தையும், அதற்கு அடிப்படையாக அமைந்துள்ள சீலத்தையும் நன்றாக இப்போது உணர்கிறேன்!'' என்றாள் செல்வி.

பொன்னுத்துரையின் உள்ளத்தில் அந்த மொழிகள் பரவசம் தந்தன. செல்வியின் நீண்ட கூந்தலை வருடிக் கொண்டே அவன் கேட்டான்:—

''செல்வி! உன்னுடைய அன்பை அடையக்கூடிய ஒரு பாக்கியம் எனக்கு என்றாவது ஒரு நாள் ஏற்படுமா என்று தான் எத்தனை நாட்கள் தவித்திருக்கிறேன் தெரியுமா? உண்மையில் அந்த அன்பை அடைவதற்காக என்னை நான் எப்படியெல்லாம் மாற்றிக் கொள்வது என்றும், உன்னுடைய மன இயல்புக்குத் தக்கபடி நான் என்னை உருவாக்கிக் கொள்வது எப்படி என்றும், எத்தனை விதமாக வெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கியிருக்கிறேன் தெரியுமா? அதனால் தான் சித்திரம் கற்றுக் கொள்ளவேண்டும் என்ற விசித்திர ஆசை கூட என் உள்ளத்தில் அரும்ப ஆரம்பித்தது!''

''உண்மை! அது எனக்கு நன்றாகப் புரிகிறது! ஆனால் சித்திரமும் சிற்பமும் இப்பொழுது எனக்கு வேம்பாகக் கசக்கின்றன. ஒரு பெண்ணுக்கு மற்ற எல்லாவற்றையும் விட மேலானது அவளுடைய கணவனுக்காக அவள் செய்கிற தியாகந்தான்! உற்றார் உறவினர்களையெல்லாம் மறந்து, தனது பிறந்த வீடு, தனது பெற்றோர்கள் ஆகிய எல்லாச் சூழ்நிலையையும் துறந்து, தன்னையும் தனது உடைமைகள் அனைத்தையும் ஒரு பெண் ஒரு ஆடவனிடம் ஒப்படைக்கிறாளே, அந்த மகத்தான சரணாகதியில் தான் மேலானதொரு இன்பம் இருக்கிறது. அந்த இன்பத்தை உணர்வதற்கு ஒரு பெண்ணால்தான் முடியும். இந்தப் புண்ணியத் தமிழ் நாட்டின் பண்பாடு அது!''

இப்படிச் சொல்லும்போது இதய நெகிழ்ச்சியினால் தாமரைச் செல்வியின் விழிகள் கலங்கின.


பொன்னுத்துரை அவளுக்கு அருகிலே வந்து நின்று அவளுடைய மலர்க் கரங்களைப் பற்றினான்.

மாளிகையின் உப்பரிகையிலே புதிய தம்பதிகள் இப்படி இதய நேயத்திலே தங்களை உறவாக்கி நின்ற போது,— அரண்மனை வாசலிலே 'கோச்' வண்டி குதிரை பூட்டி நின்றது.

''வள்ளானா! நான் செண்பகவனத்துக்குப் போய் விட்டு வருகிறேன். சித்திர வேலைகள் எல்லாம் மிகவும் அருமையான முறையில் பூர்த்தியாகி விட்டன என்று கேள்விப்படுகிறேன். நீண்ட நாட்களாக அந்தப் பக்கமே போகாமல் இருந்து விட்டேன் நான்! நீ இங்கே வக்கீலையா வந்தால் அவர்களை இன்று இங்கேயே தங்கியிருக்கும்படி சொல்லு. நாளை அல்லது மறுநாள் வக்கீலும் நானும் சென்னைக்குப் போகும்படி நேரலாம். அதனால் இன்றைக்கே நான் வனத்துக்குப் போய்ச் சித்திரங்களையெல்லாம் பார்த்துவிட்டு வருகிறேன்!''

இவ்வாறு கூறிவிட்டு மறுமொழிக்குக் காத்திராமல் வண்டியிலே ஏறினார் ஜமீந்தார்.

(தொடரும்)



காயர் போர்டின் அங்கீகாரம்பெற்ற டீலர்கள்

● இ கொச்சின் சென்ட்ரல் கோவாப்ரேடிவ் காயர் மார்க்கெட்டிங் சொஸைடி லிமிடெட், நெ. 423, 16/17, சென்ட்ரல் அவென்யூ, காந்திபாக், நாகபுரி-2 ● இ ஹைதராபாத் கோவாப்ரேடிவ் சென்ட்ரல் டிரேடிங் சொஸைடி லிமிடெட், 5.8.655, ஸ்டேஷன் ரோடு, ஹைதராபாத் ● இ கொச்சின் சென்ட்ரல் கோவாப்ரேடிவ் ஹாண்டிகிராப்ட்ஸ் சொஸைடி லிட்., நெ. 11,231, பிராஞ்ச் தர்பார் ஹால் ரோடு, எர்ணாகுளம் ● மெஸர்ஸ் ஸ்ரீ ராமா கார்ப்பொரேஷன், எலூரு ரோடு, விஜயவாடா-2 ● மெஸர்ஸ் எஸ். கோடர், தபால் பெட்டி 7, திருவனந்தபுரம்

பேலூர் சென்னக் கேசவர்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

தமிழ்நாட்டில் சமயக் குரவர்களில் ஒருவரான ஞானசம்பந்தர் கதை பிரசித்தமானது. அதிலும் அவர் மதுரை சென்று சமணர்களை வென்று சமண மதத்திலிருந்த பாண்டிய மன்னனைச் சைவனாக்கியதை நன்கு அறிந்திருக்கிறோம். கதை இதுதான்: பாண்டிய மன்னனான மாறவர்மன் சமணனாக இருக்கிறான். அரசன் எவ்வழி அவ்வழி குடிகளும் என்பதொப்ப, குடிமக்களும் சமண மதத்தையே தழுவி நிற்கின்றனர். அதனால் ஆலவாய் அரன் கோயிலில் பூசை புனஸ்காரங்கள் குறைகின்றன. சைவம் தலைதூக்காது தாழ்ந்து கிடக்கிறது. எனினும் மன்னன் மனைவியாம் பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியும், மந்திரி குலச்சிறையாரும் சிவனடி மறவாச் சிந்தையராக வாழ்கிறார்கள். அவர்கள் வேண்டிக் கொண்டபடியே ஞானசம்பந்தரும் பாண்டி நாட்டுக்கு வருகிறார். ஞானசம்பந்தர் வருகையை அறிந்த சமணர்கள் அவர் இருந்த இடத்துக்கே தீ வைக்கின்றனர். அப்படி அவர்கள் வைத்த தீயை 'பையவே சென்று பாண்டியர்க்காகுக' என்று பணிக்கிறார் சம்பந்தர். பாண்டிய மன்னன் வெப்பு நோயால் வாடுகின்றான். அவன் நோய் தீர்க்கச் சமணர்கள் விரைகிறார்கள். அவர்களது மருத்துவத்தால் மன்னனது வெப்பு நோய் நீங்கவில்லை. மங்கையர்க்கரசியின் அழைப்பின் பேரில் ஞானசம்பந்தர் வருகிறார். 'மந்திரமாவது நீறு' என்று பாடி மன்னன் உடம்பில் திருநீறு பூசுகிறார். மன்னனது நோய் நீங்குகிறது. அதன் பின் நடந்த அனல் வாதம், புனல்வாதங்களிலும் சம்பந்தரே ஜயிக்கிறார். மன்னன் சமண மதத்தை உதறிவிட்டுச் சைவனாகிறான். இவ்வரலாற்றைச் சேக்கிழார் அவர் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தில் விரிவாக உரைக்கிறார். இதே முறையிலே சமணனான ஹொய்சல மன்னன் பிட்டிதேவராயனை வைஷ்ணவனாக்கிய பெருமை ராமானுஜரைச் சாரும். அன்று ஹொய்சல மன்னனாக இருந்த பிட்டிதேவராயன் சமணனாக இருந்திருக்கிறான். ஆனால் அவன் மனைவியோ விஷ்ணுபக்தையாக இருந்திருக்கிறாள். இவர்களது ஒரே மகளை ஏதோ ஒரு பேய் பிடித்து ஆட்டுகிறது. இந்தப் பேயை ஓட்டச் சமண முனிவர்களை முதலில் அணுகியிருக்கிறான் மன்னன். அவர்களால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. இந்த நிலையில் சோழ நாட்டிலிருந்து அங்கு வந்து தங்கியிருந்த ராமானுஜரை அழைக்க விரும்பியிருக்கிறாள் அரசனது மனைவி. அவர் வந்திருக்கிறார். மன்னன் மகள் பூரண சுகம் பெற்றிருக்கிறாள். அவ்வளவுதான்; பிட்டிதேவராயன் சமணனாயிருந்தவன் வைஷ்ணவனாகிறான். வைஷ்ணவத்தைத் தழுவிய இந்த ஹொய்சல மன்னனுக்கு விஷ்ணுவர்த்தனன் என்றே புதிய பெயரைச் சூட்டியிருக்கிறார். இப்படி வைஷ்ணவனாக மாறிய ஹொய்சல மன்னன் ராமானுஜர் விருப்பப்படி விஷ்ணு கோயில்கள் பல கட்டியிருக்கிறான். அப்படிக் கட்டிய கோயில்களிலெல்லாம் சிறப்புடையதும் கலைப்பிரசித்தி உடையதுமான கோயில்தான் பேலூரில் உள்ள சென்னக் கேசவர் கோயில். அந்தச் சென்னக்கேசவர் கோயிலுக்கே செல்கிறோம் நாம் இன்று. இக்கோயில் 1117-ம் ஆண்டில் கட்டப்பட்டது என்று சரித்திர ஏடுகள் பேசுகின்றன.

பேலூர் மைசூர் ராஜ்யத்தில் ஹாஸன் ஜில்லாவில் இருக்கிறது. ரயிலில் செல்பவர்கள் மைசூர் அரிசிக்கரை லயனில் ஹாஸன் ஸ்டேஷனில் இறங்கிச் செல்ல வேண்டும். அங்கிருந்து பஸ்ஸிலோ, காரிலோ இருபத்தைந்து மைல் வடமேற்கே சென்றால் பேலூர் வந்து சேரலாம். இல்லை, நேரே மைசூரிலிருந்து காரிலேயே செல்வதானால் நூறு மைல் செல்ல வேண்டும். காரிலே சென்றால் சென்னக்கேசவர் கோயில் வாசலிலேயே போய் இறங்கலாம்.

இக்கோயிலைச் சுற்றி நல்ல மதில் கட்டியிருக்கிறார்கள். இந்த மதில் 445 அடி நீளமும் 396 அடி அகலமும் உள்ளது என்றால் கோயில் பிராகாரம் எத்தனை பெரிதாக இருக்க வேண்டும் என்று கற்பனை பண்ணிக் கொள்ளலாம்தானே. இந்தக் கோயிலுக்கு மூன்று வாயில்கள் இருக்கின்றன. தென்புறம் இருப்பது வெள்ளிக்கிழமை வாயில் என்பர். வடபுறம் இருப்பது தெய்வீக வாசல் என்பர். இக்கோயிலின் பிரதான வாயில் கிழக்கு நோக்கியதுதான். அந்த வாயிலே மகாத்வாரம் என்ற பெயரோடு ஓர் உயர்ந்த கோபுரத்தையும் ஏந்தி நிற்கிறது. இந்தக் கிழக்கு மதில்சுவரிலே இன்னும் ஒரு வாசல் உண்டு. அதனை ஆனே பாகிலு என்கின்றனர். இந்த வாயிலிலேயே மன்மதன் ரதி சிற்பங்கள் அழகாக இருக்கின்றன. இன்னும் மகாபாரதம் ராமாயணம் முதலிய இதிகாசக் காட்சிகளும் செதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த வாயிலைக் கடந்து வெளிப்பிராகாரத்தில் நுழைந்து அங்கு சென்னக் கேசவரை எதிர்நோக்கி நிற்கும் கருடனையும் வணங்கியபின்பே கோயிலுள் செல்ல வேணும். இங்குள்ள பிரதான கோயில் 178 அடி நீளமும் 156 அடி அகலமும் உள்ள ஓர் உயர்ந்த பீடத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இந்தப் பீடம் தஞ்சை ஜில்லாவில் உள்ள மாடக் கோயில்களைப் போல மிகவும் உயர்ந்ததாயிராது.

இக்கோயிலைக் கட்டிய விஷ்ணுவர்த்தனன் தன் ராஜ்யத்தில் ஐந்து இடங்களில் விஷ்ணுவுக்குக் கோயில்கள் கட்டி அங்கு பஞ்சநாராயணனைப் பிரதிஷ்டை செய்திருக்கிறான். பேலூரைத் தவிர, தலக்காடு, மேல்கோட்டை

தொன்று. கடக் என்ற தலங்களிலும் இவன் பிரதிஷ்டை செய்த நாராயணர் இருக்கின்றனர் என்று வரலாறு கூறுகிறது. இந்தக் கோயிலுள் சென்று அங்கு மூல மூர்த்தியாக இருக்கும் சென்னக் கேசவரை வணங்குமுன் கோயிலை ஒரு சுற்றுச் சுற்றி வரவேண்டும் என்று தோன்றும். கோயிலின் சுவரெல்லாம் ஒரே சிற்ப வடிவங்களின் மயம் தான். அச்சுவரில் ஏழு எட்டு வரிசை வரிசையாகச் சிற்ப வடிவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. அடியில் உள்ள வரிசையில் யானைகள் ஒன்றையொன்று துரத்தி ஓடிக் கொண்டிருக்கும். இன்னும் இலைக்கொடிகளும் நடனங்களும் சிறிய அளவிலும் பெரிய அளவிலும் சுவர் முழுதும் நிறைந்திருக்கும். இன்னும் இந்தச் சுவர்களிலேயே ஹரிஹரன். இவனது மூர்த்தங்கள், பரசுராமன், வாமனன், சூரிய நாராயணன், மஹிஷமர்த்தினி, அர்ச்சுனன் முதலியோரது வடிவங்கள் நிறைந்திருக்கும். இங்கிருப்பவைகளில் சிறப்பாயிருப்பவை யெல்லாம் பெண்மையின் வடிவங்களே. கிட்டத்தட்ட நாற்பது பெண்கள் இருக்கின்றனர். இவர்களில் சிலரே தெய்வ அம்சம் பெற்றவர்கள். மற்றவர்கள் எல்லாம் சாதாரணப் பெண்களே என்றாலும் எல்லோரும் அழகிய பெண்கள். பொட்டிடும் நங்கை, கிளி ஏந்திய பெண், ஆடையில் தேள் ஒன்று இருக்கிறது என்று தெரிந்து ஆடையை உதறி விடும் மங்கை, காதலன் வரவை எதிர் நோக்கி நிற்கும் வகையில் எண்ணிறந்த பெண்கள் எழில் ஓவியங்களாக நிற்கின்றனர். எல்லாம் நல்ல நடனக் கோலத்தில் தான். இந்த வடிவங்களையே மதனிகை வடிவங்கள் என்கின்றனர். இச்சிற்ப வடிவங்களிலுள்ள நுணுக்க வேலைப்பாடுகளைப் பார்த்து இப்படி எல்லாமா கல்லில் செய்ய முடிந்திருக்கிறது. ஏதோ மெழுகில் செய்து அமைத்திருக்க வேண்டும் என்றுதான் தோன்றும். நிரம்பச் சொல்வானேன்? ஒவ்வொரு வடிவமும் ஒரு கவிதை தான். ரஸிகமணி அவர்கள் சொல்வார்களே, கவிதைக்கு விஷயம் முக்கியமல்ல, வடிவம் தான் முக்கியம் என்று. அந்த வடிவத்தையே அல்லவா அற்புதமாக வடித்திருக்கிறார்கள் சிற்பிகள். இந்தச் சுவரில் உள்ள வடிவங்களைப் பார்த்துக் கொண்டே யிருந்தால், கோயிலைச் சுற்றிச் சுற்றி வரச் சொல்லுமே தவிர உள்ளே செல்லவோ அல்லது வெளியே வரவோ தோன்றாது. அப்படியே இருந்து விட முடியுமா நம்மால்.

சரி என்று மனத்தைக் கடிவாளம் போட்டு இழுத்து நம் வசப்படுத்திக் கொண்டு கோயிலுள் நுழையலாம். கோயிலுள் முதலில் இருப்பது நவரங்க மண்டபம். அடடே! இது என்ன? இங்கு மண்டபத்தைத் தாங்கி நிற்கும் தூண்கள் ஒவ்வொன்றுமே அற்புத வேலைப் பாடு அமைந்ததாக அல்லவா இருக்கிறது! இவைகளில் சிறப்பாக நிற்பது இரண்டு தூண்கள். ஒன்று நரசிம்ம வடிவம் தாங்கியது; இன்னொன்று மோகினி வடிவம் தாங்கியது. இன்னும் ஒரு கடலை அளவேயுள்ள இடத்தில் ஒரு நந்தியையும் செதுக்கி யிருக்கிறான் சிற்பி. சிற்றுளி நயம் எல்லாம் சிறிய வடிவிலேயும் காட்டலாம் என்று காட்டுகிறான் அவன் நமக்கு. இந்த நந்தியையே 'கடலை பசவன்' என்கிறார்கள். தூண்களைக் கொஞ்சம் மறந்து மேலே பார்த்தால் எண்கோண வடிவத்தில் ஒரு விதானம். பத்தடி குறுக்களவும் ஆறு அடி ஆழமும் உள்ளதாக இருக்கும். இந்த விதானத்துக்கும் தூண்களுக்கும் இடையில் ஒவ்வொரு பெண்ணின் வடிவம். இவை நல்ல சாத்திரமான வடிவங்கள். இந்த மதனிகை வடிவங்களும் அற்புதமான அழகு வாய்ந்தவை. இவைகளில் ஒன்றே நடன சரஸ்வதி. இந்த வடிவங்களை அமைப்பதில் மிகுந்த அக்கறை எடுத்திருக்கிறான் சிற்பி என்பதை வடிவங்களைப் பார்த்தாலே தெரியும். இன்னும் இப்படிப்பட்ட மதனிகை சிற்ப வடிவங்கள், மற்ற ஹொய்சள கோயில்களான சோமநாதபுரிலோ ஹலபீடிலோ இல்லை என்பதும் இவ் வடிவங்களுக்கு ஒரு பெருமை தருவதாக இருக்கும்.



கோயில் வாயிலில் கருடன்

'இப்படி சிற்ப வடிவங்களிலேயுள்ள பெண்களையே பார்த்துக் கொண்டிருந்தால் போதுமா? கோயிலுக்குள் சென்று சென்னக் கேசவரைத் தரிசனம் செய்ய வேண்டாமா?' என்று நீங்கள் முணுமுணுப்பது என் காதில் கேட்கிறது. சரி! இனி கருவறையை நோக்கியே நகருவோம். கருவறைக்கு முன்னேயுள்ள அந்தராளத்தை இங்குள்ள கோயில்களில்

சுகராசி என்கின்றனர். இந்தச் சுகராசியின் வாசலில் இரண்டு துவாரபாலகர்கள். நல்ல கம்பீரமான வடிவங்கள். அவர்களைப் பார்த்தால் 'காணிக்கை என்ன கொணர்ந்திருக்கிறாய்?' என்று கேட்பவர் போலத் தோன்றும். நான் என்ன கொணர? என் அன்பைத்தான் காணிக்கையாகக் கொணர்ந்திருக்கிறேன்' என்று கூறிக் கொண்டே கருவறை வாயில் வந்து சேரலாம். அங்கிருந்து மூல மூர்த்தியான சென்னக் கேசவரைத் தரிசிக்கலாம். இவரையே விஜய நாராயணன் என்கிறார்கள். ஆறடி உயரத்தில் உள்ள இவரைக் கண்டதும் 'அழகுள்ள துரை இவர் ஆறடி' என்று பாடத் தோன்றும். ஒரு பெரிய பீடத்தில் கம்பீரமாக ஏறி நிற்கிறான். சங்கு சக்கரம் ஏந்திய கையராய் இருப்பதோடு தாமரையையும் கதையையும் ஏந்தியவராய் நிற்கிறார். இவரைச் சுற்றியிருக்கும் பிரபா வழியிலே அவரது தசாவதார வடிவங்களையும் சிற்பி செதுக்கி அமைத்திருப்பது கூர்ந்து கவனிக்கத் தக்கது. முகத்திலே கருணை ததும்பும் இந்தக் கேசவனை வணங்கியபின் நாம் அவன் அடியார்க்கு அடியராய் ஆகி விடுவோம். இந்தக் கேசவன் ஆழ்வார்களால் மங்களா சாஸனம் செய்யப் பெறும் பாக்கியம் பெற்றவன் அல்ல; அவன் ஆழ்வார்களுக்குப் பிற்பட்டவன் ஆன காரணத்தால். ஆனால் கேசவன் தமராகிய நம்மை மங்களா சாஸனம் செய்திருக்கிறார் வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன்.




வேணுகோபாலன்

கண்ணித் தண்ணந்துழாய் முடி
கமலத் தடம் பெருங்
கண்ணனைப் புகழ்நண்ணித் தென்குருகூர்
சடகோபன் மாறன் சொன்ன
எண்ணில் சோர்வில் அந்தாதி ஆயிரத்துள்
இவையும் ஓர்பத்து இசையோடும்
பண்ணில் பாடவல்லார் அவர்
கேசவன் தமரே.

என்ற நம்மாழ்வார் பாசுரம், கேசவனை வணங்கிய நம்மைத்தானே மங்களா சாஸனம் செய்கின்றது.

இந்தக் கேசவனை வணங்கி விட்டு வெளியே வந்தால் திரும்பவும் கோயிலை ஒரு சுற்றுச் சுற்றவும், சுவரிலுள்ள மதனிகைகளை மறுபடியும் ஒரு முறை கண்டு மகிழவும் நம் மனம் விரும்பும். சரி என்று சுற்றினால், கோயில் பிராகாரத்தில் இன்னும் இரண்டு மூன்று கோயில்கள் இருப்பது தெரியும். இவைகளில் தென்கிழக்கு மூலையில் இருப்பது கப்பே சென்னகராயர் கோயில்; மேல் பக்கம் இருப்பது வீர நாராயணன் கோயில், ஆண்டாள் கோயில்கள். கப்பே சென்னகராயர் கோயில் இரண்டு கருவறை யுடையது. ஒன்றில் சென்னக ராயரும், மற்றொன்றில் வேணு கோபாலனும் இருக்கிறார்கள். இந்தக் கோயிலிலும் நிறைய சிற்ப வடிவங்கள் உண்டு. அவைகளில் சிறப்பா யிருப்பது லட்சுமி நாராயணன், சரஸ்வதி, விநாயகர், மஹிஷமர்த்தினி முதலியோர்தாம். சென்னகராயரைப் பிரதிஷ்டை செய்தவன், விஷ்ணுவர்த்தனனது பட்டமகிஷியான சாந்தலை தேவி. இப்பட்டமகிஷியே சிறந்த ஒரு சங்கீத வித்வாஷியாகவும் இருந்திருக்கிறாள் என்று இங்குள்ள கல்வெட்டு ஒன்று கூறுகிறது. சரிதான் இக்கோயில் ஓர் அரிய கலைக் கோயிலாக விளங்குவதற்குக் காரணம் இப்போதல்லவா தெரிகிறது. — விஷ்ணு வர்த்தனன் — ராமானுஜரால் — விஷ்ணுவினிடம் அத்தியந்த பிரீதி உடையவனுனான். அவனது துணைவியோ கலைகளில் வல்லவளாக இருக்கிறாள். இருவரும் சேர்ந்து அமைத்த சென்னக்கேசவர் கோயில் கலைக்கோயிலாக உருவாகாமல் வேறு எப்படி உருவாக முடியும்? கப்பே சென்னகராயர் கோயிலுக்கு எதிரேயுள்ள ஒரு கல் ஸ்தம்பத்தில் இரண்டு வடிவங்கள்: தலையில் பரம பாகவதர்கள் அணியும் குல்லாய் ஒன்று தரித்து, முழங்கால் வரையில் தொங்கும் அங்கியும் அணிந்து நிற்கிறான் ஆடவன். பக்கத்திலே நிற்கிறாள் ஒரு பெண். இவர்களே விஷ்ணு வர்த்தனனும் அவனது துணைவியும் என்று கருத இடமிருக்கிறது.

இக்கோயிலில் தாயார் சந்நிதி இல்லை. பக்கத்தில் உள்ள மலை மேலே தாயார் தனிக் கோயிலில் இருக்கிறாள் என்பர். அந்தத் தாயாரை நாடியே சென்னக்கேசவர் நடையாய் நடக்கிறார். அதற்கென்று ஒரு ஜோடி செருப்புகள் கோயிலில் எப்போதும் தயாராக இருக்கின்றன. இந்தச் செருப்பைச் செய்து தரும் சக்கிலியர்களும் மற்ற ஹரிஜனங்களும் கோயில் பிராகாரத்தில் தாராளமாக வரலாம் என்றும் தீர்மானித்திருக்கின்றனர். பங்குனியில் இக்கோயில் உற்சவம் நடக்கிறது. பதினாயிரக் கணக்கான மக்கள் வந்து கூடுகின்றனர்.



மரத்தைச் சேலையாக மாற்றுகிறோம்!

மாயாஜாலமோ என மலைக்கவும் வேண்டாம். சாதாரண விஞ்ஞான விந்தைகளில் ஒன்று தானே என்று அசிரத்தையாக இருக்கவும் வேண்டாம். விஞ்ஞானிகளின் வேலைத் திறனை அறிந்துகொள்வது நல்லது. வெறும் கட்டை, கரி, கல்... இவற்றிலிருந்து கயிறு திரிக்கும் ஆற்றலுள்ளவர்கள். சாதாரணக் கயிறு? அதுதானில்லை. பட்டைப்போன்ற மெல்லிய நூலிழைகளாக மாற்றிவிடுவார்கள். இந்த நூலிழைகளிலிருந்துதான் பிபின் ஸில்க் மில்லிலுள்ள நாங்கள் துணிகள் நெய்கிறோம். கண்கவர் வனப்பும், நம்பவே முடியாத உறுதியும் வாய்ந்த. பட்டுக்கீடான செயற்கைப் பட்டுப் பொருள்கள்!

பிபின் ஸில்க் மில்ஸ் கம். ப்ரை. லிட்., 12, தாதர் ரோட், பம்பாய்—14.

இது ஒரு ரோஹித் க்ரூப் ஸ்தாபனம்.

வென்று வருவீர் வீரராய் மீண்டு வருவீர்



திருமாலின் பெயர்கொண்டோன் திருவடிக்குத் தெண்டனிட்டுக்
திருட்டின சாமிநாதன் கிழமையோ டெழுதுமோலை :
பெருமைதரு செய்திகண்டு பெருமகிழ்ச்சி அடையலானேன்
திருநாடு பலவும்சென்று வெற்றியொடு வருகஐய !

காந்தியின் நெறியின்வாழ்வோர் நின்னினும் பெரியாரில்லை!
சாந்தத்தை நாட்டுதற்கு நின்னினும் சான்றோரில்லை !
சாந்தமே இந்தியாவின் சுதந்திரம் தந்ததென்று
போந்துநீ மேலைநாட்டில் பேசியே வருகஐய !

மன்பதை வாழச்செய்தல் அன்பின்மாண் பயனதாகும் !
மன்பதை அழியச்செய்தல் மடமையின் செயலதாகும்
துன்பதை விளைக்குமணுவை வெடிப்பது அறிவதாமா
என்பதை அறியாதார்க்கு எடுத்துநீர் விளக்குவீரே !

* * *

'எந்திர வித்தைகள் வேணது கற்றோம்,
என்னென்னவோ பல புதுமைகள் பெற்றோம்.
சந்திரன் செவ்வாய் மண்டலத் தோடும்
சங்கதி பேசிட வழிகளைத் தேடும்
அந்தமிலாப் பல சக்திகள் உற்றும்
அடிதடி சண்டையை விட்டிட மட்டும்
தந்திரம் ஒன்று படித்திலம் ! ஐயோ,
தரணியில் மக்கள் தவிப்பது பொய்யோ ?

'இத்தனை துன்பத்திற் கேற்ற மருந்து !
இந்திய ஞானிகள் கண்ட மருந்து !
உத்தமன் காந்தி உவந்த மருந்து !
உலகத்தில் துன்பம் ஒழிக்கும் மருந்து
சத்தியம் சாந்தம் இரண்டு சரக்கைச்
சமனிடை அன்பெனும் தேனிற் குழைத்துப்
பத்தியம் தெய்வ நினைப்பொடு உண்டால்
பாருக்குள் பேருக்கும் போரில்லை கண்டாய் !'

" புயத்துறை வலியரேனும் பொறையுடன் பொருந்திவாழ்தல்
சயத்துறை ; அறனும் அஃதே...." (கம்பன்)

இன்றுலகின் துயர்நீங்கச் சிறந்த மார்க்கம்
நின்றுலவும் அன்பொன்றே என்பதனை எடுத்துரைத்து,
வென்று வருவீர், வீரராய் மீண்டு வருவீர் !
சென்று வருவீர், எம் சிந்தைகொடு செல்கின்றீர் !

— எல். கிருஷ்ணசாமி பாரதி

அத்தியாயம் 13

பரமேசுவர வர்மன்

அகல் விளக்கின் திரியைத் தூண்டி விட்டுத் திரும்பிய பெரும்பிடுகு முத்தரையர் தொண்டையை மெல்லக் கனைத்துக் கொண்டு, ''இளவரசே! காஞ்சிக் கோட்டையைக் காவல் காத்துக்கொண்டிருந்த வில்வேலி, உறையூர் மேற்குச் சாலைக்கு ஏன் வந்தான்? உங்களைத் தேடிப்பிடிப்பதற்காகவே வந்தானா?'' என்று கேட்டார்.

''அப்படிச் சொல்ல முடியாது, ஐயா! சளுக்கிய விக்கிரமாதித்தன் ஏதோ ஒரு முக்கிய காரியத்துக்காக அவனை உறையூருக்கு அழைத்ததன் பேரிலேயே அவன் காஞ்சியிலிருந்து புறப்பட்டிருக்கிறான். உறையூர்ப் பெருவழியின் முச்சந்தியை அடைந்ததும் அவனுக்கு உறையூர் செல்லும் சாலை எது என்பதில் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. அந்தக் குழப்பத்தை நிவர்த்தி



பத்தினிக்கோட்டம்

செய்துகொள்ள ஓர் ஆளைத் தேடி வந்திருக்கிறான். அப்போதுதான் அவன் கண்ணில் நான் அகப்பட்டுக் கொண்டேன்'' என்று கரகரத்த குரலில் கூறினான் கோவிந்தவர்மன்.

''உங்களிடம் வழி விவரமெல்லாம் கேட்டானா?''

''கேட்டதோடு மட்டுமல்ல; காட்டச் சொல்லியும் என்னைப் பலவந்தமாக இழுத்துக்கொண்டு போனான்.''

''அப்படியானால் அவன் உங்களுடைய நடிப்பில் ஏமாந்து விட்டான் என்று சொல்லுங்கள்?''

''முழுதும் ஏமாந்தான் என்று சொல்ல முடியாது. ஏனென்றால், என்னை அழைத்துப் போகும்போது நடு வழியில், 'உனக்குக் குதிரையேற்றம் தெரியுமா?' என்று கேட்டுத் தன் குதிரைமீது ஏறிக் கொள்ளச் சொன்னான். விழிப்புடனிருந்த நான், குதிரையையே கண்ணால் பார்த்திராதவன்போல் நடித்துப் பேசி அவனை முட்டாளாக்கி விட்டேன்.''

''வில்வேலி, வெறும் தளபதி மட்டும் அல்ல; அவன் கடைந்தெடுத்த தந்திரசாலியாகவும் இருப்பான் போல் தோன்றுகிறது!'' என்று வியப்புடன் கூறினார் பழையாறைச் சோழர்.

''அந்தக் கடைந்தெடுத்த முட்டாளுக்கு நீங்கள் உறையூர்ச் சாலையைக் காட்டினீர்களா?'' என்று ஆத்திரத்துடன் கேட்டார் முத்தரையர்.

''இல்லை, ஐயா! பெருவளநல்லூர்ச் சாலையைக் காட்டி, அதுதான் உறையூர்ச் சாலையென்று அவனை வழிமாற்றி விட்டு விட்டேன்!'' என்று இளநகையுடன் அமைதியாகச் சொன்னான் கோவிந்த வர்மன்.

''சரி; அதன் பின் நீங்கள் ஏன் உறையூர் மேற்குச் சாலைக்குத் திரும்பி

வரவில்லை? நாங்கள் அங்கே உங்களுக்காக வந்து காத்திருப்போம் என்பதை அதற்குள் மறந்து விட்டீர்களா?''

''மறக்கவில்லை, ஐயா! நான் அங்கு வராமல் போனதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. உங்களைச் சந்திக்கக் குறித்தனுப்பிய நேரம் தவறிப் போனதால், என்னைத் தேடி வரும் நீங்கள் திரும்பிப் போய் விடுவீர்கள் என்று எண்ணினேன் — இது முதல் காரணம்; என்னுடன் வந்த வில்வேலி அந்த முச்சந்தியை அடைந்ததும் ஏனோ திடுக்குற்று, யாரையோ தேடுவது போல் அங்குமிங்குமாக ஓடிப்பார்த்தபிறகு நான் தவறாகக் காட்டிய பெருவளநல்லூர்ச் சாலையில் கண்மண் தெரியாமல் குதிரையைச் செலுத்திக் கொண்டு விரைந்தான். அவனுடைய அந்தப் பதற்றச் செயல் எனக்கு வியப்பையும் சந்தேகத்தையும் அளித்தன. என்னதான் நடக்கிறதென்று பார்த்துவிட, அவன் சென்ற அதே சாலையில் நானும் செல்ல ஆரம்பித்தேன். இது இரண்டாவது காரணம். நான் அப்படிப் போகாமல் இருந்திருந்தால் ஓர் அதிமுக்கிய விஷயத்தை நாம் அறிந்து கொள்ள வாய்ப்பே இல்லாமல் போய் விட்டிருக்கும்....''

''அது என்ன விஷயம், இளவரசே?''

''பெருவளநல்லூர் எல்லையை நான் அடைந்த போது பொழுது புலரும் நேரமாகி விட்டது. வழிமாறிச் சென்ற வில்வேலி சினத்தோடு திரும்பி வருவானோ என்ற எச்சரிக்கையுடன் நடந்துகொண்டிருந்த எனக்கு, அங்கே ஓர் அதிசயம் காத்திருந்தது. அந்தச் சாலை யோரமிருந்த ஓர் இல்லத்து வாசலில் அவனுடைய குதிரை கட்டிப் போடப்பட்டிருக்க, அதன் அருகில் ஓர் அழகிய சிவிகையும் இறங்கியிருப்பதைக் கண்டேன்.''

பழையாறைச் சோழரும், பெரும்பிடுகு முத்தரையரும் அதிர்ச்சியுற்றவர்கள்போல் நிமிர்ந்து, ''வராகச் சின்னம் பொறித்த சிவிகையா அது?'' என்று ஓரே குரலில் பரபரப்புடன் கேட்டனர்.

''நீங்களும் அதைப் பார்த்தீர்களா?'' என்று வியப்போடு வினவினான் கோவிந்த வர்மன்.

''உறையூர்ச்சாலையின் முச்சந்தியில் பார்த்தோம்....'' என்று முனகிய முத்தரையர், ''அது சரி, அந்தச் சிவிகை யாருடையது?'' என்றார் படபடப்புடன்.

''சளுக்கிய விக்கிரமாதித்தனின் ஒன்றுவிட்ட தம்பியான வேங்கி மன்னன் விஷ்ணுவர்த்தனனுடைய செல்வ மகள் இளவரசி உத்தமசீலி என்பவனின் சிவிகை அது!''

திகைப்பிலாழ்ந்த முத்தரையர், ஒரு கண தடுமாற்றத்துக்குப் பின், ''ஆமாம்; வில்வேலியின் குதிரையும், வேங்கி இளவரசியின் சிவிகையும் விடப்பட்டிருந்த அந்த இல்லம் யாருடையது?''



என்று தம்மை மீறிய பதற்றத்துடன் கேட்டார்.

''முதலில் அந்த விவரம் தெரியாமலே அங்கு சென்றேன்; பிறகுதான் அது நம் சேதியக் கலைஞர் பரவாதிமல்லரின் இல்லம் என்பதைத் தெரிந்துகொண்டேன்.''

பழையாறைச் சோழரும், பெரும்பிடுகு முத்தரையரும் ஒருவரையொருவர் கலவரத்துடன் பார்த்துக் கொண்டனர். பிறகு சட்டென்று திரும்பிய முத்தரையர், ''இளவரசே! அந்தச் சேதியக் கலைஞரின் இல்லத்தில் நீங்கள் வேறு யாரையாவது பார்த்தீர்களா?'' என்று கண்களை இடுக்கிக்கொண்டு வினவினார்.

''ஆந்திர இளவரசி — சளுக்கியத் தளபதி ஆகியோருடன், நமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவராக இருந்து வரும் பரவாதிமல்லரையும் பார்த்தேன்!'' என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு கூறினான் கோவிந்தவர்மன்.

அவனுடைய பேச்சுத் தோரணையிலிருந்து, சேதியக் கலைஞர்மேல் அவன் ஏதோ குற்றம் கண்டிருக்கிறான் என்பதைப் புரிந்துகொண்ட முத்தரையர் குழப்ப மடைந்தார். மேற்கொண்டு விவரம் கேட்கலாமா வேண்டாமா என்ற ஊமைத் தவிப்புடன் உடம்பை அப்படியும் இப்படியுமாக நெளித்தபடி அவன் முகத்தை உற்று நோக்கினார்.

கோப உணர்ச்சியால் உந்தப்பட்ட கோவிந்தவர்மன் சற்றே முன் தள்ளி வந்து, பரவாதிமல்லரின் இல்லத்தில் தான் ஒற்றுக் கேட்ட உரையாடல்கள் அனைத்தையும் மளமளவெனக் கூறிவிட்டு, ''கேட்டீர்களா, ஐயா? தேசம், இனம், மொழி, மதம் ஆகிய எல்லாவற்றையும் கடந்த மகா கலைஞர் என்று நாம் இத்தனை காலமாக நம்பி, மதித்து, போற்றி வரும் பரவாதி மல்லர் இப்போது எப்படி மாறி விட்டார் பார்த்தீர்களா? சாலையோடு சென்ற வேங்கி இளவரசியை வலியத் தம் இல்லத்துக்கு அழைத்து வந்ததுமல்லாமல், சளுக்கியத் தளபதியையும் வரவேற்று உபசரித்திருக்கிறார்! இதிலிருந்தே புலப்படவில்லையா, அவருடைய உள்ளத்தின் உண்மைச் சொரூபம்? ... அடேயப்பா! அந்த வேங்கி இளவரசியையும், சளுக்கியத் தளபதியையும் சந்தித்ததிலேதான் அவருக்கு எத்தனை மகிழ்ச்சி! எவ்வளவு குதூகலம்! இதையெல்லாம் விட, இன்னொரு விஷயத்தை நினைக்கும் போதுதான் என் மனம் எரிமலையாகக் குமுறுகிறது!... மாமல்லபுரத்திலே அவரால் உருவாகத் தொடங்கி முற்றுப் பெறாமல் நிற்கும் கணேசர் கோயிலை, முழுமையாக்கும் பணிக்கெனச் சளுக்கிய விக்கிரமாதித்தன் ஆக்கமும் ஆதரவும் அளிக்க முன்வந்தானானால், நமது பரமேசுவர போத்தரசரின் தோல்வியை அவர் ஒப்புக்கொண்டு விடுவாராம்! அதாவது, விக்கிரமாதித்தனின் வெற்றியை வரவேற்றுப் பல்லாண்டு பாடுவாராம்! எவ்வளவு பெரிய சுயநலவாதியாக— சுதேசாபிமானியாக — இருந்தால் இப்படியொரு விடம் தோய்ந்த கருத்தை வெளியிடத் துணிவார்!'' என்றான் ஆத்திரம் செருமிய குரலில்.

வாயடைத்த நிலையில் வெலவெலத்து உட்கார்ந்திருந்தார் முத்தரையர். பழையாறைச் சோழரோ, கோவிந்தவர்மனையும் முத்தரையரையும் மாறி மாறிப் பார்த்து விழித்துக் கொண்டிருந்தார்.

தான் சொன்னவற்றுக்கு அவர்கள் ஏதும் மறுமொழி பேசாமல் மௌனமாக இருப்பதைக் கண்ட கோவிந்தவர்மனின் மனம் வக்கிரமடைந்தது. அந்தச் சேதியக் கலைஞரைப் போல் இவர்களும் சுயநலவாதிகளாக மாறிவிட்டிருப்பார்களோ என்று ஐயம் கொண்ட அவன், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், ''சிற்றரசர்கள் இருவரும் என்னைப் பற்றிய விஷயங்களைத்தான் கிண்டிக் கிளறிக்கொண்டிருக்கிறீர்களே தவிர, தம்மைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே!'' என்றான் பொய்ப் புன்முறுவலுடன்.

''எங்களைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது, இளவரசே? கோட்டைச் சிறையில் உங்களை அடைத்து வைத்தது போல் இந்த நாட்டையே சிறையாக்கி எங்களை அடைத்து வைத்திருக்கிறான் விக்கிரமாதித்தன்! இல்லையென்றால், உங்களைச் சந்திப்பதற்காக, விண் முட்டும் அரண்மனைகளை மறந்து இந்தக் கண்முட்டும் இருள் கவிந்த கற்கோயிலைத் தேர்ந்தெடுத்திருப்போமா?'' என்று சலிப்பும் சஞ்சலமும் நிறைந்த குரலில் கரகரத்தார் பழையாறைச் சோழர்.

''நமது குறுநில மன்னர்கள் அனைவரின் நிலையும் இதுதானா ஐயா?'' என்று மனம் குமைந்து கேட்டான் கோவிந்தவர்மன்.

''ஆம், இளவரசே! எந்த ஒரு பேரரசுக்கும் வீறூர்ந்த வலிமையூட்டும் அங்கங்களாக விளங்குபவை அதன் சிற்றரசுகளே. சிற்றரசுகளின் ஜீவத் துடிப்பை ஒடுக்கிவிட்டால் பேரரசு தானாகவே செயலற்று வீழ்ந்து விடும். இந்த உண்மையை அறிந்தவனான

சளுக்கிய மன்னன், காஞ்சிக்கோட்டையைக் கைப்பற்றியதுமே தன் பெரும் படைகளைப் பகுதி பகுதியாகப் பிரித்து அனுப்பிப் பல்லவப் பேரரசுக்கு உட்பட்ட எல்லாக் குறுநில மன்னர்களின் அரண்மனைகளையும் வளைத்துக் காவல் போடச் செய்து விட்டான். இத்தகைய முன்னெச்சரிக்கை ஏற்பாட்டினால்தான், போருக்குப் பின் நம் நாட்டிலே எந்த ஒரு மூலையிலும் எவ்வித எதிர்ப்புக் கலகமும் கிளர்ந்தெழாமல், உயிர்த் துடிப்பற்ற சவம்போல் அடங்கியொடுங்கிக் கிடக்கிறது. கோட்டைச் சிறையிலிருந்து தப்பிய நீங்கள் ஆபத்துதவி வீரர்கள் மூலம் கொடுத்தனுப்பிய ஓலையை நாங்கள் பெறுவதற்கும், அதில் கண்டபடி உங்களைச் சந்திக்க வருவதற்கும் எத்தனை உபாயங்களைச் செய்ய வேண்டியதாகி விட்டது, தெரியுமா?"

நெடுமூச்செறிந்த பழையாறைச் சோழர், கவலை தேங்கிய கம்மிய குரலில் மீண்டும் தொடர்ந்து சொன்னார்: "இந்தக் கட்டுக்காவல் கெடுபிடிகளையெல்லாம்கூட நான் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. ஆனால், இப்படியெல்லாம் நடக்குமென அஞ்சி, என் அருமை மகள் இளங்கோப்பிச்சியை முன்கூட்டியே பழையாறையிலிருந்து வெளியேற்றி விட்டு, இப்போது அவள் முகத்தைப் பார்க்கவும் முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேனே, இது தான் எனக்குத் தாளவொண்ணா வேதனையா யிருக்கிறது."

கோவிந்தவர்மன் இதைக் கேட்டுக் குறுநகை புரிந்தான். "கவலைப்படாதீர்கள், ஐயா! உங்கள் அருமைச் செல்வி இளங்கோப்பிச்சி எவ்விதக் குறையுமின்றி நன்னலத்தோடுதான் இருக்கிறாள்."

வியப்புற்றுத் தலைநிமிர்ந்த பழையாறைச் சோழர், "என்ன சொன்னீர்கள், இளவரசே? என் மகளை நீங்கள் பார்த்தீர்களா?" என்று ஆவலுடன் கண்களை அகல விரித்தார்.


"ஆம், ஐயா! பல்லவபுரம் கோட்டைச் சிறையிலிருந்து நான் தப்பி வர உதவி செய்தவளே, சோழ இளவரசி இளங்கோப்பிச்சிதான்! அவள் தங்கியுள்ள ஆலம்பாக்கம் என்னும் ஊரில், அவளுடைய பாதுகாப்பிலே இரண்டு நாட்கள் வரை தலைமறைவாயிருந்த பின்னர்தான் இங்கு வந்து சேர்ந்திருக்கிறேன் ...!"

திகைத்து விட்டார் பழையாறைச் சோழர். மகிழ்ச்சியும் திகிலும் அவர் முகத்தில் மாறி மாறி ஏர் உழுதன. தமது மகளைப் பற்றி மேலும் விசாரித்து அறியச் சுறுசுறுப்புடன் சற்றே முன் தள்ளி வந்தார்.


இவ்வளவு நேரம் இவர்கள் பேசிய பேச்சு எதிலும் கலந்து கொள்ளாமல் வேறு ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து போய் உட்கார்ந்திருந்த பெரும்பிடுகு முத்தரையர் சட்டென்று திரும்பிப் பழையாறைச் சோழரின் தோளைப் பிடித்துக் குலுக்கி, "நண்பரே! சளுக்கிய விக்கிரமாதித்தன் நமது பரமேசுவர வர்மரை யுத்தகளத்திலோ அதற்கு முன்போ பார்த்ததே இல்லை என்ற விஷயம் உண்மைதானே? அதில் சந்தேகம் இல்லையே?" என்று தம்மை மீறிய பதற்றத்துடன் கேட்டார்.

இந்தத் திடீர் வினாவினால் ஒரு கணம் திகைத்துவிட்ட பழையாறைச் சோழர், மெல்லச் சிரித்தவாறு, "ஏன் இப்படிக் கேட்கிறீர்கள், அன்பரே? உங்களுக்கும் அது தெரிந்த விஷயம் தானே? சளுக்கியப் படைகளின் முதல் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் பல்லவப் படைகள் பின்வாங்கத் தொடங்கியதுமே, காஞ்சியிலிருந்த பரமேசுவரவர்மர் தாமே எல்லைப் போர்க்களத்தில் நேரிடையாகக் கலந்து கொள்ள யுத்த சன்னத்துக்களுடன் புறப்பட்டார். ஆனால் எதிரியின் அசுர பலத்தை உணர்ந்த நாம், அவரை அந்தப் போர்முனைக்குப் போகவிடாமல் தடுத்து நிறுத்திக் காஞ்சிக்கோட்டையைப் பலப்படுத்திக் கொண்டு எதிரியை உள்ளுக்கு இழுத்துத் தாக்கும்படி யோசனை கூறினோம். மின்னல் வேகத்தில் முன்னேறி வந்த சளுக்கிய விக்கிரமாதித்தனோ, நமது அந்தப் போர்த் தந்திரத்தை ஒரே நாளில் தவிடுபொடியாக்கிக் காஞ்சிக் கோட்டையை வளைத்துக் கொண்டான். படை பலம் சிதறிய நிலையில் கோட்டைக்குள்ளே தனித்துச் சிக்கிக்கொண்ட பரமேசுவர வர்மர், சளுக்கிய விக்கிரமாதித்தனுடனோ — தளபதி வில்வேலியுடனோ — நேருக்கு நேர் நின்று வாள் எடுத்துப் போரிட வாய்ப்பின்றிச் சுரங்க வழியே தப்பித் தலைமறைவானார். இதனால்தான் அவ்விருவரும் தமது ஜன்ம எதிரியின் முகத்தைப் பார்க்காமலாகி, அதுவே இப்போது அவர்களுக்கு ஒரு பெரும் பிரச்னையாகவும், நமக்குப் பேராறுதலாகவும் இருந்து வருகிறது" என்று கூறி நிறுத்தினார்.


இதைக் கேட்டு மேலுங்கீழுமாகத் தலையசைத்தபடி சற்றுநேரம் மௌனமாயிருந்த முத்தரையர் திடுமெனத்




மாடல் B-764:
ட்ரை பாட்டரி ஸெட்.
4 வால்வுகள், 3 பாண்டுகள்
அழகிய பெட்டி. ரூ. 265.00




மாடல் U-756: 3 'நோவல்' வால்வுகள்,
2 பாண்டுகள். குறைந்த விலையில்
பெரிய ஸெட்களின் மதிப்பு. கண்கவர்
பெட்டி. ரூ. 125.00



மாடல் A-744:
8 வால்வுகளின் வேலையைச் செய்யும்
6 'நோவல்' வால்வுகள், 4 பாண்டுகள்.
கண்ணைக்கவரும் பெட்டி. ரூ. 405.00



மாடல் B-755:
ட்ரை பாட்டரி ஸெட். 5 'நோவல்'
வால்வுகள், 3 பாண்டுகள்.
வனப்புள்ள மரப்பெட்டி. ரூ. 355.00



மாடல் A-767:
7 வால்வுகள், 8 பாண்டுகள். வனப்பு
மிகுந்த பெரிய பெட்டி. ரூ. 725.00

விலைகள் எல்லாம் நிகரானவை
வரி உள்பட; இதர வரிகள் தனி

GRA

ஜெனரல் ரேடியோ &
அப்ளையன்ஸஸ்
லிமிடெட்

பம்பாய் . கல்கத்தா
மதராஸ் . டில்லி . பாட்னு
பெங்களூர் . ஸெகந்திராபாத்

JWT/GRA/4206

நேஷனல் எக்கோ

திரும்பி, ''இளவரசே! பெருவளநல்லூரில் அந்த மூன்று பேரைத் தவிர, வேறு யாரையாவது நீங்கள் பார்த்தீர்களா?'' என்று கடுகடுத்த குரலில் கேட்டார்.

சற்றுமுன் இதே வினவைக் கேட்ட அவர் இப்போது மீண்டும் அதையே திருப்பிக் கேட்கிறாரே என்று திகைப்படைந்த கோவிந்தவர்மன் மெல்லக் குனிந்து, ''பரவாதிமல்லரின் இல்லத்தில் தானே ஐயா? அங்கு அம்மூன்று பேரைத் தவிர வேறு யாரையும் நான் பார்க்கவில்லையென்று முன்பே சொல்லிவிட்டேனே!'' என்றான்.

''ஓகோ!'' என்று தலையாட்டிக் கொண்ட முத்தரையர் தணிந்த குரலில், ''ஆனாலும், அப்படி நீங்கள் செய்தது தவறுதான்'' என்று முணுமுணுத்தார்.

கோவிந்தவர்மன் இதைக் கேட்டுத் திடுக்குற்று நிமிர்ந்தான்.

''ஆம், இளவரசே! உறையூருக்கு வழிகேட்ட வில்வேலிக்கு நீங்கள் பெருவளநல்லூர்ச் சாலையைக் காட்டியது பெருந் தவறு!''

''ஏன், ஐயா? அப்படிச் செய்ததில் என்ன தவறு நேர்ந்துவிட்டது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?''

முத்தரையர் இதற்கு மறுமொழி கூறாமல் வேறொரு வினவைக் கேட்டார்: ''வேங்கி இளவரசி இந்நாட்டுக்கு வந்திருப்பதன் காரணம் உங்களுக்குத் தெரியுமா, இளவரசே?''

ஒருகணம் ஏதோ யோசனை செய்த கோவிந்தவர்மன் தன் இடுப்பில் மறைத்துச் செருகி வைத்திருந்த பட்டோலைச் சுருளை எடுத்து நீட்டி, ''இதோ, இந்த ஓலையைப் படித்துப் பாருங்கள்!'' என்றான் கரகரத்த குரலில்.

வியப்புற்ற முத்தரையர், வேங்கி நாட்டின் முத்திரை பொறிக்கப்பட்டிருந்த அவ்வோலையை வாங்கிப் பரபரப்புடன் பிரித்து வாய்க்குள்ளாகவே படித்தார். பழையாறைச் சோழரும் அருகில் நெருங்கி வந்து கழுத்தை நீட்டிப் பார்த்தார்.

ஆத்திரத்துடன் பற்களை நறநறவெனக் கடித்துக்கொண்ட முத்தரையர் அப்பட்டோலையைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்தெறிய முயன்றபோது சடாரெனப் பாய்ந்து வந்த கோவிந்தவர்மன் அதை வெடுக்கெனப் பிடுங்கிக் கொண்டு கலகலவெனச் சிரித்தான்: ''இந்த ஓலையை வைத்துக் கொண்டு நான் சாதிக்கத் திட்டமிட்டிருக்கும் பெரிய காரியமொன்றை ஒரே நொடியில் தகர்த்துவிடப் பார்த்தீர்களே!'' என்றான்.

''ஆமாம்; இந்தப் பட்டோலை உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?''

''ஆந்திர இளவரசி உத்தமசீலியின் சிவிகையிலிருந்து எடுத்து வந்தேன், ஐயா!'' என்று விஷமப் புன்னகையுடன் சொன்னான் கோவிந்தவர்மன்.

தலையைத் தாங்கிப் பிடித்தவாறு சற்று நேரம் மௌனமாக இருந்த முத்தரையர் பீதியடைந்த குரலில், ''இளவரசே! நீங்கள் சேதியக் கலைஞரின் இல்லத்தை விட்டுப் புறப்படும் வரை, சளுக்கியத் தளபதியும் ஆந்திர இளவரசியும் அங்கேதான் இருந்தார்களா?'' என்று வினவினார்.

''வில்வேலி இந்நேரம் புறப்பட்டுப் போயிருப்பான்; ஆனால், வேங்கி இளவரசி மட்டும் அங்கேதான் இருந்தாக வேண்டும்.''

''ஏன் அப்படி இளவரசே?''

''நான்தான் அவளை அவ்வாறு அங்கு தங்கித் தவிக்கும்படி செய்துவிட்டு வந்தேன்!'' என்று பெருமையுடன் கூறினான் கோவிந்தவர்மன். ''இந்த ஓலையைக் கொண்டு நான் சாதிக்கத் திட்டமிட்டிருக்கும் காரியத்துக்காக ஆந்திர இளவரசியின் பயணத்தை ஒரு நாள் பொழுதேனும் தடைப்படுத்த வேண்டியது அவசியம் என்று எண்ணினேன். அதற்கோர் உபாயம் தோன்றியது. மகிழ மரம் ஒன்றின் அடியில் கிடந்த ஒரு மரக் கட்டை ஆசனத்தைத் தூக்கி வந்து அந்தச் சிவிகையினுள் ஓசையின்றி வைத்துத் திரைகளைத் தொங்க விட்டுவிட்டு, சற்றுத் தள்ளிப் போய் நின்று கொண்டு, 'சரி, புறப்படலாம்' என்று பெண்ணின் குரல் போன்ற சன்னக் குரலெடுத்துக் கூறினேன். தூக்கக் கிறக்கத்தில் அரைப் பிரக்ஞையோடு உட்கார்ந்திருந்த சிவிகையாட்கள் துடித்துப் பதறி எழுந்து சிவிகையைத் தூக்கிக் கொண்டார்கள். உள்ளே கனம் இருக்கவே, இளவரசிதான் அமர்ந்திருக்கிறாள் என்று தீர்மானித்தவர்களாய், பூஞ்சை இருள் பூசிக் கிடந்த அந்த விடியற்சாம வேளையில் உற்சாகமாகப் புறப்பட்டுப் போயே விட்டார்கள். சிறிது நேரம் கழித்து நானும் அங்கிருந்து மெதுவாக நழுவி வந்துவிட்டேன்.''

இடியால் தாக்குண்டவர் போல் அதிர்ச்சியுற்று எழுந்து நின்ற பெரும்பிடுகு முத்தரையர், ''இளவரசே! இரண்டாவதாக நீங்கள் ஒரு பெரிய தவற்றைச் செய்து விட்டீர்கள்! அந்தப் பரவாதிமல்லர் இல்லத்தில் தலைமறைவாய்த் தங்கியிருக்கும் பல்லவக் கோமான் பரமேசுவரவர்மர், எதிரி

களின் கையிலே சிக்கிக் கொள்ள நீங்களே வழிவகுத்துக் கொடுத்துவிட்டீர்கள்!'' என்று பதறிக் கூறினார்.

கோவிந்தவர்மன் இதைக் கேட்டுக் கிடுகிடுத்து விட்டான். அவனால் ஒன்றுமே பேச முடியவில்லை. முகத்தை இரு கைகளாலும் பொத்திக்கொண்டு விம்மிப் பொருமினான்.

''நண்பரே! நாம் இனி இங்கே ஒரு கணமும் தாமதிக்கக் கூடாது. இப்போதே பெருவள நல்லூருக்குப் புறப்பட்டாக வேண்டும்'' என்று பழையாறைச் சோழரைப் பார்த்துப் படபடத்தார் முத்தரையர்.

பழையாறைச் சோழரோ அதற்கு உடன்பட விரும்பாதவர்போல் மிரட்சியுடன் அங்குமிங்குமாகப் பார்த்தார்.

அவருடைய தயக்கத்தைப் புரிந்து கொண்ட முத்தரையர், ''சரி; நீங்கள் பழையாறைக்குச் செல்லுங்கள்; நானும் கோவிந்தவர்மரும் பெருவளநல்லூருக்குப் போய் அங்குள்ள நிலைமையைத் தெரிந்து கொண்டு, பிறகு உங்களை வந்து சந்திக்கிறோம்'' என்றவாறு கருவறையை விட்டு அவசரமாக வெளியே நடந்தார்.

முகத்தைப் பொத்திக்கொண்டு உட்கார்ந்திருந்த கோவிந்தவர்மனும் எழுந்து அவரைப் பின்தொடர்ந்தான்.

தம்மை அலட்சியப்படுத்துவதுபோல் பேசிவிட்டுச் செல்லும் பெரும்பிடுகு முத்தரையரை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த பழையாறைச் சோழரின் முகம் பயங்கரமாகக் கறுத்துச் சிறுத்தது.

அத்தியாயம் பதினான்கு

உத்தமசீலியின் தவிப்பு!

காலை இளங் கதிரவனின் தங்கக் குழம்பொளியைப் பீலி போன்ற ஓலை அடுக்குகளில் தேக்கிக்கொண்டு நின்ற தென்னை மரங்களின் நீண்ட நிழற் சித்திரங்கள் சாய்ந்து கிடந்த பரவாதிமல்லரின் இல்லத்து வாசலிலே, ஆந்திர இளவரசி உத்தமசீலியின் சிவிகை, பயணத்துக்குத் தயார் செய்யப் பட்ட நிலையில் நிறுத்தப் பெற்றிருந்தது.

அந்தச் சிவிகைக்குச் சற்று அப்பால் - அதைத் தூக்கிச் செல்லப் புதிதாக அனுப்பப்பட்ட - ஆறு பேர்கள் பணிவுடன் நின்று கொண்டிருந்தனர். அவர்களுக்குப் பின்னால் சளுக்கியக் காவல் வீரர்கள் சிலர் அணிவகுத்து நின்றனர். வாசற்படியோரம், தாமரை வடிவிலே செதுக்கப் பெற்ற மரக் கட்டை ஆசனமொன்றைத் தூக்கித் தலையில் சுமந்தவாறு குற்றவாளி போல் நடுங்கிக்கொண்டு நின்றிருந்தான் இன்னொருவன். நேற்றுவரையில் சிவிகை தூக்கிகளில் ஒருவனாக இருந்து வந்த நாகோதரன் என்பவன்தான் அவன்!

அவர்கள் அனைவரும் இளவரசியின் வருகையைக் கவனப் பொறுப்புடன் எதிர்நோக்கியபடி அவள் இருந்த அறைப் பக்கமே தங்கள் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தனர்.

உத்தமசீலியும் தன்னைப் பிரயாணத்துக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டு, நீராடப் போயிருக்கும் பரவாதிமல்லருக்காகக் காத்திருந்தாள். அவள் மனம் ஒரு நிலையில் இல்லாது அலைபாய்ந்து கொண்டிருந்தது. காரணமில்லாத ஏக்கம், அர்த்தமற்ற பயம், புரிபடாத பிரிவுத் தாபம், விளங்காத இழப்பு உணர்ச்சி—இவையெல்லாமாகச் சேர்ந்து அவளை ஓரிடத்தில் அமர விடாமல் அங்குமிங்குமாக நடை பயில வைத்தன.

அவள் ஏன் இப்படி அமைதி இழந்து தவிக்க வேண்டும்? அளப்பரிய அன்பும் பண்பும் கொண்டு ஒரு தந்தையைக் காட்டிலும் மேலான பாசப் பரிவோடு தன்னை வரவேற்று உபசரித்ததுமல்லாமல், எதிர்பாராது ஏற்பட்ட சங்கட நிலையிலே தான் தங்கியிருக்க இடமும் அளித்து, அந்த ஒரு நாள் பொழுதில் தனக்கு ஒரு குறையும் நேராமல் கவனித்துப் போற்றிக் காத்த மாபெரும் சேதியக் கலைஞரான பரவாதிமல்லரை விட்டுப் போகிறோம் என்ற பிரிவுத் துயரால் இப்படி மனம் பேதலித்துத் தவிக்கிறாளா? அல்லது, நேற்று மாலை அவளுடைய சிவிகைதூக்கியான நாகோதரன் வந்து, அன்று விடியற்காலை தானும் தன் சகாக்களும் ஏமாற்றப்பட்ட விவரத்தைக் கூறினானே - அந்தச் சாமர்த்திய சதி நிகழ்ச்சியை நினைத்துக் குழம்பித் தவிக்கிறாளா? அதைப் பற்றித்தான் இரவெல்லாம் உறக்கத்தைக் கெடுத்துக் கொண்டு பலவாறாக எண்ணி எண்ணிப் பார்த்தும் ஒன்றும் புரிபடாமல் போகவே, அது ஒரு சாதாரணச் சம்பவம் என்பதாக மனத்தைத் தேற்றிக் கொண்டு அதைத் துப்புரவாக மறந்தும் விட்டாளே!

ஓ..... நேற்று மாலை, அந்தச் சிற்றாற்றங் கரையோரம் நிகழ்ந்த நிகழ்ச்சியை எண்ணித்தான் இப்படி அலமந்து தவிக்கிறாளோ?—

அது ஓர் எதிர்பாராத சம்பவம்; திட்டமிடாமல் நிகழ்ந்த ஒரு விநோத நிகழ்ச்சி. அதை எண்ணிச் சிரிக்கலாம்; அல்லது வருந்தப்படலாம். அவை இரண்டுக்கும் இடைப்பட்ட தவிப்பு நிலையை அடையக் காரணம்...?

உலாவிக் கொண்டிருந்த அவள் சரேலென்று போய்ச் சாளரத்துத் திரையை விலக்கிவிட்டு, அந்தச் சிற்றாற்றங்கரையோரம் பொன் துகள் படிந்த மரகதவேல் போல் ஓங்கி நின்று கொண்டிருந்த சவுக்கை மரத்தையே சற்று நேரம் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அமைதியற்று வெளிறியிருந்த அவள் முகம் இப்போது சரத் கால விடியற் போதில் மடல் பிரிக்கும் செவ்வரவிந்தம்போல் மெல்ல மெல்ல மலர்ச்சியுற்று ஒளிர்ந்தது.

ஏதோ ஒரு முடிவுடன் அந்த அறையை விட்டு வெளியே வந்த அவள், பரவாதிமல்லரைத் தேடுகிற பாவனையில், அங்குள்ள ஒவ்வோர் அறையாக எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டு சென்றாள். அந்த இல்லத்தின் எந்த அறையிலும் யாருமே இருப்பதாகத் தெரியவில்லை. சோர்ந்து துவண்டு நின்ற அவள், ஒருகண சிந்தனைக்குப் பின், வெளி வாசலை நோக்கி நடந்தாள்.

வாசலில் நின்றிருந்த சிவிகை தூக்கிகளும், காவல் வீரர்களும், இளவரசி புறப்படப் போகிறாள் என்று எண்ணிச் சுறுசுறுப்படைந்தனர். ஆனால் அவளோ, அந்த இல்லத்தைச் சார்ந்த கலைக்கூடத்தை நாடிச் சென்றாள்.

கலாதேவியின் தவச்சாலை போல் விளங்கிய அவ்வழகிய கலைக்கூடத்தில் பிரவேசித்த அவள் தன்னை மீறிய ஓர் அச்சக் குறுகுறுப்புடன் அங்குமிங்கும் பார்த்தவாறு தயங்கி நின்றாள். பிறகு, சிறிதே தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, முழுமை பெறாச் செப்புச் சிலை ஒன்று நிறுத்தப் பெற்றிருந்த ஓர் இடத்தை அடைந்தாள். மந்தமாருதத்தில் அசைந்தாடும் நாணற் பூச்செண்டு போல் உடல் நடுங்கித் துடிக்க, வட்டமிட்டுப் பறக்கும் வண்ணத்தியின் சிறகுகள் போல் மையுண்ட கண்ணிமைகள் படபடத்துச் சுழல, மெல்லக் கழுத்தை நீட்டி எட்டிப் பார்த்தாள்.

சேதியக் கலை சம்பந்தமான ஆகம நூற்கவடிகள் அடுக்கி வைக்கப் பெற்றிருந்த ஓர் அறையில், அந்த அழகிய வாலிபன் கைகளைப் பின்னால் கோத்தபடி உலவிக் கொண்டிருந்தான். அவன் எதிரே, முற்றுப்பெறா ஓவியத் திரையொன்று தொங்கிக் கொண்டிருந்தது. அதன் அருகில் பல்வேறு வண்ணக் கிண்ணங்களும் தூரிகைகளும் வைக்கப் பெற்றிருந்தன.

சிந்தனையில் ஆழ்ந்து உலவிக்கொண்டிருந்த அவன், தன் மீது பூஞ்சையான நிழல் ஒன்று படிந்ததை உணரவே, மெல்லத் தலை நிமிர்ந்தான். அவனது துயரம் செறிந்த விழிகளில் ஒரு மின்னொளி தோன்றி மறைந்தது.

செப்புச் சிலையோரம் செம்பொற் பதுமையென நின்று கொண்டிருந்த உத்தமசீலி, அவ்வாலிபனின் எதிரேயிருந்த ஓவியத் திரையைப் பார்த்து ஏதோ ஒன்றைப் புரிந்து கொண்டு, அதற்காகப் பெரிதும் இரும்பூதெய்தியவள்போல் மெல்லத் தலையசைத்தவாறு, மேலும் ஓரடி முன் நகர்ந்தாள். அழகேறிக் குளிர்ந்திருந்த அவள் கண்கள் அந்த வாலிபனின் பரந்த மார்பில் தவழ்ந்து கொண்டிருந்த — உருத்திராக்கம் போன்ற — சவுக்கைக்காய் மாலையைக் குறும்புடன் மொய்த்து விட்டுத் திரும்பின.

மறுகணம், ஜலதரங்கத்தைச் சுண்டி விட்டாற் போன்ற கலீர்ச் சிரிப்பொலி!

முற்றும் துறந்த யோகிபோல் நின்று கொண்டிருந்த வாலிபன் அவளை அமைதியாக ஏறிட்டு நோக்கினான்.

மாதவிக் கொடியிடையை ஒயிலாக வளைத்து, சங்கு நிறக் கழுத்தை ஒருக்களித்துச் சாய்த்து அழகோவியமாய் நின்ற அவள், தன் காயாம்பூ நயனங்களை மெல்லச் சுழற்றி அவனைப் பட்டும் படாததுமாகப் பார்த்துக் கொண்டே, குறுநகை பூசிய அதரங்களைப் பிரித்துக் கந்தர்வ ரசமான இனிய மென்குரலில், "சென்று வருகிறேன், வணக்கம்" என்றாள். பிறகு அங்கிருந்து சரேலெனத் திரும்பி நடந்தாள்.

மின்னல் நெளிவதுபோல் விரைந்து செல்லும் அவளையே பார்த்துக்கொண்டு நின்றான் வாலிபன்.

"மாமன்னர் பரமேசுவரவர்மருக்குச் சிரம் தாழ்த்திய அஞ்சலி உரித்தாகும்!"

அவன் இடுக்குற்றுப் பின்னால் திரும்பினான்.

அங்கே, அந்தக் கலைக்கூடத்தின் பின்புறச் சாளரத்துக்கு வெளியே ஒரு நந்தியாவட்டைச் செடியோரம், களைத்துச் சோர்ந்த முகத்தினராய் ஒடுங்கிப் பதுங்கி நின்றுகொண்டிருந்தார் முத்தரையர். (தொடரும்)

அத்தியாயம் 14

இணைந்த கரங்கள்

மிகுந்த பிரயாசைப்பட்டு வடிவேலு விழிகளை அவற்றின் கடமையைப் புரியுமாறு இயக்குவித்தான். தான் கட்டில் ஒன்றில் படுத்திருப்பதையும் பின்னால் சுவரில் அமைந்திருந்த ஜன்னல் வழியே காலை இளம் வெய்யில் சுளீர் என்று முகத்தைத் தாக்குவதையும் மற்ற மூன்று புறங்களிலும் திரைகள் நிறுத்தப்பட்டிருப்பதையும் கண்டான்.


'நான் எங்கே இருக்கிறேன், என்ன நடந்தது?' தனக்குத் தானே இரு கேள்விகளைப் போட்டுக் கொண்டான் அவன்.

'கடைசியாக வான வெளியில் ஆகாய விமானத்தில் பறந்து செல்வது போல் அனுபவம் ஏற்பட்டதே? ஊஹூம், அதெல்லாம் ஒன்றுமில்லை. ஜப்பானிய

''வா! தேவ கன்னிகையே, வா! என்ன சேதி கொண்டு வந்திருக்கிறாய்? சொர்க்கத்தின் அரசி சௌக்கியமா? ஏன் விழிக்கிறாய்? இந்திராணியைத் தெரியாதா உனக்கு? உன்னிடம் அவள் ஏதேனும் சொல்லியனுப்பினாளா?''

''நர்ஸ்! நர்ஸ்!''

தூக்கி வாரிப் போட்டது வடிவேலுவுக்கு. துள்ளி எழுந்து உட்காரப்போனவன் கால்களில் 'விண் விண்' ணென்று வலி தெறிக்கவே துடிதுடித்துச்சாய்ந்தான். அவன் முகத்தில் வேதனையின் அறிகுறிகளைக் கண்டு அவள் கரம் நீண்டது. குளுமையான ஐந்து விரல்கள் அவன் நெற்றியில் படிந்தன; வருடிக் கொடுத்தன.



விமானத் தாக்குதல் நடைபெற்று என் தலையிலும் ஒரு குண்டு விழுந்தது. தலையிலா? காலிலா? எந்தப் பகுதியிலிருந்தால் என்ன? குண்டு வீச்சிலே அகப்பட்ட நான்...நான் எப்படி உயிர் வாழ்ந்து கொண்டிருக்க முடியும்? செத்துத் தானே போயிருக்க வேண்டும்? ஒருவேளை சொர்க்கலோகமா இது? சே! சொர்க்கலோகம்இப்படியா இருக்கும்? எமலோகப்பட்டணமாக வேணுமானால் இருக்கலாம்! சொர்க்கலோகம் எவ்வாறு இருக்கும் என்று எப்படி நிர்ணயிப்பது? முன்னெப்போதாவது அங்கே போய்ப் பார்த்து விட்டு வந்திருக்கிறேனா நான்? இப்போதுதானே முதல் தடவையாக இறந்து போயிருக்கிறேன்!

'ஆ! அதோ திரையை விலக்கிக் கொண்டு யாரோ வருவது போலிருக்கிறதே, யார் அவள்? அப்ஸரஸ் மங்கையா? ஆம்! தேவலோகமேதான் இது! சந்தேகமில்லை!'

'மெத்தென்றிருந்த அந்த நீண்ட விரல்கள் இத்தகைய அபார சக்தியை எங்கிருந்து பெற்றன? எவ்வளவுதான் சிரமப்பட்டாலும் கண்களைத் திறக்க முடியாது போலிருக்கிறதே? அதற்கு மனம் இசையவே இசையாது!' அத்தனை இதமளிப்பனவாக, இன்பம் தருவனவாக, அமைதி ஊட்டுவனவாக இருந்தன, புருவங்களையும் நெற்றியையும் தடவிக் கொடுத்த அந்த விரல்கள்.

''நர்ஸ்! சற்று முன்னால்இவர் கண் விழித்துப் பார்த்தார்; அப்புறம் ஏதேதோ உளறினார். தயவுசெய்து உடனே டாக்டரைக் கூப்பிடேன்.''

'ஆஸ்பத்திரியா இது?' இந்த உண்மை மூளைக்கு எட்டியதும் மறுகணமே இருமிநாசினியின் வாடை மூக்கைத் துளைப்பது நன்கு புலனாயிற்று வடிவேலுவுக்கு.

''அதெற்கெல்லாம் அவசியமில்லை. அரை மணி நேரத்துக்கு முன்னால்தான்

டாக்டர் பரிசோதித்துவிட்டுப் போயிருக்கிறார் இவனை. 'கல்லாட்டம் இருக்கிறான். கவலைப்பட ஏதுமில்லை. ஓய்வாக இருக்கவேண்டும், அவ்வளவுதான்' என்று கூறினார்.''

'இந்தச் சனியன்பிடித்த நர்ஸ் இங்கே எதற்கு வந்து தொலைத்தாள்? அவள் வந்ததும், இவள் விரல்களின் இனிய ஸ்பரிசம் இல்லாமல் போய் விட்டதே எனக்கு? எழுந்து நின்று விட்டாளே இவள் நாற்காலியிலிருந்து?'

இலேசாக இமைகளைத் திறந்து பார்த்தான் வடிவேலு. தூய வெண்மையான ஆடை உடுத்திக் கால்மாட்டில் கட்டிலின் விளிம்பைப் பிடித்தபடி நின்றுகொண்டிருந்தாள், மலாய் நாட்டு மாதொருத்தி. 'இவளுக்கும் அவளுக்கும் என்ன பொருத்தம்? ஒடிந்து விழுகிற ஒயிலுக்கும், உரலைப் போன்ற உடலுக்கும், புதுமையின் பரபரப்புக்கும், முதுமையின் அமைதிக்கும், வானவில்லின் வனப்புக்கும் அந்த வர்ணங்களின் சேர்க்கை தரும் வெறுப்புக்கும், இளமை காட்டும் அக்கறைக்கும் அனுபவத்தின் விளைவான அலட்சியத்துக்கும் — கழுதைக்கும் குதிரைக்கும் இடையிலுள்ள ஒற்றுமைதான்!'

அவன் கண் விழிப்பதைக் கண்டு கொண்டதும் அந்த நர்ஸ் முக மலர்ச்சியுடன் தலையைச் சாய்த்து வாயை அகல நீட்டிப் புன்னகை புரிந்தாள். அதிலே அழகுக்கு இடமில்லையானாலும் தேக அசௌக்கியமுற்றிருப்பவனுக்குத் தெம்பு கொடுக்கும் பண்பு தோன்றியது. பதிலுக்கு மெல்லச் சிரித்தான் வடிவேலு.


''இப்போது எப்படியிருக்கிறது? அப்பா இரண்டு நாட்களாக ஒரேயடியாக விசாரப்பட்டுக்கொண்டிருக்கிறார்.''

தனக்குள்ள சிரத்தையைக் குரலின் பதற்றம் பறைசாற்றத் தகப்பனாரின் பேரில் பழி சுமத்தி விசாரிக்கிற அந்த மனப்பான்மையை வெகுவாக ரசித்தவாறே தலையை உயர்த்தினான் வடிவேலு. பக்கத்திலிருந்த அந்தச் சுந்தரியின் நிம்மதி இழந்த முகச் சாயல் தளர்ந்து இத்தனை ஆனந்தத்தைத் தருவானேன்? அப்ஸரஸ் என்று தான் அரை மயக்க நிலையில் அவசரப்பட்டு முடிவுகட்டிவிட்ட அவளைத் தீராத ஆசையோடு பார்த்துக் கொண்டேயிருந்தான் அவன். மார்பில் புரண்டு கொண்டிருந்த கருநாகங்கள் போன்ற நீண்ட இரட்டைப் பின்னல்கள், இடப் பக்கத்தில் பின்னல் தொடங்கிய இடத்தில் செருகியிருந்த ஒற்றை ரோஜா, முழங்கை வரையில் நீண்டு வந்த கரங்களுடன் இடுப்பை இறுகப் பற்றியிருந்த ஜாக்கெட், தகதகக்கும் பட்டுப் பாவாடை, நீடித்து அணிந்து பழக்கமின்மையால் தோளில் நிற்காமல் சரிந்து தொல்லை கொடுக்கும் மெல்லிய சித்தாடை, நெற்றியின் மையத்திலிராமல் கீழிறங்கிப் புருவங்களுக்கு இடையில் சிறு புள்ளியாக இட்டிருந்த சிவப்புச் 'சாந்துப் பொட்டு, காதிலிருந்த முத்துத் தோடு, பொல்லாத்தனம் பதுங்கிக் கிடக்கும் கண்கள், நுனியில் மேல்புறமாய்ச் சற்று வளைந்து விளையாட்டுத் தன்மையைப் புலப்படுத்தும் மூக்கு, அகன்ற ரோஜா இதழில் ஆப்பிள் கனியின் சித்திரம் வரைந்து வெட்டி எடுத்தாற் போல் வடிவம் கொண்டிருந்த அதரங்கள், அவன் ஆராய்ச்சியின் தன்மை உணர்ந்த உள்ளத்தில் கள்ளம் புக இலேசாகச் சிவந்த கன்னங்கள் எல்லாம் அவள் இளமை முதிர்ச்சி எட்டிப் பாராத முழு இளமை என்பதை எடுத்துக் காட்டின. 'அப்ஸரஸ் மங்கை என்று இவளையா தீர்மானித்து விட்டேன், அர்த்தமில்லாமல்? குழந்தைத்தனமும் கன்னிப் பருவத்துக் கள்ளத்தனமும் கலந்து உறவாடும் இத்தகைய விநோதச் சேர்க்கையை எந்த அப்ஸரஸிடம் காண முடியும்?' வடிவேலுவுக்குச் சற்றேனும் நம்பிக்கையில்லைதான்!

''இரண்டு நாட்கள் என்பதாகக் குறிப்பிட்டாயல்லவா நீ? இரண்டு தினங்களாகவா இங்கே படுத்துக் கொண்டிருக்கிறேன் நான்?''

''ஆமாம்!''

''சற்று முன்னால் இவன் ஏதோ உளறுகிறான் என்பதால் தவித்தாயே! நேற்று இவனுடைய பிதற்றல்களைக் கேட்டிருக்க வேண்டும் நீ! 'கொலை! கொலை!' என்று கூப்பாடு போட்டு ஆஸ்பத்திரியையே கிடுகலங்க அடித்து விட்டான்! ஒன்றிரண்டு மரணங்கள் இல்லையாம்! நூற்றுக் கணக்கில் கொன்று குவித்தாராம்! பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்ப வேண்டியவனைத் தவறுதலாக இங்கு



கூட்டி வந்து விட்டார்களோ என்று எனக்குச் சந்தேகம் உண்டாகி விட்டது!'' நர்ஸ் இவ்வாறு இடைமறித்துப் பேசியதும் அந்த இளம் பெண்ணின் வனப்புடன் விளங்கிய வதனத்தில் கலவரத்தின் சாயல் படர்வதைக் காணச் சகியாமல் வடிவேலு மலாய்க்காரியிடம் மன்றாடுவது போல் வேண்டிக் கொண்டான்: ''பிளீஸ்! சற்று நேரம் குறுக்கே புகுந்து பேசாமலிருக்கிறாயா?''

அவளை வாயைப்பிளக்க வைத்துவிட்டு மற்றொருத்தி பக்கமாய்த் தலையை ஒடித்தான்.

'' ஏன், நிற்கிறாய்? இப்படி உட்காரேன். உன் பெயர் என்னவென்று சொன்னாய்?'' மறதிக்காகத் தன்னைத்தானே நொந்து கொண்டவனாக நடித்தான் வடிவேலு.

''நான் சொல்லவே இல்லையே!'' என்றாள் அவள் வியப்புப்புன்னகையுடன்.

''இப்போதுதான் சொல்லேன், கேட்போம்!''

''மிஸ் கதிரேசன்!''

''உன் பெயரைக் கேட்டால் உன் அப்பா பெயரை இழுக்கிறாயே? உனக்கென்று உன் பெற்றோர்கள் பெயர் வைக்கவில்லையா?''

''ஓ! அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி நான் வரும் தலைக்கு நாலு பெயர் சூட்டி இருக்கிறார்கள்!''

''அவற்றில் ஒன்றையேனும் சொல்லேன்...!''

''அவசியம் தெரிந்து கொண்டுதான் ஆக வேண்டுமோ?''

''சொன்னால் என்ன? சிரம் வெடித்து விடுமோ?''

''சொல்லாவிட்டால் உங்களுக்கு உடம்பு குணமாகாதோ?''

''எதையுமே கூறாமல் மூடி வைத்துத்தான் என்னைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறீர்களே!'' என்று அலுத்துக் கொண்டான் வடிவேலு. உண்மையாகவே அவனுக்கு மண்டை கனக்கத்தான் செய்தது அப்போது. ஆதரவாக அதனைத் தாங்க, கைகளை தலைக்கு



எடுத்துச் சென்றவன் பெரிதாகக் கட்டுப் போடப்பட்டிருப்பதை உணர்ந்தான். அவன் முகம் சிணுங்குவதைக் கண்டு ஒரே எட்டில் நெருங்கி வந்தாள் நர்ஸ். நெற்றிப் பொட்டில் சில்லென்று 'யுடிகொலானை' இலேசாகத் தெளித்துத் தடவியவாறே, ''நீ அதிகமாகப் பேசக் கூடாது. தெரிந்ததா?'' என்றாள் கண்டிப்பான தொனியில்.

மிஸ் கதிரேசனுடன் தான் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் அடிக்கடி குறுக்கிட்டுத் தொந்தரவு கொடுக்கும் அந்த நர்ஸ், ஆங்கிலம் கற்றறிந்திருந்ததுடன் சகவாச தோஷத்தினால் ஓரளவுக்குத் தமிழைப் புரிந்து கொள்கிறவளாகவும் இருக்க வேண்டுமென்பது வடிவேலுவுக்கு விளங்கியது.

''நர்ஸ்! இந்த வார்டிலே இருப்பது நான் ஒருவன்தானா? வேறு நோயாளிகளே யாரும் இல்லையா?''

''நோயாளிகளுக்கென்ன குறைச்சல்? இன்னும் எட்டுப்பேர் இருக்கிறார்கள்.''

''அப்படிச் சொல்லு! அதுதானே பார்த்தேன்! யாரோ 'நர்ஸ்! நர்ஸ்!' என்று கூப்பிடுவது போலிருந்ததே என்று யோசித்தேன்...''

அவளைச் சுட்டுப் பொசுக்குவது போல் வெறித்து நோக்கினாள் நர்ஸ். இரண்டு பேரையுமே மாறி மாறிப் பார்த்தாள். தாராளமாய் அகன்றிருந்த இடுப்பில் இரு கைகளையும் ஊன்றி, 'ஹூம்!' என்று சப்தப்படுத்தி விட்டுத் திரும்பி நடந்தாள்.

''அப்பாடா! இனிமேல் நிம்மதியாகப் பேசலாம்'' என்றான் வடிவேலு, அவள் தலைமறைந்ததும். ''எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லு. இப்போது எங்கே இருக்கிறேன் நான்?''

''ராணுவ ஆஸ்பத்திரியில்.''

''நீ இங்கே வேலை பார்க்கிறவள் இல்லையே?''

''என்னைப் பார்த்தால் ஆஸ்பத்திரி நர்ஸ் போலவா இருக்கிறது?''

''அப்படித் தோன்றாததினால்தான் ஆச்சரியப்பட்டுக் கேட்கிறேன். நீ நர்ஸுமில்லை, டாக்டருமில்லை என்றால் நீ யார்? எதற்கு வந்தாய்? உனக்கு இங்கே என்ன காரியம்?''

சட்டென்று அவள் அடி உதட்டை உள்ளுக்கிழுத்து அழுத்திக் கடித்துக் கொண்டாள். ''நான் போக மாட்டேன் என்று அடித்துக் கொண்டேன். பிடிவாதமாக அப்பாதான் துரத்தினார்.''

''அடடா! நான் அந்த அர்த்தத்தில் கேட்கவில்லை!''

''அடுத்த முறை வரும் போது அகராதியைக் கையோடு எடுத்து வருகிறேன். இன்னும் சற்று நேரம் போனால் எனக்குத் தமிழே தெரியாதென்றும் சாதிப்பீர்கள்!''

''இதென்ன சங்கடம்? உன் அப்பா என்னிடம் பரிவு காட்டுவதன் காரணத்தைக் கேட்டால்....''

''நீங்கள் அப்படிக் கேட்கவில்லை; கேட்டிருந்தால் உடனேயே அதற்குத் தகுந்த பதிலும் கிடைத்திருக்கும்.''

''சரியான அரட்டையோ என்று நான் யோசித்தது மெய்யாகி விட்டது.''

''இந்த வாயாடியுடன் வாதாட உங்களுக்குப் பிடிக்கவில்லையானால் எதற்குச் சிரமப்படுகிறீர்கள்? நான் தொலைந்து போகிறேன்'' என்று கூறிவிட்டுக் கிளம்பினாள் அவள்.

'விருட்'டென்று எழுந்து நகர்ந்து விட்ட அவளை, ''நில்! நில்! போகாதே!'' என்று அலறிப் புடைத்துக் கொண்டு கூச்சலிட்டுத் திரும்பச் செய்தான் வடிவேலு.

வேண்டா வெறுப்பாகத் திரும்பி வந்து உட்காருவது போல் பாசாங்கு செய்தாள் அவள்.

''அம்மணி! தாங்கள் தயவுசெய்து அடியேன் பேரில் இரக்கம் காட்டுங்கள். திக்குத் திசை புரியாமல் நடுக் கடலில் தத்தளித்துத் திண்டாடும் இந்த மாலுமிக்குத் தாங்கள் துருவ நட்சத்திரமாக மாறி அருளுங்கள். இந்த அபாக்கியவானிடம் கருணைகூர்ந்து ஆரம்பத்திலிருந்து நடந்தது அனைத்தையும் விளக்கிவையுங்கள்.''

''அப்படி வாருங்கள், வழிக்கு!'' என்றாள் அவள், அவனை வெற்றி கொண்டு விட்ட சந்தோஷப் பூரிப்புடன். முழங் கைகளை மடியில் ஊன்றி முன்னுக்குச் சாய்ந்து சுவாரசியத்துடன் கதையைத் தொடங்கினாள்:

''ஒரே ஒரு ஊரிலே....''

''ராமா! ராமா!''

''ராமனில்லை. அவருடைய பெயர் முத்தையா!''

அதிர்ச்சியில் வடிவேலுவுக்கு விக்கல் ஏற்பட்டது. நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டான். பெரிய பெரிய விக்கல்களாகப் புறப்பட்டு அவனைக் குலுக்கிப் போட்டன. சுற்று முற்றும் கண்ணோட்டம் செலுத்தி விட்டு அறையின் ஒரு மூலையிலிருந்த கண்ணாடிக் குவளையிலிருந்து தண்ணீர் எடுத்து வந்தாள் அவள். பின் கழுத்துக்கடியில் வலது கையைக் கொடுத்து அவனை நிமிர்த்தி இடக் கரத்திலிருந்த டம்ளரை அவன் வாயருகே கொண்டுபோனாள். இலேசாக நடுங்கிய அந்தக் கரம் நீரைச் சிந்திவிடாதபடி வடிவேலுவின் இரண்டு கைகளும் டம்ளரை அந்த மென்கரத்தோடு சேர்த்துப் பற்றிக் கொண்டன.

அத்தியாயம் 15

குமாரி

தொடக்கத்திலேயே தடைப்பட்டு நின்று விட்ட கதையைத் தொடருமாறு அவனைத் தூண்டி விடுவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது வடிவேலுவுக்கு. அரும்பாடு பட்டுத்தான் அவனை மீண்டும் அதற்குச் சம்மதிக்க வைக்க முடிந்தது. ஒரு வழியாக அவன் மீண்டும் மனமுவந்து நடந்தவற்றை விவரிக்க ஆரம்பித்தான்:

"தமிழ் நாட்டிலே மாயவரத்துக்குப் பக்கத்திலே தேனூர் என்றொரு கிராமமாம். அங்கே முத்தையா என்றொருவர் வாழ்கிறாராம். அவருக்கு வடிவேலு என்று பெயர் கொண்ட ஒரு செல்லப் பிள்ளையாம்...."

"இதையெல்லாம் நீ எப்படிக் கண்டுபிடித்தாய்? அந்த அதிசயம் தாங்காமல்தான் விக்கலே எடுத்து விட்டது எனக்கு."

"பூ! இதென்ன பிரமாதம்? போலீஸில் கேஸ் என்று வந்தால் ஊர் பேரெல்லாம் அறிந்து கொள்ளாமல் விட்டுவிடுவார்களா? ராணுவத் தலைமைக் காரியாலயத்துக்குப் போய்த் தேவையான தகவல்களையெல்லாம் அவர்கள் சேகரித்துக் கொண்டார்கள்."

"போலீஸ் கேஸா? ஏன்? எதற்கு?" என்றான் வடிவேலு பதற்றத்துடன். அடிவயிற்றைக் கலக்கியது அவனுக்கு.

"வேடிக்கைதான்! இதைக் கூடவா விளக்கிச் சொல்ல வேண்டும் உங்களுக்கு? மோட்டார் விபத்தென்றால் போலீஸார் நடவடிக்கை எடுக்காமல் இருப்பார்களா?"

மைக்கேலிடம் கோபத்துடன் தர்க்கம் புரிந்தவாறே மிலிட்டரி வானை விரைவாக ஓட்டிச் சென்றதும், வேகத்தைத் தணிக்காததோடு விநாடிப் போது தாமதித்தே ஒரு சந்து திரும்பியதும் வடிவேலுவுக்கு ஞாபகம் வந்தது. என்னுடைய அஜாக்கிரதையினால் எதிரே வந்த காரில் மோதி விட்டேனா? ஒரே சமயத்தில் எழுந்த எத்தனையோ வினாக்களை ஒதுக்கிவிட்டு மிக முக்கியமென்று தனக்குப் பட்ட ஒன்றை மட்டும் கேட்டான் அவன்: "ராணுவப் போலீஸா? அல்லது போக்குவரத்தைக் கட்டுப்பாடு செய்யும் சாதாரணப் போலீஸா?"

"இரண்டுமேதான்."

"தொலைந்தது போ!"

"பயப்படாதீர்கள்! குற்றமெல்லாம் என்னுடையதுதான் என்று நான் பகிரங்கமாக ஒப்புக் கொண்டு விட்டேன்."

'நல்லவேளை! ஆத்திரத்தில் வேகத்தை அதிகரித்து விட்ட போதிலும் புத்தி தடுமாறித் தவறு இழைத்து விடவில்லை! என் மீது பிசகு ஏதுமில்லை என்று கூறி விட்டாளே இவள்! தப்பித்தோம்!' வடிவேலு நிம்மதிப் பெருமூச்சு விட்டான். "அந்தத் தெருவில் எதிரே வந்த காரை நீதான் ஓட்டிக் கொண்டு வந்தாயா? அப்படியா கண்களைக் குருடாக்குகிற மாதிரியாகப் பிரகாசமாய் விளக்குகளைப் போட்டுக் கொண்டு வருவார்கள்?" புதுத் தெம்புடன் அவள் மீது பழியைச் சுமத்திச் சண்டைக்கிழுத்தான் அவன்.

அவள் பணிந்து போனாள். "அதோடு சாலையில் வலப் பக்கமாகவும் காரை ஓட்டி வந்திருக்கிறேன் அன்றைக்கு. அதையெல்லாம் ஒளிவு மறைவில்லாமல் போலீஸாரிடம் வாக்குமூலமாய் எழுதித் தந்திருக்கிறேன். வழக்குத் தொடுப்பார்கள். அபராதம் விதிப்பார்கள் — கட்டி விடுகிறேன். காலிலும் தலையிலும் அடிபட்டதற்காக நீங்கள் நஷ்டஈடு கோருவதாக இருந்தால் அதையும் கொடுத்து விடுகிறேன். திருப்திதானே?"

"பணம்தானா பிரதானம்?" ஆயிரம் ரூபாயை அலட்சியமாக விட்டெறியக் கூடியவனைப் போலப் பேசினான் வடிவேலு. "நான் அனுபவிக்கிற துன்பத்துக்குப் பணம் சமானமாகி விடுமா? இதற்காகத்தான் பெண்கள் கார் ஓட்டவே கூடாதென்பது. என்னைக் கேட்டால் அப்படி ஒரு சட்டமே இயற்ற வேண்டுமென்பேன்!"

"நல்ல வேளையாக உங்களை யாரும் கேட்கவில்லை!"

"நிதான புத்தியே கிடையாதே, பெண்களுக்கு! சாலையைக் கவனித்துக் கார் ஓட்டினால்தானே? நேற்று 'அல்ஹாம்பரா' தியேட்டரில் நமக்கு இரண்டு வரிசைகளுக்கு முன்னால் ஒருத்தி பச்சைப் புடவைக்கு நீல ஜாக்கெட் அணிந்து வந்திருந்தாளே, எவ்வளவு பயங்கரமாயிருந்தது?' என்று எண்ணிக் கொண்டே கார் ஓட்டுவீர்கள். அது எங்கேயாவது மோதாமல் எப்படியிருக்கும்?"

"தலைக்கு வந்த ஆபத்து தலைப் பாகையோடு போன தைரியத்தில் நீங்கள் இப்போது ஏன் இஷ்டத்துக்குப் பேசமாட்டீர்கள்?"

"தலை ஒன்றும் தப்பவில்லை" என்று கட்டுப் போட்டிருப்பதைச் சுட்டிக்

காட்டினான் வடிவேலு. "இந்தப் பரிதாப நிலைக்கு என்னை ஆளாக்கி விட்டு என்ன துணிச்சலுடன் பேசுகிறாய் நீ! போகட்டும், காப்டன் மைக்கேலின் கதி என்ன ஆயிற்று? அதைச் சொல்!"

"உங்களோடு மிலிட்டரி வானில் சவாரி செய்த வெள்ளைக்காரனைத் தானே கேட்கிறீர்கள்? ஒரு மணி நேரத்துக்கு அப்புறம் அவனுக்குப் பிரக்ஞை வந்தது. நேற்றே முகாமுக்குத் திரும்பி விட்டான் அவன்."

"உனக்கொன்றும் அடிபடவில்லையே?" என்று மிகுந்த அக்கறையுடன் கேட்டான் வடிவேலு.

"கையைக் காலை முறித்துக் கொண்டவனைப் போலவா தோற்றமளிக்கிறேன் நான்?"

"அப்பப்பா! என்ன துடுக்குத்தனம்! ஒரு கேள்விக்காவது நேரடியான பதில் சொல்லக் கூடாதா? உன் அப்பா சௌக்கியமாயிருக்கிறாரா?"

"ஓ எஸ்! தினசரி மூன்று வேளை நன்றாகச் சாப்பிட்டுத் தூங்கிக் கொண்டு தான் இருக்கிறார்."

"எனக்கு இத்தனை காயம்பட்டிருக்கும்போது நீங்கள் இருவரும் ஒரு சிராய்ப்புக்கூட இல்லாமல் தப்பியது பெரிய அதிசயம்தான்!"

"கடவுளை நம்பினோர் கைவிடப் படார்!"

"படார் என்று பட்டாசு சுடுவது போல் வெடிக்கிறாயே?"

"சீன வெடி போல்தான் படபடத்துக் கொண்டிருக்கிறார் அப்பா!"

"ஏன்? என்ன கோபம் அவருக்கு?"

"நீங்கள் ஏராளமான நஷ்டஈடு கோரி வழக்கு தொடுக்கப் போகிறீர்களாம். அதிலும் அவர் கொஞ்சம் பசையுள்ள மனிதர் என்பதை அறிந்ததும் பேராசை பிடித்து அலைவீர்களாம். என்னுடைய முட்டாள்தனத்தினால் அவருக்குக் கையை விட்டு ஏகப்பட்ட பணம் கரையப் போகிறதாம்!"

"என்னைத் தவிர வேறு யாராவது அந்த ராணுவ மோட்டாரை ஓட்டி வந்திருந்தால் அவர் கோபத்துக்கு நியாயமான காரணம் இருக்கத்தான் செய்யும். ஆனால் அதிர்ஷ்டவசமாக நீங்கள் ரொம்ப நல்ல மனிதன் ஒருவனிடம்தான் அகப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நான் எவ்வளவு தங்கமானவன் என்பதை அவரிடம் எடுத்துச்

சொல்லு. நஷ்டஈடு கேட்கப் போவதில்லை நான் என்பதை உணர்ந்ததும் அவர் ஆத்திரம் தணிந்து விடும். நானும் அவரை நேரில் சந்திக்கும் போது சொல்கிறேன்: 'இவ்வளவு அழகான உங்கள் பெண் நாசுக்காக ஓட்டி வருகிற கார், அந்த ஒட்டை மிலிட்டரி வானில் வந்து மோத எனக்குக் கொடுத்து வைத்திருந்ததே; என் பாக்கியமே, பாக்கியம்!' என்று. இதைக் கேட்டதும் அவர் கோபம் பறந்து போய் விடாதா?''

கோபம் பிறந்தது அவளுக்கு. ''என்ன சொன்னீர்கள்!'' என்றவாறே எழுந்தாள். அளவுக்கு மிஞ்சி நட்புரிமை பாராட்டி அதிகப் பழக்கமில்லாத அவளை அழகி என்று சகஜமாகக் குறிப்பிட்டுப் புகழ்ந்ததை அவள் தவறாக எடுத்துக் கொண்டு சீறுகிறாளோ என்று எண்ணினான் வடிவேலு.

ஆனால் அவளோ, ''உங்கள் ராணுவ வானில் நான் மோதினேனா? தேவலையே! புதிது புதிதாக இல்லாததையும் பொல்லாததையும் கிளப்பி அபாண்டப் பழி சுமத்துகிறீர்களே!'' என்றாள்.

வடிவேலு திகைத்தான். ''நீ காரைக் கொண்டு வந்து வானில் இடிக்கவில்லையா?''

''ஏதடா, ரொம்ப வக்கணையாகக் காயம் பட்டதா, கால் ஒடிந்ததா என்று விசாரிக்கிறாரே என்று பார்த்தேன். இப்படி ஒரு கதை கட்டிவிடலாம் என்று பார்க்கிறீர்களா? சரிதான், கொஞ்சம் கண்ணயர்ந்தால் ஆளையே விழுங்கி ஏப்பம் விட்டுவிடுவீர்கள் போலிருக்கிறதே?''

''பிறகு என்னதான் நடந்தது?'' என்று கேட்டான் வடிவேலு.

''உங்களுக்கு யார் பேரிலே என்ன கோபமோ அந்த மிலிட்டரி வாகனத்தைக் கொண்டு போய் ஓர் ஆலமரத்தில் மோதினீர்கள். மாட்டு வண்டி ஓட்டியவரிடம் மோட்டார் வானைக் கொடுத்தால்....?''

''அல்லோல கல்லோலப் படும் என்றே வைத்துக் கொள்வோம். ஆலமரத்தை நான் அசைக்க முயன்றதற்கு நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்கள் பேரில் நான் வழக்கு தொடுப்பானேன்?''

''நிஜமாகவே தெரியாமல்தான் கேட்கிறீர்களா? அல்லது மண்டையில் அடிபட்டதில் மூளை மழுங்கி விட்டதா? சாலையில் நான் வலப் பக்கமாக வந்து தொலைத்ததினால் தானே நீங்கள் என் காரைத் தவிடுபொடி பண்ணுவதைத் தவிர்க்கத் தாறுமாறாய் ஸ்டியரிங்கை ஒடித்து ஆலமரத்தைச் சரண் அடைந்தீர்கள்?''

''ஓ! புரிந்தது! புரிந்தது!''

''உங்களுக்குப் புரிய வைத்துவிட்டேன் என்றால் அது அபார சாதனைதான். 'விக்டோரியா கிராஸ்ஸே' கொடுக்கலாம் எனக்கு.''

''எனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது, மோட்டாரை மரமேறச் செய்ய? எல்லாம் உன்னுடைய கைங்கரியம்தான்!''

''இன்னும் சற்று நேரம் தாமதித்தால் என்னைப் பைத்தியமாக அடித்து விடுவீர்கள். நான் புறப்படுகிறேன்.''

''நஷ்டஈடை நாளை அல்லது மறு நாள் வீட்டுக்கு வந்து பெற்றுக்கொள்கிறேன். உன் அப்பாவிடமும் சொல்லு. மிளகாய்ப் பொடி தடவிய தோசை பதினெட்டு; சூடான ஸ்ட்ராங் காப்பி! ராணுவச் சாப்பாடு அலுத்துப் போய் விட்டது எனக்கு.''

''தாராளமாய் வாருங்கள். குரோஸ் கணக்கில் வேணுமானாலும் வார்த்துப் போடச் சொல்கிறேன். ஆனால் அவசரப்பட்டுப் படுக்கையை விட்டு எழுந்தால் பூசை கொடுப்பார்கள் இங்கே! குறைந்தது ஒரு மாதமாவது ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டியிருக்கும் என்று டாக்டர் நேற்று என்னிடம் கூறிக்கொண்டிருந்தார்.''

''அவருக்குப் பெரிய ஏமாற்றம் அளிக்கப் போகிறேன் பார்! நான் சரியான தடியன். ஏழெட்டு நாட்களில் பூரண குணம் பெற்று விடுவேன். ஆனால் நீ மட்டும் தினம் ஒரு தடவையாவது வந்து போய்க் கொண்டிருக்க வேண்டும். அதுதான் எனக்கு மருந்து!''


''ஆசையைப் பார், ஆசையை!'' என்று கூறிவிட்டு அவள் நடந்தாள்.

திடீரென்று நினைத்துக் கொண்டவனாக, ''அடடா! பெயரைச் சொல்லாமலே போகிறாயே!'' என்று அலறினான் வடிவேலு.

தயங்கினவள் திரும்பிப் பாராமலே, ''நாளைக்கு'' என்றாள்.

''கூடாது! கூடாது! இப்போதே தெரிந்து கொண்டாக வேண்டும் எனக்கு!''

''குமாரி!'' என்று கூறிவிட்டுத் துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடினாள் அந்த வாலைக் குமரி. (தொடரும்)



உங்கள் ஆசைக் கண்மணியின் பாக்கியம்: ஆஸ்டர் மில்க் அளிக்கும் ஆரோக்கியம். காரணம், தாய்ப் பாலுக்கு நிகரானது ஆஸ்டர்மில்க். பரிசுத்தமான பாலிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ள ஆஸ்டர்மில்க், பாப்பாவின் பச்சிளம்ஜீரண சக்திக்கேற்பப் பிரத்தியேகமாகப் பக்குவப்படுத்தப்பட்டுள்ளது. தவிர, பற்களும், எலும்புகளும் திடவளர்ச்சி பெறுவதற்கான வைட்டமின் 'டி'யும் இரத்த சோகை தட்டாமல் காப்பதற்கான அயச் சத்தும் அதில் சிறப்புறச் சேர்க்கப்பட்டுள்ளன.



இலவசம்: 'ஆஸ்டர்மில்க் புத்தகம்' (ஆங்கிலப்பிரதி)... விரிவுமிக்க, குழந்தைப் பராமரிப்பு நூல்...தபால் செலவுக்காக 50 ந. பைசா தபால் வில்லைகள் இணைத்து எழுதுக: ஆஸ்டர்மில்க், தபால் பெட்டி எண் 2420, சென்னை-2.

OS.10-X51-M. TM


மங்கலாயிருப்பதை பளபளப்பாக்க

கார்டினல் பாலிஷ்


உங்கள் வீட்டுத்தரைகள் மங்கலாகவும் அசுத்தமாகவும் இருக்கின்றனவா? அவற்றிற்கு ரெட் கார்டினல் பாலிஷ் மூலம் உயிர் கொடுத்து ஒளி பெறச் செய்யுங்கள். ரெட் கார்டினல் பாலிஷ் உடனே தரைகளுக்கு செக்கிற ஒளி கொடுத்து பிரகாசிக்கச் செய்கிறது. சாதாரணமிலுமிலுப்பற்ற கல் தரையிலும் சிமிட்டித் தரையிலும் பரீட்சை செய்து பாருங்கள். ரெட் கார்டினல் பாலிஷ் சீக்கிரத்திலேயே மங்கலான தரைகளைப் புதியதோர் செக்கிற ஒளியுடன் பிரகாசிக்கும் படியாகச் செய்துவிடும்.

உங்கள் வீட்டுத்தரைகள் உயிருடன் கூடிய ஒளிபெற இன்றே ரெட் கார்டினல் பாலிஷை உபயோகியுங்கள்.

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட் (இங்கிலாந்தில் ஸ்தாபிக்கப்பட்டது)



கலை வாழ்க!



ர. சு. நல்லபெருமாள்

நூற்றாண்டு மண்டபத்தில் ஒரே கூட்டம். கலைக்காக, கலையை வாழ வைப்பதற்காகக் கங்கணம் கட்டிக் கொண்டு ரசிகர்கள் மண்டபத்துக்குள் திரிந்தார்கள். அகில இந்திய சித்திரப் போட்டி நடந்து கொண்டிருந்தது. கலா மன்றத்தார் போட்டிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். முதல் பரிசு பெறும் சித்திரத்துக்கு ஐயாயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு! இந்தப் பணத்தை எதிர்பார்த்துத்தான் நாட்டின் மூலை முடுக்குகளில் பதுங்கிக் கிடந்த சித்திரங்களெல்லாம் நூற்றாண்டு மண்டபத்துக்கு வந்து விட்டன.

பரிசுக்குத் தகுந்த சித்திரத்தைத் தேர்ந்தெடுக்க ஐந்து நீதிபதிகள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஐவரும் பெரிய புள்ளிகள்! சித்திரப் போட்டி நீதிபதிக் குழுவின் தலைவராக உலகப் புகழ்பெற்ற அமெரிக்க நாட்டு ஓவியர் வில்ஸன் இருந்தார். அவர் முன்னே நடக்க அவரைத் தொடர்ந்து மற்ற நான்கு நீதிபதிகளும் சென்றார்கள். இவர்களைத் தொடர்ந்து ரசிகப் பெருமக்கள் கும்பலாகச் சென்றார்கள்.

போட்டிக்கு வந்திருந்த ஒரு சித்திரத்தின் முன்னால் வில்ஸன் நின்றார்.

''மார்வெலஸ்....!'' என்றார் வில்ஸன், அதிசயத்துடன். உடனே மற்ற நீதிபதிகள், அதைக் கூர்ந்து பார்த்தார்கள். ஒரே வர்ணக் குழப்பம்! அது என்ன படம் என்றே மற்றவர்களுக்குப் புரியவில்லை. சித்திரத்துக்கு அடியில் ''சூரிய அஸ்தமனம்'' என்று எழுதியிருந்தது.

''எப்படி இந்தப் படம்?'' என்று ஆங்கிலத்தில் கேட்டுக் கொண்டே திரும்பினார், வில்ஸன்.

''பிரமாதம்!'' என்றாள், குமாரி குளோப். கோவில் யானை மாதிரி பிடி நடை போடும் இந்த அம்மாளைத் தெரியவில்லையா உங்களுக்கு? பிரபலமானவளாயிற்றே. இவள் தான் புகழ்பெற்ற சமூக சேவகி குமாரி குளோப். இவள் அங்கம் வகிக்காத சங்கம் இல்லையே இந்த நாட்டில்!

குமாரி — வயது நாற்பதுதான் இருக்கும் — குளோபுக்கும், இந்த மாதிரி சங்கங்களுக்கும் என்ன சம்பந்தம் என்று அசட்டுத்தனமாகக் கேட்டு விடாதீர்கள். இந்தச் சித்திரப் போட்டியில் இவளும் ஒரு நீதிபதி! சித்திரத்துக்கும் இவளுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லையென்றாலும், பெரிய சமூக சேவகி என்ற அந்தஸ்து ஒன்று இருக்கிறதே. அது போதாதா?

குமாரி குளோப் ''பிரமாதம்'' என்று சொன்ன உடனே, பக்கத்தில் நின்ற ஒரு நீதிபதி திகைத்தார். வலது கையைச் சூட்பாக்கெட்டில் திணித்துக் கொண்டு அந்தப் படத்தைக் கூர்ந்து பார்த்தார். அதில் சூரியனையும் காணவில்லை; அஸ்தமனமும் இல்லை!

''படம் எப்படி மிஸ்டர் பொன்னுசாமி?'' என்று அவரைப் பார்த்துக் கேட்டார் வில்ஸன்.

உடனே பொன்னுசாமி பதில் கொடுத்தார்: ''ஆகா, ஏ ஒன்!'' என்று கூறி விட்டுத் தலையைச் சொறிந்தார் பொன்னுசாமி.

இந்தப் பொன்னுசாமியைத் தெரிகிறதா? இவரை நீங்கள் எல்லா இடத்திலும் சந்திக்கலாமே. கலை என்று எங்கெல்லாம் பேசப்படுகிறதோ அங்கெல்லாம் இவர் தென்படுவாரே. இவர்தான் மலேயா ஹைகோர்ட் பழைய நீதிபதி பொன்னுசாமி. சித்திரத்துக்கும் இவருக்கும் என்ன சம்பந்தம் என்று நினைக்கிறீர்களா? ஓவியத்தைப் பற்றி இவருக்கு ஒன்றும் தெரியாது என்பது உண்மைதான். ஆனால், ஹைகோர்ட் நீதிபதியாக இருந்தவருக்குக் கேவலம் இந்தச் சித்திரப் போட்டியில் நீதிபதியாக இருப்பதுதானா பெரிய சங்கடம்?

ஐஸ்டிஸ் பொன்னுசாமிக்கு அந்தப் படம் என்னவென்றே புரியவில்லை. ஏதோ வில்ஸன் ரசித்தார்; இவர் தலையை அசைத்தார். இருந்தாலும் தம் சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ளப் பக்கத்தில் நின்ற மற்றொரு நீதிபதியான பேராசிரியர் ரங்கசாமியிடம் ''இது என்ன படம், புரியுதா?'' என்று கேட்டார்.

நீதிபதியானபின் ஒருவர் புரியாவிட்டாலும் புரியவில்லை என்று சொல்லிவிட முடியுமா? ''இது வர்ணச் சேர்க்கை. தமிழ் இலக்கியத்தில் இது பற்றிப் பலர் கூறி யிருக்கிறார்கள்'' என்று சொல்லி விட்டு அந்தப் படத்தைக் கூர்ந்து பார்த்தார் பேராசிரியர். இவருக்கு ஓவியத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது என்று சொல்லி விட முடியாது. சங்க இலக்கியங்களில் ஓவியங்களைப் பற்றிக் கூறியிருப்பதை இவர் படித்திருக்கிறாராம். இந்த அனுபவம் போதாதா சித்திரப் போட்டியில் நீதிபதியாகப் பணியாற்ற?

பேராசிரியருக்கும் அந்தச் சித்திரத்தின் தாத்பரியம் புரியவில்லை. உடனே பக்கத்தில் பலர் சூழக் கதர் ஜிப்பாவுடன் அண்டம் அதிரச் சிரித்துக் கலகலப்பாக நிற்கிறாரே, அவரைப் பார்த்து முகத்தைச் சுளித்தார்.

அந்த குல்லாக்காரர் யார் தெரிகிறதா? இன்னும் தெரியவில்லையா?

என்னய்யா இது? கதர் குல்லா போட்ட ஒரு மனிதரை இப்படிப் பலர் பல்லை இளித்துக் கொண்டு சூழ்ந்து நிற்பதிலிருந்தே தெரிய வில்லையா, இவர் நம் நாட்டு மந்திரி என்று? இவர்தான் கலாசார மந்திரி. மந்திரி சபையில் இவருக்குத்தான் செல்வாக்கு அதிகம். இந்தப் போட்டியில் இவரும் ஒரு நீதிபதிதான். மந்திரிக்கும் சித்திரத்துக்கும் என்னய்யா சம்பந்தம் என்று நீங்கள் முணு முணுப்பது காதில் விழுந்தான் செய்கிறது. நாடகம், நாவல், கவிதை முதலிய போட்டி களுக்கும் மந்திரிகளுக்கும் என்ன சம்பந் தமோ அந்தச் சம்பந்தம், சித்திரத்துக்கு மட்டும் இல்லாமல் போய் விடுமா?

பேராசிரியரிடம் மந்திரி கூறினார்: "நான் ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்த போது இந்த மாதிரி சித்திரங்களை நிறையப் பார்த்திருக்கிறேன். இதுதான் சித்திரக் கலை யில் இன்றைய நவீன பாணி. இதைப் புரிந்து கொள்ள ஒரு தனிப்பட்ட திறமை வேண்டும். மனவளர்ச்சியும் வேண்டும். அஸ்தமனக் காட்சி எவ்வளவு அற்புதமாகத் தீட்டப்பட் டிருக்கிறது!"

"ஆமாம், மிக அற்புதம்" என்று கூறிக் கொண்டார், பேராசிரியர்.

மண்டபத்தில் போட்டிக் காகப் பார்வைக்கு வைக்கப் பட்டிருந்த ஒவ்வொரு சித்தி ரத்தின் முன்பும் வில்ஸன் நின்று கூர்ந்து கவனித்தார். பிறகு, தம் அபிப்பிராயத்தை மற்ற நீதிபதிகளிடம் கூறி னர். அவர்களோ ஓவிய நுணுக்கங்களைப் புரிந்து கொண்ட மாதிரி தலையை அசைத் தார்கள். வில்ஸனின் அபிப்பிராயத்துக்கு உடனே தலையாட்டும் பணியில் குமாரி குளோரப், மற்றவர்களை முந்திக்கொண்டாள்.


மறுநாள் நடக்கும் சித்திரப் போட்டியில் பங்குகொள்ளத் தகுதியான சித்திரங்களைத் தேர்ந்தெடுக்கும் வேலைதான் அன்று நடந்தது. திடீரென்று மண்டபத்தின் ஒரு மூலையில் பரபரப்பு ஏற்பட்டது. எல்லாரும் அங்கு விரைந்தனர். ஒருவன் மயங்கிக் கிடந்தான். சிலர் அவனுக்கு மூர்ச்சை தெளிவிக்க முயன்று கொண்டிருந்தனர்.

மயக்கத்துக்குக் காரணம் பசிதான். ரவீந்திரன் சாப்பிட்டு மூன்று நாட்களாகி விட்டன. காற்றையும், நீரையுமே மூன்று நாட்களாகப் பருகி உயிரை உடலோடு ஒட்ட வைத்துக் கொண்டிருந்தான். அவன் ஒரு சித்திரக் கலைஞன்.


நம்பிக்கையை மட்டுமே துணையாகக் கொண்டு தன்னுடைய ஓவியத்தை அந்த மண்டபத்துக்குக் கொண்டு வந்திருந்தான். தன்னுடைய சித்திரம் அமரத்துவம் பெற்றது என்ற நினைவில்தான் அந்தப் போட்டிக்கு வந்தான். ஆனால் நீதிபதிகளின் மனம் அவ னுடைய சித்திரத்தில் லயிக்கவில்லையே?

அவனுடைய ஓவியம், அற்புதமானசிருஷ்டி தான். அவனும் தலைசிறந்த கலைஞன் தான். வெறும் கலைஞனாக மட்டுமிருந்தால் போதுமா? உலக அனுபவம் வேண்டாமா?

"ரவீந்திரன் வரைந்தானே, அதில் கலை எங்கே ஐயா இருக்கிறது? ஜஸ்டிஸ் பொன்னு சாமிதான் பார்த்தாரே! ரசித்தாரா? ஒரு வடநாட்டு ஓவியன் வரைந்த 'குளிக்கும் காட்சி' என்ற சித்திரத்தில் தோன்றிய



ஒவ்வொரு தூவுதலிலும் இரட்டிப்புச் சருமப் பராமரிப்பையளிக்கும் டால்கம்



அதைப் போன்றுதான் குடிகூரா டால்கம் இயங்குகிறது—குடிகூரா இலேசாக, மருந்து கலந்திருப்பதால், மிகச் சில டால்க்குகளே இயங்கும் வழியில் உங்களுடைய சருமத்தை சிறப்பாகப் பேணுகிறது.

குடிகூரா வேர்க்குரு தோன்றாமல் தடுக்கிறது. அழற்சியுண்ட சருமத்திற்கு இதமளிக்கிறது. மற்றும் அசௌகர்யத்தையெழுப்பும் வியர்வையை உறிஞ்சி உங்களை நாள் முழுவதும் உடல் பூராவும் பரிமள புத்துணர்ச்சியுடனிருக்க வைக்கிறது. குடிகூரா தூவிக்கொள்ளும் ஒவ்வொரு தரமும் அதன் சேர்த்தியாயிணைந்த ஒரு தனிப்பட்ட சுகந்தம் உள்ளக் கிளர்ச்சியைத் தூண்டுகிறது.

இன்றே ஒரு குடிகூரா டப்பா வாங்குங்கள்—110 வருஷத்திய பரம்பரையையுடையது இந்த டால்கம்.

குடிகூரா

குடும்ப முழுவதற்கும் ஏற்ற சர்வ-காரிய டால்கம்

குடிகூரா ஆயின்மெண்ட் புண்கள், வேனிற் சொறிசிரங்குகள் மற்றும் இதர சரும அழற்சிகளையும் குணப்படுத்தி விரைவில் சரும ஆரோக்கியத்தைச் சேர்க்கிறது.

NATIONAL C 30162A

லிப்டன்


லாவோஜி


டீ



சிக்கனத்தின்
சின்னம்
சிறப்பின் சிகரம்

LLC-1 TM





இளம் பெண் கவர்ந்ததைப் போல் ரவீந்திர னின் அமர ஓவியத்தால் அவரைக் கவர முடிய வில்லையே?''

''குமாரி குளோப், மெய்ம் மறந்து நின்றது, 'காதல் காட்சி' என்ற ஓவியத்தின் முன் தானே தவிர, ரவீந்திரனின் ஓவியத்தின் முன் இல்லையே.''

ரவீந்திரன் தீட்டியிருந்த சித்திரத்தின் பக்கம் வந்த போது வில்ஸன், சிறிது நேரம் நின்று கவனித்தார். சித்திரத்தின் தன்மை அவரையும் கவர்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால், மண்டபத்தில் நிறைந்திருந்த ரசிகர் களை அந்தச் சித்திரம் கவர்ந்து விட்டது. அந்த ஓவியம் பரிசு பெற்று விடும் என்றுதான் வந்திருந்த கூட்டம் நினைத்தது. ஆனால், போட்டியிடக் கூட லாயக்கில்லை என்ற தோரணையில் வில்ஸன் அந்த இடத்தை விட்டு நகர்ந்தபோது எவ்வளவு பெரிய ஏமாற்றம்.

வறுமையினால் எலும்பும் தோலுமாக உருமாறிய ஒருவன், ஓர் எச்சில் இலைக்காக ஒரு நாயுடன் போட்டி போடும் காட்சியைத் தான் சித்திரமாகத் தீட்டியிருந்தான் ரவீந்திரன். அந்த இலைக்காக நாயின் கண் களில் தோன்றும் ஆசையும், மனிதனின் கண் களில் தோன்றும் வெறியும் சித்திரத்தில் அற்புதமாகப் பிரதிபலித்தன.

''இதெல்லாம் என்ன சார் படம்? துடிப்பு இருக்க வேண்டும், கவர்ச்சி இருக்க வேண் டும். பசியெடுத்த பிச்சைக்காரனை யெல்லாம் படமாக வரைந்து வருகிறார்களே'' என்றார் ஜஸ்டிஸ் பொன்னுசாமி. மந்திரியும் தலையை அசைத்தார். அந்தப் படத்தில் மனித உள்ளத்தின் வேதனையும், சமுதாயத்தின் இழிந்த நிலையும் அற்புதப் படைப்பாகிவிட்டப் பதை மந்திரியால் எப்படி உணர முடியும்?

போட்டியில் இடம் பெறக்கூடத் தன்னு டைய ஓவியம் தேர்ந்தெடுக்கப்படவில்லை என் பதை உணராமல் பசி மயக்கத்தில் சுருண்டு கிடந்தான், ரவீந்திரன். மயக்கம் தீர்ந்து அவன் எழுந்த போது, பக்கத்திலிருந்த ஒரு ரசிகன், ''உனக்கு என்னப்பா செய்கிறது?'' என்று இரக்கத்தோடு கேட்டான். ரவீந் திரன், பரக்கப் பரக்க விழித்தான். பிறகு, ''பசி'' என்றான். அந்த ரசிகன் நாலணாவை நீட்டினான். அதே சமயம், தேர்ந்தெடுக்கப் படாத ஓவியங்களை யெல்லாம், அதனதன் சொந்தக்காரர்களிடம் சேர்ப்பித்துக்கொண்டு வந்த ஒருவர், ரவீந்திரனிடம் அவனுடைய சித்திரத்தைக் கொடுத்தார். அவன் ஆசை, தன்மானம் எல்லாம் இடிந்து சரிந்தன.

நாளை நடக்கப் போகும் போட்டியில் கலந்து கொள்ளக் கூட லாயக்கற்ற ஓவி யத்தையா ரவீந்திரன் தீட்டியிருந்தான்? முதல் தேர்விலேயே தோல்வி!

அந்தச் சித்திரப் போட்டிக்காக எவ் வளவோ கற்பனை செய்து ,கடைசியில், அந்த எச்சில் இலைக்குப் போட்டியிடும் இரு ஜீவன்களை வரைவது என்று முடிவு செய்த போது, தீட்டுவதற்கு வர்ணம் இல்லை. கையில் பணமும் இல்லை. விரலில் கிடந்த மோதிரம் உறுத்தியது. அந்த நினைவு நெஞ்சையும் உறுத்தியது.

ஒரு காலத்தில், அவன் கலையைக் காத லித்தாம் பிறகு அவளையே காதலித்தான். ஓர் அசட்டுப் பெண். கலையும், காதலும் வயிற்றை நிரப்பாது என்ற உண்மையை உணராத அசடு அவள். நெஞ்சம் நிறைந்தது: வயிறு வாடியது. அவள் நோயில் விழுந்த போது கலை உதவவில்லை. அவள் காதலைப் பறைசாற்றியே அந்த மோதிரத்தை விற்க அவன் நினைத்தபோது தடுத்தாள். வேறு வழி இல்லாமல் மருந்து வாங்குவதற்காக மோதிரத்தை விற்க முடிவு செய்தபோது, அவள் இறந்து விட்டாள். அன்று அவளுக்கு உதவாத மோதிரம். இன்று இவனுக்காவது உதவட்டுமே. ஆசை தூண்டியது. பசி துரத்தியது. மோதிரத்தை விற்க மனமில் லாமல் அடகு வைத்தான். கொஞ்சம் பணத் துக்கு வர்ணங்கள் வாங்கினான். பத்து நாட்க ளுக்குச் சிருஷ்டிகர்த்தாவாக மாறினான். உணர்ச்சி பொங்கும் அமர ஓவியத்தைப் படைத்து விட்டான். அதற்குள் பணம் கரைந்து விட்டது. மீண்டும் பட்டினி. இன் னும் இரண்டு நாட்கள்தான். பிறகு, அந்த ஓவியம் பரிசு பெற்று விடும். பிறகு பட்டினி ஏது. பரிதவிப்பேது? காதலியின் மோதிரத் தையும் மீட்டுவிடலாம்......

இப்போது எல்லா ஆசைகளும் சிதைந்து விட்டன. பசி கூட இப்போது அவனைத் துன்புறுத்தவில்லை. தோல்விதான் நெஞ்சைத் துளைத்தது. எவ்வளவு பெரிய ஏமாற்றம்? குமுறினான். நூற்றாண்டு மண்டபத்திலிருந்து வெறியனைப் போல் வெளியேறினான். ஒரு ரசிகன் கொடுத்த நாலணா அவனைப் பார்த்துச் சிரித்தது. அதைத் தூர வீசி எறிந்தான். தோல்வியடைந்த சித்திரத்தை மனச்சுமை யோடு சுமந்து கொண்டு தன் அறையை நோக்கித் தள்ளாடியபடியே நடந்தான். உள்ளத்தில் புயல் வீசியது.

வெறி கொண்டு அறையினுள் நுழைந் தான். கையிலிருந்த சித்திரத்தை மேஜை மீது விரித்தான். எச்சில் இலைக்குப் போட்டி யிடும் ஜீவன்கள், அதே தவிப்புடன் தானிருந் தன. குழப்பி வைத்திருந்த வர்ணங்களை அந்த ஓவியத்தின் மீது கோபத்துடன் கொட் டிப் பூசினான்...அந்த அற்புத சிருஷ்டி வர்ணக் குழம்புக்குள் சமாதி ஆகி விட்டது. பயங்கர மாகச் சிரித்துக்கொண்டே ஜன்னல் வழியாகச் சித்திரத்தை வீசியெறிந்தான் ரவீந்திரன். ஓவியம் குப்பைத் தொட்டியில் போய் விழுந் தது. ரவீந்திரன் தரையில் விழுந்து அழுதான். அவனுக்காக யார் அழுவது?

பக்கத்துத் தெருவில் புது வீடு ஒன்று உரு வாகிக் கொண்டிருந்தது. அந்தக் கட்டட மேஸ்திரியிடம் ஒரு சித்திரத்தை எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தான் சிற்றாள் அசட்டுச் சரவணன்.

''டேய் அசடு! குப்பைத் தொட்டியில் கிடக்கும் படத்தை ஏண்டா எடுத்து வந்தே?'' என்றான் மேஸ்திரி.

''டேய் அசட்டுச் சரவணா! இந்தப் படத் தைக் கொண்டு போய், மண்டபத்தில் நடக் கும் சித்திரப் போட்டியில் கொண்டு வை.

டிக்-20க்குப் புதிய அடக்க உறை



உள்ளூர் வரிகள் தனி

மட்டமான போலிகளை வாங்கி நீங்கள் ஏமாறக்கூடாதல்லவா? அசல் சரக்கு என்னும் உறுதியை அளிக்கும் புதிய, எடுப்பான வெள்ளை உறையினுள் அடக்கமிடப்பட்டு வருகிறது டிக்-20. கவனித்து வாங்கத் தவறாதீர்கள்!



மூட்டைப்பூச்சிகளின் எமன் டிக்-20: மூட்டைப் பூச்சிகளை உடனடியாகக் கொல்லும் டயாஜினன் என்ற சக்தி மிக்க, சடுதியில் வேலை செய்யும் பூச்சி மருந்து அதில் கலந்துள்ளது. மற்ற தயாரிப்புக்கள் செய்ய முயற்சிக்கும் சாதனைகளைச் செய்து முடிக்கிறது டிக்-20. பின் கேட்கவேண்டுமா புகழுக்கு? போலிகள் தோன்றுவதும் இயற்கைதானே!

உபயோகிக்க எளிதானது டிக்-20: பூச்சி மருந்துப் பம்பில் இரு தேக்கரண்டியளவு டிக்-20ஐ விட்டு, பின் மண்ணெண்ணெயை அல்லது நீரை நிரப்பவும். நன்றாகக் கலக்கி, உபயோகிக்கவும்.

சிக்கனம் மிக்கது டிக்-20 சிறிதளவு டிக்-20-ஐ ஒரேயொரு முறை, செம்மையாகத் தெளித்தால் போதும். மூட்டைப் பூச்சிகளை அது விரைவில் கொல்வதுடன், நெடு நேரம் பலன்தரக்கூடிய 'விஷமூட்டத்தையும்' ஏற்படுத்துகிறது. ஒரு சீசா டிக்-20 குறைந்தது 6 மாத காலத்துக்கு மூட்டைப் பூச்சிகளிடமிருந்து உங்கள் வீட்டைப் பாதுகாக்கிறது. தவிர, கரப்பான் பூச்சிகளையும் எறும்புகளையும் கட்டுப் படுத்தவும் உதவுகிறது டிக்-20.

ஒரு டாடா-பைஸன் தயாரிப்பு

பரிசுப் பணம் கிடைக்கும்'' என்றான் இன்னொரு சிறுவன்.

''வீட்டுக்கு வெள்ளையடிக்கிற மாதிரி தானே சித்திரம் வரையறதும்'' என்றாள் ஒரு கூலிப் பெண்.

ஆர்ட்டிஸ்ட் சரவணனுக்கு ஆசை உறுத்தியது. ஏற்கெனவே அவன் அரைப் பைத்தியம். இப்போது மற்றவர்கள் அவனை முழுப் பைத்தியமாக மாற்றிக் கொண்டிருந்தார்கள்.

என்ன நினைத்தானோ? சித்திரத்தை எடுத்துக் கொண்டு மறுநாள் காலையில் நூற்றாண்டு மண்டபத்துக்கே வந்து விட்டான். அன்று தான் போட்டியின் முடிவு நாள். தேர்ந்தெடுத்த சித்திரங்களில் எதற்குப் பரிசு கொடுப்பது என்ற சர்ச்சையில் நீதிபதிகள் ஈடுபட்டிருந்தனர். ஜஸ்டிஸ் பொன்னுசாமி, ''குளிக்கும் காட்சிக்குப் பரிசு கொடுக்க வேண்டும்'' என்றார். குமாரி குலோப், ''காதல் காட்சி''க்கு வரிந்து கட்டினாள். வில்ஸன், சூரிய அஸ்தமனக் காட்சிக்குப் பரிந்து பேசினார். மற்ற இரண்டு நீதிபதிகளும் எதுவும் எப்படியும் நடக்கட்டும் என்று பேசாமல் இருந்தார்கள். இந்தச் சமயத்தில் சரவணன், தான் கொண்டு வந்திருந்த சித்திரத்தை நீட்டினான்.

''காலம் கடந்து வந்ததால் போட்டிக்கு ஏற்றுக் கொள்ளக் கூடாது'' என்றார் கலா மன்றத்துக் காரியதரிசி. ஆனால், வில்ஸன், ''நல்ல சித்திரம் எது என்பதைத் தேர்ந்தெடுப்பது தான் இந்தப் போட்டியின் குறிக்கோள்'' என்று கூறிச் சரவணனின் சித்திரத்தை வாங்கிப் பார்த்தார்.

''ஆ......எக்ஸெலென்ட்........'' என்று அலறினார் வில்ஸன். எல்லோரும் அதைப் பார்த்தார்கள். ஒரே வர்ணச் சிதறல். ஒன்றும் புரியவில்லை. சிறு குழந்தை வர்ணத்தைக் கொட்டி மெழுகியது போலிருந்தது.

''இது என்ன சித்திரம்?'' என்று மெதுவாகக் கேட்டார் மந்திரி.

''புயலின் சின்னம்'' என்று உற்சாகமாகக் கூறினார் வில்ஸன். பிறகு அந்தச் சித்திரத்திலுள்ள நுணுக்கங்களை விவரித்தார். அவ்வளவு அற்புதமான நவீன பாணியில் அமைந்த சித்திரத்தை இதுவரை கண்டதில்லை என்று கூறி அதிசயித்தார் வில்ஸன்.

மற்றவர்களும் அவர் அபிப்பிராயத்துக்கு ஒத்துப் பாராட்டினர்.

கடைசியில் ஏகமனதாகச் சரவணன் கொண்டு வந்த படத்துக்குப் பரிசு கொடுப்பது என்று முடிவாயிற்று. அன்று மாலை, சரவணனுக்கு ''நவீனப் புரட்சி ஓவியர்'' என்ற பட்டமும், ஐயாயிரம் ரூபாய் பண முடிப்பும் கொடுக்கப்பட்ட போது, கட்டட மேஸ்திரிக்கு மயக்கமே வந்து விட்டது. போட்டியையும், நீதிபதிகளின் திறமையையும் பாராட்டிப் புகழ்ந்து நன்றி கூறிப் பத்திரிகைகள் பத்தி பத்தியாக வாழ்த்தின.

ரவீந்திரன் என்ன ஆனான் என்று கேட்கிறீர்களா? அவன் செத்துப் பல மணிநேரங்கள் ஆகி விட்டனவே. பசிக்கு இரை போட முடியாமல், பசிக்கே இரையாகி விட்டான். அவன் உண்மைக் கலைஞன். அவனைப் பற்றியெல்லாம் நாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்க முடியுமா? கலை வாழ்க!

விந்தைத் தீவு

எத்தனையோ அதிசயங்கள் நிறைந்தவை இந்த உலகம். பசிபிக் மகாசமுத்திரத்தில் தென் அமெரிக்காவிலிருந்து இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பால் ஒரு சிறிய தீவு இருக்கிறது. இதற்கு ஈஸ்டர் தீவு என்று பெயர். சிலி நாட்டுக்குச் சொந்தமான தீவு இது. 1722-ம் வருஷம் கிறிஸ்தவர்களின் புனித தினமான ஈஸ்டர் பெருநாளில் இந்தத் தீவு கண்டுபிடிக்கப்பட்டதால் இதற்கு இப்படிப் பெயரிட்டார்கள். 1888 முதல் சிலி நாட்டில் ஆயுள் தண்டனைக் கைதிகளை வைக்கும் சிறைத் தலமாக இத்தீவு இருக்கிறது. இந்தத் தீவின் மூன்று மூலைகளில் எரிமலைகள் உள்ளன. இந்தத் தீவிலிருந்து ஆயிரம் மைல் சுற்று வட்டாரத்துக்கு அப்பால் தான் வேறு மனித சஞ்சாரத்தைக் காண முடியும். இப்படித் தனித்து நிற்கும் இந்தச் சின்னத் தீவின் பரப்பளவு 45 சதுர மைல்கள்தான். இங்கு வாழும் போலினீஷியர்கள் என்ற சுதேசிகளின் ஜனத்தொகையும் மிக மிகக் குறைவுதான். ஆனால் இந்தத் தீவிலே எப்போதோ வாழ்ந்து மறைந்த புராதன மக்களின் சின்னங்கள் திகைப்பூட்டும்படியாக இருக்கின்றன. எரிமலைக் குழம்பு இறுகிய பாறைகளிலிருந்து செதுக்கப்பட்ட பிரம்மாண்டமான தலைகள் கடலை நோக்கியபடி நிறுவப்பட்டிருக்கின்றன. இதன் மீது இந்தச் சிலைகளை நிறுவிய மக்களின் பாஷையான குறி எழுத்துக்கள் வேறு பொறிக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் தனித் தலைகளைத் தவிர 300 அடி நீளமும் 300 அடி அகலமும் கொண்ட பாறையாலான மேடைகளும், அதன் மீது கடலையே கண் கொட்டாது பார்த்தபடி இருக்கும் சிலைகளையும் காணலாம் இங்கே. பெரிய பெரிய கற் கட்டடங்களும் அவைகளின் இடிபாடுகளும் இந்தத் தீவு முழுதும் சிதறிக் கிடக்கின்றன. இங்கு வாழும் சுதேசிகளுக்கு இந்த விந்தைத் தலைகளைப் பற்றியோ அவைகளில் குறிக்கப்பட்டுள்ள அடையாள மொழிகளைப் பற்றியோ ஏதும் தெரியவில்லை. ஆடு, மாடு கோழிகளை வளர்த்துக் கரும்பு, வாழை முதலியவைகளைப் பயிர் செய்து வாழ்வதைத் தவிர தங்கள் தீவிலுள்ள பிரம்மாண்டமான கல் தலைகள், பலி பீடங்கள், கட்டடங்களைப் பற்றி ஏதுமறியாத அப்பாவிகளாக இருக்கிறார்கள். பசிபிக் மகாசமுத்திரத்துத் தீவுகளில் ஒரு காலத்தில் வாழ்ந்து மறைந்த ஏதோ ஓர் இன மக்களின் கைவேலைதான் இந்தத் தலைகளும் கட்டடங்களும் என்பது மட்டும் தான் தெரிகிறது. ஆனால் அவர்கள் யார், என்ன ஆனார்கள் என்பதெல்லாம் சரித்திர ஆராய்ச்சியாளர்களுக்கும் புரியாத புதிராகவேயுள்ளது.





உங்கள் ஆல்பத்துக்கு

பிரிட்டிஷ் கினியாவில் வாழும் வாய் வாய் பிக்மி கிராமத்து மக்களெல்லாம் ஒரே பெரிய குடிசையில் சேர்ந்து வாழுவார்கள். வில் அம்பைக் கொண்டு மிருகங்களையும் மீனையும் கூட வேட்டையாடுவதில் வல்லவர்கள் இவர்கள். உடலில் வர்ணக் கோலங்களைப் பச்சை குத்திக் கொண்டிருப்பதைப் பாருங்கள்.

எது கொடுப்பாய்?

வாழைமரம் இலை கொடுக்கும்
வளர்தென்னை குலை கொடுக்கும்
தாழைமலர் மணம் கொடுக்கும் செல்லையா — நீ
தயங்காமல் எது கொடுப்பாய் சொல்லையா?


மாமரங்கள் கனி கொடுக்கும்
மாமலைகள் பனி கொடுக்கும்
தாமரைகள் மலர் கொடுக்கும் செல்லையா — நீ
தயவுடனே எது கொடுப்பாய் சொல்லையா?

மின்விளக்கோ ஒளி கொடுக்கும்
மின்விசிறி குளிர் கொடுக்கும்
பொன்நகைகள் எழில் கொடுக்கும் செல்லையா—நீ
பொருத்தமுடன் எது கொடுப்பாய் சொல்லையா?

பசுவினங்கள் பால் கொடுக்கும்
பாம்பினங்கள் தோல் கொடுக்கும்
விசுவாசம் புகழ் கொடுக்கும் செல்லையா — நீ
விருப்பமுடன் எது கொடுப்பாய் சொல்லையா?

அற்றார்க்கு நிழல் கொடுப்பேன்
அறிந்தார்க்குப் புகழ் கொடுப்பேன்
உற்றார்க்குப் பலம் கொடுப்பேன் பாலையா — நான்
உலகிற்கே நலம் கொடுப்பேன் கேளையா!

நாக. முத்தையா



வா! வா!

கை. தி. அரசு


தங்கநிலா வாவா!
தட்டுநிலா வாவா!
எங்கும்ஒளி பாய்ச்ச
எழுந்துநிலா வாவா!
வானநிலா வாவா!
வட்டநிலா வாவா!
மீனம்பல சூழ
மிதந்துநிலா வாவா!
பந்துநிலா வாவா!
பட்டுநிலா வாவா!
தந்தநிலா வாவா!
தாவிநிலா வாவா!
முத்துநிலா வாவா!
முழுமைநிலா வாவா!
கத்தும்கடல் தாண்டி
களித்துநிலா வாவா!


மண்ணைத் தோண்டினால்...?

தமிழ்முடி

மண்ணை வெட்டித் தோண்டினால்
தண்ணீர் ஊற்றுப் பெருகிடும்!
நெல்லைக் குத்தித் தூற்றினால்
நல்ல அரிசி கிடைத்திடும்!
கல்லைச் சிற்பி செதுக்கினால்
நல்ல சிற்பம் கிடைத்திடும்!
கெட்டித் தயிரைக் கடைந்திடில்
கட்டி வெண்ணெய் கிடைத்திடும்!
படிப்பை நன்றாய்ப் படித்திடில்
முடிவில் வெற்றி கிடைத்திடும்







மூஞ்சூறு மாகாத்மியம்

மூஞ்சூறு என்றதும் உங்களுக்கு என்ன நினைவுக்கு வருகிறது? தொந்திக் கணபதியைச் சுமந்து கொண்டு மூக்கை நீட்டிக் கொண்டிருக்கும் ஒரு பிராணிதானே? ஆனால் இந்த மூஞ்சூறைப் பற்றி உங்களுக்குத் தெரிந்ததெல்லாம் ரொம்ப ரொம்பக் குறைவு. அதன் பெருமையைப் பற்றி ஒரு புராணமே எழுதலாம். இதோ!

பிராணிகளிலேயே மிகப் பயங்கரமானது மூர்க்கத்தனமானது எது? சிங்கம், புலி, கரடி என்றுதானே சொல்லுவாய்? ஆனால் பிராணி நூல் ஆராய்ச்சியாளரோ மூஞ்சூறு என்றுதான் சொல்லுவார்கள். ஆங்கிலத்தில் இதற்கு 'ஷ்ரு' என்று பெயர். பிராணி வர்க்கத்திலேயே மிக மிகச் சிறியது மூஞ்சூறுதான். ஆப்பிரிக்காவில் வாழும் ஒரு வித மூஞ்சூறுகள் இவை. இதில் இரண்டு மூஞ்சூறுகளைத் தராசில் நிறுத்தால் ஓர் அவுன்ஸ் எடைதான் இருக்கும். ஆனால் பகாசுரப் பசிக்கும், பலத்துக்கும் பெயர் பெற்ற பிராணி இது. தன்னைவிட இரண்டு மடங்கு பெரிய பிராணிகளைக் கொன்று தின்னும் ஆற்றல் படைத்தது இந்த ஷ்ரு. 'ஷ்ரு' என்ற இந்த மூஞ்சூறில் பல வகை உண்டு. உலகமெங்கிலும், பாலைவனம், பனிப் பிரதேசம், உஷ்ணப் பிரதேசக் காடுகள் எங்கும் இதைக் காணலாம்.

உலகின் எல்லா நாடுகளிலும் இருக்கும் பிராணியானாலும் இதை நூற்றில் ஒருவர் தான் பார்த்திருப்பார்கள். பார்த்தால் எலியைப் போலத்தான் இருக்கும். மூக்கு மட்டும் நீளம், இருக்கோ இல்லையோ என்னும்படி புதைந்த கண்கள். சாம்பல் பழுப்பு அல்லது காவிப் பழுப்பு வர்ணத்தில் வெல்வெட் போன்ற உடல் இதுதான் 'ஷ்ரு' — மூஞ்சூறு.

இதற்குப் பயமென்பதே கிடையாது; ஆனால் பீதி அடைந்தால் அந்த விநாடியே இறந்து விடக் கூடிய அத்தனை பலஹீனமான இதயம் படைத்தவை. சாதாரணமாக நிமிஷத்துக்கு 75 தடவைகள் உன் இதயம் அடிக்கும். ஆனால் பீதி கொண்ட மூஞ்சூறின் இதயமோ நிமிஷத்துக்கு 1200 தடவைகள் அடித்துக் கொள்ளும். மூஞ்சூறு மூன்று மணி நேரம் ஆகாரம் இல்லாமல் இருக்குமானால் இறந்துவிடும். எதையும் தின்னும் பசி வெறி கொண்ட 'ஷ்ரு'க்களுக்கு ஒன்றும் கிடைக்காவிடில் தன் இனத்தாரையே அடித்துக் கொன்று சாப்பிட்டு விடுமாம்!

மூஞ்சூறிலேயே சிறியதும் பெரியதும் ஆப்பிரிக்காக் கண்டத்தில்தான் காணப்படுகிறது. ஒன்பது அங்குல நீளமுள்ள பெரிய மூஞ்சூறின் வால் மூன்று அங்குலம். இதற்குக் கவசமுள்ள 'ஷ்ரு' என்று பெயர். இதன் முதுகெலும்பு பெரியது. ஒன்றோடொன்று நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. இதனால் பெரிய பளுவைத் தாங்கும் வல்லமை இதற்கு உண்டு. ஆப்பிரிக்கர்கள் இதன் பலத்தைக் காட்டுவதற்கு இதன் மீது ஏறி நிற்பார்கள். 160 பவுண்டு நிறையுள்ள மனிதனை இது கொஞ்சமும் காயமின்றித் தாங்கும். இதிலிருந்து தொந்திக் கணபதி மூஞ்சூறின் மீது ஏறிச் சவாரி செய்வதை நாம் கற்பனை என்று கேலி செய்வதற்கில்லை. மூஞ்சூறுகளின் பலத்தை அறிந்தே அதைக் கணபதிக்கு வாகனமாக்கி யிருக்கிறார்கள் நமது முன்னோர்கள்.

மூஞ்சூறின் இளமைப் பருவம் இலை, தழை, புல் மண்டிய கதகதப்பான இடத்தில் தொடங்குகிறது. நான்கிலிருந்து பத்து வரையான குட்டிகள் இளஞ் சிவப்பு வர்ணத்தில் நெளிவதைப் பார்க்க விநோதமாக இருக்கும். இந்த நிலையில் இது ஒரு தேனீயின் அளவுதான் இருக்கும். பிறந்த ஒரு வாரத்தில் கூட்டுக்குள்ளேயே வளைய வர ஆரம்பிக்கும்.

மூன்று நான்கு வாரங்கள் வரை தாய் தன் குட்டிகளுக்கு இரை தேடித் தருவாள்—அநேகமாக அது மண் புழுவாகத்தான் இருக்கும். பிறகு இவை இவற்றின் அகோரப் பசிக்கு இரை தேடக் கிளம்பி விடுகின்றன.

மூஞ்சூறுகளுக்கு விரோதிகள் மிகக்குறைவு. ஏனென்றால் இதைச் சாப்பிட்டால் சுலபத்தில் ஜீரணமாவதில்லை. ஆந்தை, காட்டுப் பூனை ஆகிய ஒரு சில பிராணிகள்தான் மூஞ்சூறைத் துணிந்து சாப்பிடுகின்றன. இது தவிர மற்றப் பிராணிகள் எதுவும் தன் அருகில் வரா திருக்கச் செய்யும் உபாயம் ஒன்று இதனிடமுள்ளது. மூஞ்சூறின் அருகே சென்று பார்த்ததுண்டா நீங்கள்? ஒருவித நாற்றம் வீசும். குடலைக் குமட்டும். இது தன் உடலின் பக்கவாட்டில் உள்ள சுரப்பிகளில் நாற்றத்தை உற்பத்தி செய்து விரோதிகள் தாக்க வரும் போது வெளியிடுகிறது. இதைச் சகிக்க மாட்டாமல் அவை ஓடிவிடுகின்றன. குட்டை வால் 'ஷ்ரு' (மூஞ்சூறு) என்று ஒரு வகை. இது கடித்தால் நல்ல பாம்பின் விஷத்தைப் போல் ஆளையே தீர்த்து விடுமாம். பாம்பைப் போல் இதன் வாயில் உமிழ்நீர் சுரப்பிலோடு விஷம் சுரக்கிறதாம். இது விரோதியின் மீது தன் பல்லைப் பதித்ததும் இந்த விஷத்தையும் சேர்த்து உள்ளே செலுத்தி விடுகிறது. குட்டை வால் மூஞ்சூறு ஒன்றுக்குத்தான் இத்தகைய விஷப் பற்கள் உள்ளனவாம். பகாசுரப் பசி, பல்லிலே விஷம், பயமில்லாத குணம்.—இவைதான் மூஞ்சூறு.


இளம் வயதினருக்கும்
இளம் இதயத்துக்கும்
ஏற்ற இனிய
துணிவகைகள்
தாகர்ஸே
ஆடைகள்
நாகரிகத்தின் முக்கிய விருப்பம்
ஸான்போரைஸ்ட்
SANFORIZED
லேபில் உள்ளது.
தாகர்ஸே க்ரூப் ஆலைகள்
• தி க்ரேனன் ஸ்பின்னிங் & மான்யுபாக்சரிங் கம். லிட்.
• தி வெஸ்டர்ன் இந்தியா ஸ்பின்னிங் & மான்யுபாக்சரிங் கம். லிட்.
• தி இந்தியன் மான்யுபாக்சரிங் கம். லிட்.
• தி ஹிந்துஸ்தான் ஸ்பின்னிங் & வீவிங் மில்ஸ் கம். லிட்.

பூவும் மஞ்சளும்



பூசுரான்

மீனாட்சி அந்த அறையை விட்டு எழுந்திருக்கவே இல்லை. காலியாகக் கிடந்த நாக்கு மரக் கட்டிலுக்கு அருகில், தரையில் உட்கார்ந்திருந்தாள். உள்ளே கூடத்திலும், சமையல் கட்டிலுமிருந்து எழுந்த எந்தச் சத்தமும் அவள் கவனத்தை ஈர்க்கவில்லை. தெரு வாசலில் வேலைக்காரர்கள் உரக்கக் கத்திவண்ணம் எவரிடமோ பேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். குழந்தைகள் அங்கு மிங்கும் ஓடி விளையாடினார்கள்; கத்தினார்கள்; சிரித்தார்கள். ஆனால் மீனு மட்டும் அசைய வில்லை. ஆடவில்லை! எதிரே சுவரில் மாட்டியிருந்த வாஞ்சிநாதனுடைய புகைப்படத்தை மட்டும் வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்த அறைதான் வாஞ்சிநாதனுடைய அறை: அங்குதான் அவரைச் சாப்பாட்டு நேரம் தவிர மற்ற வேளைகளில் பார்க்க முடியும். அந்தக் கட்டிலில்தான் இருபத்து நான்கு மணி நேரத்துக்கு முன் படுத்திருந்தார். அந்த அறை. மெருகு குலையாத அந்தக் கட்டில், மூலையில் சாத்தப்பட்டிருக்கும் வெள்ளிப் பூண் போட்ட கைத்தடி, அலமாரி அலமாரியாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் சித்திரைச் செல்வங்கள் ஆகிய எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டுக் கண் மூடிவிட்டார்! இனி அவரை எவர் பார்க்க முடியும் ?

கூடத்திலிருந்து, ''அம்மா.... அம்மா!'' என்று அழைத்துக்கொண்டே மூத்த மகன் ரகுநாதன் அறைக்குள் ஓடி வந்தான். தன் தாயைப் பார்த்ததும் திகைத்து அப்படியே நின்று விட்டான். அவள் ஊமை அழுகையை —வாய் விட்டு அலறாமல் இதயத்தில் அழும் அழுகையை — கண்டதும் அவன் மனம் பதறிற்று. ஓடிப் போய்த் தன் தாயை அணைத்துக்கொண்டு ''அழாதே, அம்மா! அழாதே. நாங்கள் இல்லையா? அப்பா போய் விட்டால் என்னம்மா? நாங்கள் உன்னைப் பார்த்துக் கொள்ள மாட்டோமா? நீ அழுவதைப் பார்த்தால் நாகராஜனுக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலிருக்கும்மா!'' என்றான்.

நாகராஜன் இரண்டாவது பிள்ளை ரகு மூத்தவன்.

மீனாட்சி ரகுவைப் பார்க்கவில்லை. அவள் விழிகளிலிருந்து கண்ணீர் முத்து முத்தாகக் கன்னத்தில் உருண்டு ஓடிற்று.

இதயம் வெடித்து விடுவதுபோல் 'என்னை மோசம் செய்து விட்டுப் போய் விட்டீர்களே! நான் என்ன செய்வேன்?' என்று குமுறினாள்.

''நாம் கொடுத்து வைத்தது அவ்வளவு தானம்மா.....!'' என்று ரகு தேற்றினான்.

''உங்களை எவ்வளவு நம்பிக் கொண்டிருந்தேன்! இப்படி என்னை ஏமாற்றி விட்டீர்களே!'' என்று முகத்தில் அறைந்து கொண்டு அழுதாள்.

''அப்பா என்ன மோசம் செய்து விட்டாரம்மா? நேற்றிலிருந்து இதையே சொல்லி அழுறயே! அதை வாய்விட்டுச் சொல்லேனம்மா. நாங்கள் அதை ஈடு செய்ய மாட்டோமாம்மா? சொல்லும்மா!'' என்று கட்டி அணைத்துக் கொண்டு கேட்டான்.

மீனு அழுதாள்; விம்மினாள்; ஆனால் வாய் திறந்து வாஞ்சிநாதன் தனக்குச் செய்த மோசத்தை மட்டும் என்னவென்று அவள் கூறவில்லை.

''அம்மா! இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறாயே! நான் உன் பிள்ளை இல்லையா, உன் வார்த்தைக்கு இரண்டு சொல்லுவேனா,

என்னிடம் சொல்லக்கூடாத ரகசியம் அப்படி என்னம்மா?''

''எப்படியடா, அதை நான் வாய் விட்டுச் சொல்லுவேன்? அவர்.... ஐயோ..... எல்லாம் போய் விட்டதடா! நான் பாவி ஏமாந்து விட்டேனடா!''

''என்னம்மா, நீ ஏமாந்து விட்டாய்? விவரமாகச் சொல்லேம்மா!''

அதற்குள் நாகராஜனும் வந்துவிட்டான்; சரஸ்வதியும் வந்துவிட்டாள். அவள் மீனாட்சியின் ஒரே மகள்; பேரன், பேத்திகள், மாட்டுப் பெண்கள் எல்லாரும் சூழ்ந்து கொண்டு விட்டார்கள்.

''அப்பா என்னம்மா, உன்னை ஏமாற்றி விட்டார்? நேத்தியிலேயிருந்து எதையோ நினைச்சிண்டு அப்படி அழறியே! சொல்லம்மா!'' என்று சரஸ்வதி கெஞ்சினாள்.

மீனாட்சியின் விசும்பலும் விம்மலும் சிறிது சிறிதாகத் தேய்ந்தது. கண்ணீரின் சுவடுகள் மஞ்சள் பூச்சு பொலிவும் கன்னத்தில் திட்டாகத் தென்பட்டன. மார்பு விம்மி விம்மி எழுந்தது.

''சொல்லம்மா, வாய்விட்டுச் சொல்லம்மா! அப்பத்தான் நெஞ்சு ஆறும்!'' என்று நாகராஜன் கெஞ்சினான்.

அவனையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாளே ஒழிய வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வெளிவரவில்லை.

''பாத்தி.... நோக்கு என்ன வேணும், பாத்தி.... சொல்லு....'' என்று மூன்று வயதுப் பேத்தி பாட்டியிடம் மழலையாடினாள்.

மீனாட்சிக்குத் திரும்பவும் கண் கலங்கிற்று. அவ்வளவு பேரும் தன் மீது பொழியும் அன்பு வெள்ளத்தைக் காணக் காண அவளுக்கு மேலும் மேலும் துக்கம்தான் பீறிட்டுக் கொண்டு வந்தது.

''நீ வீணாக் கவலைப்படாதே, அம்மா! அப்பா இன்ஷ்யூர் பணம் அஞ்சாயிரத்தையும் உன் பேரிலேயே பாங்கில் போட்டுவிடுகிறேன்!'' என்றான் ரகுநாதன். அவன் தன் தாயார் மோசம் போய் விட்டதாகக் குறிப்பது ஒரு வேளை இன்ஷ்யூர் பணத்தைப் பற்றித்தான் இருக்கும் என்று நினைத்தான்.

''என்ன அண்ணா, இது? சமயம் சந்தர்ப்பம் அறியாமல்....?''

''இல்லே, சக்கு! அப்பா அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்ததுதானே!....''

''ஆமாம்! இனிமேல் அம்மா பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறாளாம்...?''

''அப்படியா! பணம் இருந்தாலே ஒரு தைரியம்தானே!'' என்று ரகு விடாமல் சொன்னான். அப்போதும் மீனாட்சி வாய் திறந்து பேசவில்லை. வாஞ்சியினுடைய புகைப்படத்திலேயே அவளுடைய பார்வை பதிந்திருந்தது.

2

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்...

மீனு வாஞ்சிநாதனைக் கைப்பிடித்து அக்கினியை வலம் வருவதற்கு முன்னால் அவனைப் பார்த்ததே கிடையாது. அவள் பெற்றோர்கள் வாஞ்சியைப் போய்ப் பார்த்தார்கள். வாஞ்சியினுடைய அம்மா மீனுவைப் பார்த்துவிட்டு வந்தாள். முகூர்த்தம் குறித்து கலியாணம் நடந்தது.

பதினாறு வயதில் அந்த வீட்டுக்கு மருமகளாக மீனு வந்தாள். அப்போது மாமனார், மாமியார், நாத்தனார்கள், அத்தைப் பாட்டி என்று வீடு நிறைய மனிதர்கள் இருந்தார்கள். மீனுதான் வீட்டுக்குப் புதிசு; வீட்டில் மாமியாரின் அதிகாரம் தான் பறந்தது; எடுத்ததற்கெல்லாம் மீனுவுக்கு வசவும் இடிப்பும்தான் மாமியாரிடமிருந்து கிடைத்தன. மாமனாரும் சில வேளைகளில் உறுமுவார். எத்தனை இரவுகள் மீனு கண்ணீரும் கம்பலையுமாகத் தன் தலையணையை நனைத்திருப்பாளோ? அதைக் கடவுள்தான் அறிவார்.

அந்தக் காலத்தில் வாஞ்சியைச் சாது என்றும் நினைக்க முடியவில்லை; அசடென்று அலட்சியமும் செய்ய முடியவில்லை. மீனுவின் பக்கத்தில் இருக்கும்போது அவன் பேச்சில் இனிமையும் பரிவும் பரிமளித்தன. அவன் தாயார் முன்னிலையில் அவன் பரப்பிரம்மமாக இருந்தான்; மீனுவை அதட்டும்போது அவனுக்குக் காது கேட்காது! சில வேளைகளில் நாடகமும் போட்டான்!

மீனு தலைச்சன் பிரசவத்துக்குப் பிறந்தகத்துக்கு வந்தபோது தன் தாயிடம் தன் கஷ்டங்களையெல்லாம் சொல்லிச் சொல்லி அழுதாள். அவள் தாயார் எல்லாவற்றையும் கேட்டு விட்டுச் சிரித்துக் கொண்டே, ''பின்னே குடும்பம்னு லேசா?.. பெரியவர்களுடைய வசவெல்லாம் உனக்கு ஆசிர்வாதங்களாகத்தான் நிற்கும்; பயப்படாதே! மனம் கஷ்டப்படும் போது துளசி அம்மாவிடத்தில் சொல்லிக்கோ!'' என்று தேற்றினாள்.

மீனு தன் தாயார் வீட்டுக்கு வந்தபிறகு வாஞ்சியிடமிருந்து அவளுக்கு ஒரு கடிதமும் வரவில்லை. மீனு தன் கணவனுக்கு எழுதின கடிதங்களுக்கும் பதில் வரவில்லை. தான் ஒருத்தி இருப்பதையே புக்ககத்தார் மறந்து விட்டார்களோ என்று நினைந்து நினைந்துத் தவியாகத் தவித்தாள்.

அண்டை அயலார்களும் தூங்கவில்லை! அவளுக்குத் தேறுதல் சொல்லும் சாக்கில், அவளுக்கு இன்னும் அதிக பயத்தையும் பீதியையும் கிளப்பி விட்டுச் சென்றார்கள். சில பிள்ளை வீட்டுக்காரர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு வேறு கலியாணம்கூடச் செய்து வைத்ததை யெல்லாம் சொல்லி அவள் மனத்தைக் கலக்கி விட்டார்கள்.

இந்த மன நிலையில் அவளுக்கு ஆறாவது மாதமே குறைப் பிரசவம் ஏற்பட்டு அவள் பிழைப்பதே மிகவும் அரிதாகி விட்டது. அப்பொழுதும்கூட வாஞ்சியோ, அவன் வீட்டாரோ வந்து அவளைப் பார்க்கவில்லை. திரும்பவும் தான் எப்படிப் புக்ககம் போகப் போகிறோம், தன்னை இன்னும் எப்படிக் கொடுமைப்படுத்துவார்களோ என்றெல்லாம் நினைத்து நடுங்கினாள்.

கடைசியில் ஒரு நாள் அவள் தகப்பனார் அவளை அழைத்துக் கொண்டு வாஞ்சியின் ஊருக்குப் புறப்பட்டார்! அழுது அழுது அவள் முகம் வீங்கியிருந்தது. அவள் தாயார் ''மீனு, இதோ பார்! இப்படிச் சதாசர்வ காலமும் அழுது கொண்டிருக்காதே. இந்த



ஜன்மத்திலே இவ்வளவுதான் கொடுத்து வைத்தது என்று மனத்தைத் தேற்றிக் கொள்; அப்படியும் உன்னை அவர்கள் படுத்தினால் துளசித் தேவியிடம் ''தாயே, என்னை இப்படியே பூவும் மஞ்சளுமாகக் கொண்டு போய்விடு என்று வேண்டிக் கொள். நான் உனக்கு வேறு என்ன சொல்லுவேன்?'' என்று கண்ணீர் வடித்தாள்.

3

மீனு புக்ககத்தில் நுழைந்தபோது 'வா' என்று அவளை எவரும் அழைக்கவில்லை. 'ஏன் இங்கு வந்தாய்?' என்று சண்டை போடாமல் விட்டார்களே என்று அவள் தகப்பனாருக்குத் திருப்தியாக இருந்தது.

அதற்குப் பிறகு ஒரு வாரம் ஆயிற்று. அவளுடன் வீட்டில் இருந்தவர்கள் முகம் கொடுத்துப் பேச ! அவளை எந்த வேலையும் செய்ய விடாமல் பார்த்துக் கொண்டார்கள்.

பிறகு இரண்டாவது தடவை 'உண்டாகி'த் தன் பிறந்த வீட்டுக்குப் போவதற்கு முதல் நாள் வாஞ்சியின் கையைப் பிடித்துக் கொண்டு, ''நான் திரும்பி வராமல் இருந்தால் உங்களுக்கு எல்லாம் திருப்தியாக இருக்கும், இல்லையா?'' என்றாள் மீனு.

வாஞ்சிக்குக் கோபம் கோபமாக வந்தது.


''இந்த மாதிரி பைத்தியக்காரத்தனமாக எல்லாம் பேசாதே ! ரொம்பத் தெரிந்தவள் மாதிரி...''

மீனு மேற்கொண்டு ஒன்றும் பேசவில்லை. அந்த முறை அவளுக்குப் பிள்ளைக் குழந்தை பிறந்த செய்தி கேட்டதும் வாஞ்சியின் தாயார் பறந்தோடி வந்தாள். மாட்டுப் பெண்ணைக் கொண்டாடினாள். குழந்தையை எடுத்து வைத்துக் கொண்டு சீராட்டினாள். புண்ணியாவாசனத்தை அமர்க்களமாக நடத்தி வைத்தாள்.

பன்னிரண்டாம் நாள் ஊருக்குப் புறப்படும் போது, ''இதோ பார் மீனு! இங்கேயே ஒரேயடியாக மாதக்கணக்கில் கேம்ப் போட்டுடாதே ! மூணும் மாசம் நல்ல நாளாகப் பார்த்துப் புறப்பட்டு வா!'' என்று சொல்லி விட்டு வாஞ்சியின் தாயார் தன் ஊருக்குப் போய்ச் சேர்ந்தாள்.

4

மீனு அந்தத் தடவை குழந்தையும் கையுமாக வீட்டுக்குள் நுழையுமுன், அவள் தாயார் இரண்டு சுமங்கலிகளை ஆரத்தி எடுக்கச் சொல்லி வீட்டுக்குள் அழைத்துக் கொண்டாள். தனக்குப் பேரனைப் பெற்றுக் கொடுத்ததால் மாமியார் மீனுவின் மீது ஒரேயடியாக அன்பு மழை



யைப் பொழிந்தாள். 'பின்னைத் தாய்க்காரி' என்று ஒரு வேலையும் செய்ய விடாமல் தானே எல்லாக் காரியங்களையும் செய்தாள். இப்படி மீனுவுக்கு ஒரே பாராட்டலும் பெருமையுமாக இருந்தது!

அன்று சித்ரா பௌர்ணமி; ஜன்னல் வழியாக அறையில் நிலவு பரவியிருந்தது. தென்றல் காற்றும் தன் பங்குக்குச் சோடை போகாமல் வீசிக் கொண்டிருந்தது.

பச்சை நரம்பு தெரியும்படி மீனுவின் உடம்பு இளைத்திருந்தாலும் அதில் புதிய அழகும் மினுமினுப்பும் இருந்தன. வெற்றிலையின் செம்மை உதடுகளில் ஒரு மோகன அழகைக் கொடுத்தது. குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

வாஞ்சிக்கு அவளுடைய உருவம் ஒரு 'திரு விளையாட'த் தந்தது; அவன் தேகம் புல்லரித்தது; படிக்க எடுத்த புத்தகத்தில் பார்வை பதிய மறுத்தது.

புத்தகத்தை மூடி வைத்து விட்டு அவன் அருகில் வந்து நின்றான். மீனு அவனை லட்சியம் செய்யாமல், மடிமீது இருந்த குழந்தையை மேலும் இறுக அணைத்துக் கொண்டாள்.

"இந்தச் சின்னப் போக்கிரி பிறந்தாலும் பிறந்தான்; நீ எங்க அம்மாவுக்குக் 'கட்டிக் கரும்பாய்' இனிக்க ஆரம்பிச்சுட்டே!" என்று கொஞ்ச ஆரம்பித்தான் வாஞ்சி.

"போகிறது! அந்த மட்டும் புண்ணியம் செய்தேனே, பிழைத்தேன். இல்லாவிட்டால்......?"

"இல்லாவிட்டால் என்னவாம்?"

"ஒரே நரகவேதனையை அனுபவிக்க வேண்டும்! எடுத்ததற்கெல்லாம் திட்டும் வசவும்தானே....!"

"மீனு! அதை யெல்லாம் மறந்துவிட்டு ஏதாவது நல்லதா, சந்தோஷமானதாப் பேசேன்!" என்று அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான் வாஞ்சி.

மீனு முகவாய்க்கட்டையைத் தோளில் இடித்துக் கொண்டு "இந்தப் பேச்சு இன்னும் எத்தனை நாள் வரையிலோ?" என்றாள்.

வாஞ்சி அவள் முகத்தைத் தன் கையால் தாங்கிக் கொண்டு, "மீனு, இதோ, என்னைப் பாரேன்! உன் மனத்திலே ஏதாவது குறை இருக்கா?" என்று கேட்டான்.

"......!" மீனு வாய் திறக்கவில்லை.

"சொல்லு, மீனு! அப்படி ஏதாவது இருந்தால் அதை நீக்கிவிட்டு மறு காரியம் பார்க்கிறேன்!"

வாஞ்சி கடமையைக் காத்து நிற்கும் படைவீரனைப் போலப் பேசினான்.

மீனு அவன் தோள் மீது சாய்ந்து கொண்டு "ஒரே ஒரு குறை இருக்கத்தான் இருக்கிறது! அதை..." என்று இழுத்தாள்.

"கண்டிப்பாகத் தீர்த்து வைக்கிறேன்!"

மீனு சிரித்தாள். அவளது மோகனப் புன்னகையும் கடைக்கண் பார்வையும் வாஞ்சியை இன்னும் மோகத்தில் ஆழ்த்தின.

"சொல்லு, மீனு.... வைராக்கியம் தோடு....ஈடு.....!"

"ஊஹூம்... அது எல்லாம் இல்லே!"

"தனிக் குடித்தனம் போகணும்பே...? அதுதானே....?"

அவன் முடிப்பதற்குள் அவள் வாயை அவனுடைய தந்தக் கை மூடிவிட்டது.

"அப்படியெல்லாம் நான் மனத்தாலே கூட நினைக்க மாட்டேன். அவ்வளவு நீசகுணம் படைத்தவள் அல்ல நான்!"

அவன் கையை இறுகப் பற்றிக் கொண்டு "பின் என்னதான் உன் மனக் குறை? சொல்லேன்!" என்று கெஞ்சினான் வாஞ்சி.

"சொன்ன பிறகு?"

"நிச்சயமாக மறுக்க மாட்டேன்!"


முதலில் சிறிது தயங்கினாள். "இப்படியே உங்க மடியில் தலை வைத்துக் கொண்டு, பூவும் மஞ்சளுமாக — நான் கண்ணை மூடி விடணும்னு இருக்கு!" என்றாள்.

வாஞ்சி சிரித்துக் கொண்டே, "நீ கண்ணை மூடி விட்டால் பின்னைக் கண்ணன் பாடு, என்பாடு என்னாகிறது? அடு! இப்படி யெல்லாம் பேசாதே!" என்றான்.

"இல்லே.... உங்களுடைய பிரியத்துடனேயே நான் கண்ணை மூடிவிட்டால்தான் என் நெஞ்சு வேகும்!" என்றாள் திரும்பவும்.

"மீனு! நான் என்றும் உன்னிடத்தில் பிரியமாகத்தான் இருப்பேன்!"

"ஆமாம்! இங்கே இப்போது பேச்சு இப்படி! அப்புறம் அம்மாவைப் பார்த்தால் அப்



இலங்கை செட்டியார்கள் வர்த்தக சங்க வருடாந்திரக் கூட்டத்தில் அதன் தலைவர் திரு ராம. பழநியப்பச் செட்டியார் தலைமை உரை நிகழ்த்துகிறார். படத்தில் திரு மகாராஜ பிள்ளை எம். எல். ஸி. உணவு அமைச்சு நிரந்தரக் காரியதரிசி திரு கோ. ஆழ்வாப் பிள்ளை, தலைவர் திரு பழனியப்பச் செட்டியார், இணைக் காரியதரிசி திரு மா. மெய்யப்பன், திரு எஸ். கருணாநிதி, திரு எஸ். வள்ளியப்ப செட்டியார் ஆகியோரைக் காணலாம்.

போது பேச்சே வேறு! எனக்கு உங்களைத் தெரியாதா, என்ன?''

வாஞ்சி சிரித்துவிட்டுப் பேசாமல் இருந்து விட்டான்.

அதற்குப் பிறகு மீனுவுக்குக் குடும்பப் பொறுப்பு அதிகரிக்கத்தான் செய்தது. ஆனு லும் அது அவ்வளவு கஷ்டமாக உறைக்க வில்லை. நாளடைவில் பெரியவர்கள் ஒவ்வொருவராக, பழுத்த இலை போல் உதிர்ந் தார்கள். வீட்டில் குழந்தைகள் மூவரும் வளர்ந்து பெரியவர்கள் ஆனார்கள்.

பையன் இருவருக்கும் உள்ளூரிலேயே வேலை கிடைத்ததும், சரஸ்வதியை உள்ளூரி லேயே கலியாணம் செய்து கொடுத்ததும் அவளுடைய அதிர்ஷ்டம்தான் என்று எல் லோரும் சொன்னார்கள். முதலில் அம்மா பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த வாஞ்சி இப்போது மீனுவின் பேச்சுக்கு இரண்டு சொல்வதில்லை !

அறுபதாம் கலியாணத்தன்றுகூட வேடிக் கையாக வாஞ்சி, ''என்ன மீனு! உனக்கு ஏதாவது மனக்குறை இருந்தால் சொல்லி விடு!'' என்று கேட்டார்.

''எனக்கு என்ன குறை? நீங்கள் இருக் கும்போதே நான் பூவும் மஞ்சளுமாகக் கண்ணை மூடிவிட்டால்....!''

''பைத்தியம்! நான் என்னடி செய்வேன், அப்புறம்?''

''உங்களுக்கென்ன, சந்நியாசிக் கட்டை! பெண்ணுய்ப் பிறந்தவளைப் போலவா....?'' என்று கூறினாள் மீனு சிரித்துக் கொண்டே.

அந்தப் பேறு தனக்கு எப்படியும் கிடைக் கும் என்றே இதுகாறும் நம்பி யிருந்தாள். ஆனால் அவள் ஆசைக் கனவு இப்போது குலைந்து விட்டது! தான் சின்னஞ்சிறு வயதி லிருந்து மனக் கோட்டை கட்டி வந்த பூவும் மஞ்சளுமாகக் கண்ணை மூடுவது என் பது இனிமேல் நடக்க முடியாது! அந்த ஏமாற்றத்தை அவளால் தாங்க முடிய வில்லை! ஆனாலும் அதை அவள் எவரிடம் சொல்லுவாள் ?

5

நாகராஜன், ''அண்ணா! அதெல்லாம் இல்லை! அடையாறு வீட்டை அம்மா பேருக்கு எழுதி வைத்துவிடுவோம்! அப்பாகூட அதை அம்மா பேருக்கு எழுதி வைத்துவிட வேண் டும் என்று ஒரு நாள் சொல்லவில்லையா....?'' என்றான்.

''சரியம்மா! அதையும் செய்து விடறேன். நாங்க உன் வார்த்தைக்கு மாறு சொல்ல மாட்டோம்மா! நீ அழாதே அம்மா!''

ரகு இரும்புப் பெட்டிச் சாவியை எடுத் துக் கொண்டு வந்து, ''இந்தாம்மா, இதை முந்தானையில் முடிந்து கொள், பத்திரம் !'' என்று சாவிக் கொத்தைக் கீழே வைத்தான்.


மீனு தன் குழந்தைகளும் பேரக் குழந்தை களும் தன்னிடம் காட்டும் அன்புக்கு மனம் கலங்கினாள். அவர்களையே வெறிக்க வெறிக் கப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பிள்ளைகள் இருவரும் அம்மாவைத் திருப்தி செய்துவிட்டோம் என்று நினைத்துக்கொண்டு சாப்பிட உள்ளே போனார்கள். குழந்தை களும் பெரியவர்களுமாகக் கூடத்தில் உட் கார்ந்து கொண்டு 'கல்யாணம் போல' ஆர வாரத்துடன் சாப்பிட்டார்கள். எல்லாருக் கும் மீனுவின் நினைவு வர ஒரு மணி நேரம் ஆயிற்று.

''அம்மா, உனக்குப் பால் மட்டும் போதுமா ?'' என்று கேட்டுக் கொண்டே ரகு அறைக்குள் வந்தான்.

வந்து பார்த்தால் மீனாட்சி தூங்குவது போலப் படுத்திருந்தாள்; கூப்பிட்டான்; அசைத்துப் பார்த்தான்; உயிர் போயிருந்தது.

மறு நாள் மூன்று சாஸ்திரிகள் வெகு நேரம் சாஸ்திரங்களை யெல்லாம் எடுத்து வைத்துக் கொண்டு ஆராய்ந்தார்கள். மீனு வைச் சுமங்கலி என்று சொல்வதா, விதவை என்று சொல்வதா என்று வெகுநேரம் வாக்குவாதம் செய்தார்கள். கடைசியில் தீர்மானமாக, ''ரகு, உங்க அம்மா பூவும் மஞ்சளுமாகவே போய் விட்டாள். அதனால் அவள் சுமங்கலியேதான்!'' என்று கூறி முடித்தார் !



ஹ்யூலெட்ஸ் மிக்சர்

அஜீரணத்தை விரைவில் அகற்றுகிறது

கட்டிப்போட்டாற்போல், ஒரே இடத்தில் அமர்ந்தவாறே உங்கள் அலுவல்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் உங்கள் வேலை அப்படியானது. இக்காரணத்தினால் உங்களைப் போன்றவர்கள் அடிக்கடி அஜீரணத்தினால் அவஸ்தைப்பட நேரிடுகிறது. ஆனால் நீங்கள் அவ்வாறு கஷ்டப்படத் தேவையில்லை. ஹ்யூலெட்ஸ் மிக்சர் வயிற்று உபாதையை விரைவில் போக்கி, நிரந்தரமாக குணமளிக்கிறது; வலியுண்டாக்கும் அமிலங்களை அகற்றி, ஜீரண கோசத்திற்கு அதன் வேலையை சரிவர செய்வதற்கேற்ப பாதுகாப்பளிக்கிறது.

ஹ்யூலெட்ஸ் மிக்சர் குழந்தைகளின் வயிற்றுக் கோளாறுகளுக்கும் கூட உகந்தமானது. வயிற்றுப் போக்குக்கு அபினி சேர்ந்த ஹ்யூலெட்ஸ் மிக்சர் குணமளிக்கும்.




ஹ்யூலெட்ஸ் மிக்சர் ஜீரணத்திற்கு சிறந்தது

C. J. ஹ்யூலெட் & ஸன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
86/A, சானியப்ப நாயக் தெரு, மதறாஸ்-3

IWT/CJH-1926





ஆசைமுகம்

மலையாளக் கதை:

எம்.டி.வாசுதேவன் நாயர்

அவன் கதவைத் திறந்தான். மங்கிய ஒளியில் வந்தவனை அவனால் சரியாக அடையாளம் புரிந்துகொள்ள முடியவில்லை. துரையின் பங்களாவிலிருந்து யாராவது வந்திருக்கலாம் என்று எண்ணினான்.

''யார்?''

''நான்தான்.''

அதே நேரத்தில் வந்தவன் முகத்தில் ஒளி பரவியது. ஒரு கணத்துக்கு அவன் திடுக்கிட்டான். யார் இது? அவன் திடுக்கிட்டது ஒரு கணநேரத்துக்குத்தான். அடுத்தகணமே ஆச்சரியத்துடன், ''யார் அது? தம்பியா ?'' என்று கேட்டான்.

வந்தவன் மிகப் பிரயாசைப்பட்டு முறுவலித்தான். பிறகு நடுங்கும் குரலில், ''ஆம், அண்ணா! என்னை அடையாளம் கண்டுகொண்டு விட்டாற்போல் இருக்கிறதே!'' என்றான்.

வேகமாக அடித்த மழைக் காற்று 'போர்டிகோ'வையும் தாண்டி வந்து குளுகுளுவென்று வீசியது. மின்சார வெளிச்சம் அங்காத்தில் ஆடியவாறு பால் நிற ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தது. முற்றத்திலும் அதைத் தொட்டாற்போலிருந்த இடங்களிலும், நிழலாடிக் கொண்டிருந்தது.

அவனது பதற்றம் குறைந்தபாடில்லை. மெதுவான குரலில், ''வா! வந்து உள்ளே உட்காரு!'' என்றான்.

வாசலில் தொங்கிக் கொண்டிருந்த பூப்போட்ட திரையைக் கிழிப்பவன் போல விலக்கிக் கொண்டு அவன் உள்ளே நுழைந்தான். தம்பி அவனைத் தொடர்ந்தான்.

''உட்காரு!''

திறந்த சாளரங்களின் வழியே குளிர்காற்று வரவேற்பு அறையிலும் வீசிக் கொண்டிருந்தது. கம்பிகளின் இடுக்கு வழியே கைகளை வெளியே விட்டுச் சாளரக் கதவுகளைச் சாத்திக் கொண்டே, ''உட்காரு!'' என்று மீண்டும் சொன்னான் அவன்.



வரவேற்பு அறையின் நடுவில் தம்பி வெட வெடவென்று நடுங்கியவாறு நின்று கொண்டிருந்தான். தரையிலே வரையப்பட்டிருந்த சிவப்பும் நீலமும் கலந்த கோடுகளையும், மெத்தை தைத்த நாற்காலிகளையும் எழில் மிகுந்த ராதா கிருஷ்ண மூர்த்தியையும் தம்பி இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பதை அண்ணன் கண்டான். மேஜைக்குப் பின்னாலிருந்த பிரம்பு நாற்காலியை முன்னுக்கு இழுத்துக் கொண்டு அவன் அமர்ந்து கொண்டான். அப்பொழுதும் தம்பி வரவேற்பு அறையில் உள்ள மனோரம்மியமான பொருள்களை உந்தும் ஆவலுடன் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

மூன்றாம் தடவையாக அவன், ''உட்காரேன்!'' என்றான்.

திடுதிப்பென்று இவ்வுலக நினைவு வந்து அண்ணன் சொல்வதைக் கேட்டவன் போல, கண்ணாடி போடப்பட்ட மேசைக்கருகில் கிடந்த முக்காலியில் தம்பி கூனிக் குறுகிக் கொண்டு உட்கார்ந்தான்.

தம்பியிடம் எப்படிப் பேசுவது, என்ன பேசுவது என்று அண்ணன் யோசித்துக் கொண்டிருந்தான்.

''கிராமத்திலிருந்துதான் வருகிறாயா?''



''இல்லை.....விருந்து!''

''இப்பொழுதெல்லாம் அங்குதான் இருக்கிறாயா?''

''ஆமாம்.''

எங்கே வேலை செய்கிறான் தம்பி என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ள அண்ணனுக்கு ஆசைதான். இருந்தாலும் இனம் தெரியாத அச்சம் ஒன்று அவனை அப்படிக் கேட்க விடவில்லை; வாயில் வந்த சொற்களைத் தடுத்து நிறுத்தி விட்டது.

தம்பி அப்பொழுதும் தலை குனிந்த வண்ணம், தரையில் போடப்பட்டிருந்த வண்ண வண்ணமான கோடுகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். அண்ணன் அவனைக் கூர்ந்து கவனித்தான். ஒன்பது ஆண்டு இடைவெளி மனித உடலில் என்ன என்ன மாற்றங்களையெல்லாம் உண்டு பண்ணி விடுகிறது? சிந்தித்துப் பார்க்கப் பார்க்க அவனுக்கு வியப்பாக இருந்தது: உடல் உலர்ந்து துரும்பாகியிருந்தது. சதையில் ஏகச் சுருக்கங்கள். கழுத்துக்குக் கீழே இரண்டு எலும்புகள் புடைத்து நின்று கொண்டிருந்தன கன விகாரமாக: அவன் முகத்தைப் பார்த்து முப்பத்திரண்டே வயது நிரம்பிய வாலிபன் என்று அவனை யாராவது சொல்ல முடியுமா? காலம் விளையாடியிருந்த பல விளையாட்டுக்களும் அவன் முகத்தில் தெளிவாகத் தோற்றமளித்துக் கொண்டிருந்தன.



ஆண்டவனே! தம்பி எத்தனை உருமாறி விட்டான்! அதுவும் இந்த ஒன்பதே ஆண்டுகளுக்குள்! அண்ணன் மனத் திரையிலோ தேசு மிகுந்த வாலிபனின் எழிற் சித்திரமாகத் தம்பியின் உருவம் வரையப்பட்டிருந்தது. சிவந்த கன்னங்கள், ஒளி பளிச்சிடும் கண்கள். விழிகளின் ஓரத்தில் மை கட்டியிருந்த கருமையின் ஒளியே ஒரு தனி அழகு. அடர்ந்த கனத்த சுருட்டைமயிர். நெளி நெளியாகப் பின்னுக்கு அவற்றை வாரி ஒதுக்கிக் கொண்டிருந்த விதத்தை இன்றும் பார்த்துக் கொண்டிருக்கலாம். அதைப் பார்த்து அவன் உள்ளத்திலே பொறாமை கொழுந்து விட்டெரிந்த காலம் ஒன்று உண்டு.

அம்மா சொல்லுவாள்: 'சின்னவன் தலை என்னைக் கொண்டிருக்கிறது. ராஜுவுக்கு மயிர் அவ்வளவு அடர்த்தி இல்லை... அப்பாவைப் போலவே ஒரு வேளை சீக்கிரமாகவே அவனுக்கும் தலைமழுக்கை விழுந்து விடுமோ, என்னவோ?'


இப்பொழுது அந்தக் கறுத்துச் சுருண்ட அடர்த்தியான தலை மயிர் அத்தனையுமே அநேகமாக உதிர்ந்து விட்டது.

மிகுந்த மன வருத்தத்துடன் அவன் மீண்டும் நினைத்துப் பார்த்தான், எத்தனை விரைவில் மனிதனிடம் மாறுதல் ஏற்பட்டு விடுகிறது என்று!

எதிர்த்தாற்போல் இருந்த நிலைக் கண்ணாடியில் ராஜுவுக்குத் தன் உருவம் தெரிந்தது. சிறு பிராயத்தில் அவன் மிகவும் ஒல்லியாக இருந்தான். இப்பொழுது நன்றாகப் பருத்துக் கொழுத்து விட்டான். அத்தனை சதைக் கனத்தைத் தாங்க அவன் உடல் சிரமப்படுவதாகக் கூடத் தோன்றியது பார்ப்பதற்கு. தாடைக்குக் கீழே தொங்கும் சதைச் சுருக்கங்கள் சிற்சில இடங்களில் கழுத்தையே கூட மறைத்தன. அவன் முகத்திலே இன்றும்கூடச் செம்மை படர்ந்திருக்கிறது. நெற்றிப் பொட்டுக்களின் இருபுறமும் நீல நரம்புகள் ஓடுவது நன்றாகத் தெரிந்தது. அவன் பருத்திருந்தாலும், இளமை குன்றியவனாகத் தோன்றவில்லை. தம்பி அவனைக் காட்டிலும் ஐந்து வயது இளையவன். தம்பிக்கு ஐந்து வயதாயிருக்கும் பொழுது, அம்மாவுக்கு ஒரு பெண் பிறந்தது. பூமியை ஸ்பரிசித்து விட்டு மரித்துப் போன அந்தப் பெண்ணின் பேச்சு எழும்பொழுதெல்லாம், 'அப்பொழுது சின்னவனுக்கு ஐந்து வயது' என்று அம்மா சொல்வதுண்டு.

அவன் மீண்டும் தம்பியைப் பார்த்தான். வர உரிமை இல்லாத இடத்துக்கு அவன் உத்தரவின்றி வந்துவிட்டது போன்ற பாவனை அவனது பார்வையில் தொனித்தது. நெற்றியில் முத்திட்ட வியர்வையை விரல்களால் வழித்தெறிந்தான். உள்ளத்திலிருந்து அகற்ற முடியாத சில எண்ணங்களோடு ஒரு கடுமையும் கோடிட்டுப் படருவதாக அவனுக்குத் தோன்றியது. திடீரென்று அவனுக்கு நினைவு வந்தது: 'அட, தம்பியைச் சாப்பிடச் சொல்லவில்லையே!' உள்புறம் திரும்பிக் கதவைப் பார்த்தவண்ணம், ''பாரி!'' என்று குரல் கொடுத்தான். தம்பி தலையைத் தூக்கி வாசற் படியைப் பார்த்தான். பிறகு பழையபடியே தலையைக் குனிந்து வண்ணத் தரையைப் பார்க்கலானான்.

மீண்டும் ஒரு முறை அண்ணன், ''பாரி!''



என்று அழைத்தான். அழைப்புக் குரலைக் கேட்டு ஒரு வேலையாள் தலையை நீட்டினான். இடுப்பிலே இறுகிய அழுக்கேறிய காக்கிச் சட்டை. முகத்திலே கடுகடுப்பு.

"அம்மா சாயந்திரமே மாடிக்குப் போய்ப் படுத்து விட்டாங்க. அவங்களுக்கு உடம்பு சுகமில்லேன்னு சொல்லிக்கிட்டிருந்தாங்க!" என்றான் அவன்.

"எங்கள் இருவருக்கும் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்!"

"இல்லே, நான் சாப்பிடுவதில்லே!" என்று குறுக்கிட்டான் தம்பி.

"இங்கே எல்லாமே தயாராக இருக்கின்றன. யோசிக்காதே!"

"இல்லே, கொஞ்ச நாட்களாக நான் இரவு வேளைகளில் உணவு அருந்துவதில்லை. 'டயட்' பண்றேன்!'"

ராஜுவுக்கு நினைவு ஓடியது. குழந்தைப் பருவத்தில் சாப்பாட்டு விஷயத்தில் தம்பியிடம் போட்டி போட யாராலுமே ஆகாது. ஒவ்வொரு பண்டிகையின் பொழுது தம்பி ஒரே மூச்சில் பத்து நேந்திரம் பழங்களை விழுங்கியிருக்கிறான்.

"அப்படியானால் காப்பியும் ரொட்டியும் சாப்பிடேன்!"

தம்பி தன் மௌனத்தின் மூலம் சம்மதம் தெரிவித்தான்.

சமையற்காரன் சென்ற பிறகு, ராஜன் பட்டும் படாமலும், "பாகி ஒருவேளை தூங்கி விட்டாளோ, என்னவோ?" என்றான்.

அந்தக் கட்டிடத்தில், மாடியில் உள்ள ஏதோ ஓர் அறையிலிருந்து இலேசாக ரேடியோப் பாட்டு வந்து கொண்டிருந்தது.

"கூப்பிட வேண்டாம்!" அண்ணனுக்கு ஆறுதல் அளிக்கும் முறையில் பேசினான் தம்பி. "நான் வந்து...." சட்டென்று எதையோ நினைத்துக் கொண்டவன் அந்தப் பேச்சை அப்படியே மாற்றி, "எத்தனை குழந்தைகள்?" என்று கேட்டான்.

"இரண்டு. இரண்டும் பெண்கள். சாயந்திரமே தூங்கிப் போய் விடுகிறதுகள்!"

தன் தம்பியிடம் எத்தனையோ கேட்க ஆசை தான். எங்கே வேலை பார்க்கிறான்? கல்யாணம் செய்து கொண்டானா? எத்தனை குழந்தைகள்? என்று. ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னால் போனவன். அதற்குப் பின் எதுவுமே அவனுக்குச் சரியாகத் தெரியாது. ஊரில் பலவிதமாய்ப் பேச்சு அடிபட்டதோடு சரி! காற்றைக் காட்டிலும் கடுகிப் பறந்த செய்திகள், காற்றோடு காற்றாகவே போய் விட்டன.

அம்மா இறந்து விட்ட செய்தி கேட்டு அவன் ஊருக்குப் போனான். அப்பொழுது தம்பியைப் பார்க்கலாம் என்று நினைத்தான். நினைத்தானா? பார்க்க நேர்ந்து விட்டால் என்ன செய்வது என்று பயந்தான். ஆனால் அவன் வரவில்லை.

"எங்கே போய்த் தொலைந்தானோ? அம்மாவுக்குக் கொள்ளி வைக்கக் கூட வரவில்லே! காலிப் பயல்!" — சடலம் வீட்டில் கிடந்த பொழுதே துக்கம் விசாரிக்க வந்த ஒரு கிழவன் சொன்னான்.

ராஜன் அதைக் கேட்டான். அவன் மனம் முணுமுணுத்தது. 'அவன் வரமாட்டான், கட்டாயம் வர மாட்டான்!' என்று.

ஆம். ஞாபக மறதி என்னும் இருட்குகையில் அந்த நாட்களின் நினைவு அப்படியே உறங்கிக் கொண்டிருந்தால் சரி. அவனுக்குத் தன் தந்தையும் கொள்கையும் நினைவுக்கு வந்தன.

"ஒருபொழுதும் திரும்பிப் பார்க்காதே! முன் வைத்த காலைப் பின் வைக்காதே!"

காரணம், பிந்திய கால் சுவடுகளிலே, ரத்தம், வியர்வை, கண்ணீர் ஆகியவையெல்லாம் காணப்படக் கூடும்.

அவன் நாற்காலியிலிருந்து எழுந்தான். சிகரெட் பெட்டியிலிருந்து ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான்.

"குளிக்கிறாயா?"

"வேண்டாம்!"

மீண்டும் சில கணங்கள் குளிர்ந்து இறுகி உறைந்து விட்டன.

சுழன்று சுழன்று செல்லும் சிகரெட்டின் புகையைப் பார்த்தவண்ணமே, "வெகு நாட்களாக உன்னைப் பற்றி ஒரு சமாசாரமுமே தெரியவில்லையே!" என்றான்.

தம்பி ஒரு பெருமூச்சு விட்டு அதை ஆமோதித்தான்.

ராஜுவுக்கு இன்னமும் ஆச்சரியமாக இருந்தது. எத்தனை விரைவில் அவர்கள் இருவரும் பிரிந்து விலகி விட்டார்கள்!

குழந்தைப் பருவத்தில் தம்பி உடன் பிறந்தவனைக் காட்டிலும் அண்ணனுக்கு நண்பனாகத் தான் திகழ்ந்தான்.

எத்தனை தடவைகள் அம்மாவுக்குத் தெரியாமல் காசு திருடித் தித்துச்சம்மா கடையிலிருந்து மிட்டாய்கள் வாங்கித் தின்றிருக்கிறார்கள் இருவரும்! அகப்பட்டுக் கொண்ட பின், இருவருமே அடியும் உதையும் பட்டிருக்கிறார்கள்! கிராமத்துப் பாறைக் குன்றுகளில் ஏறி அவர்களிருவரும் வானத்தை நோக்கிக் கல்லெறிந்து விளையாடியிருக்கிறார்கள். மாந்தோப்புகளில் சுற்றி மாங்காய் அடித்துத் தின்றிருக்கிறார்கள். பள்ளிக்கூடம் போயிருக்கிறார்கள். ஊர் சுற்றித் திரிந்திருக்கிறார்கள்.

தம்பி அண்ணனைக் காட்டிலும் வயதில் இளைத்து வருஷம் சின்னவனாயிருந்தாலும் அண்ணனை ஆட்டிப் படைத்திருக்கிறான். தம்பி சொல்வதைக் கண்களை மூடிக் கொண்டு அண்ணன் கேட்டிருக்கிறான். தம்பிதான் பலசாலி. விளையாட்டுகளிலும் அவனுக்குத் தான் வெற்றி.

அண்ணன் இரண்டாம் வகுப்பில் இரண்டு வருஷமும் நாலாம் வகுப்பில் இரண்டு வருஷமும் உட்கார்ந்து விட்டான். அதற்குள் தம்பி அவனோடு வந்து சேர்ந்து கொண்டு விட்டான்.

அம்மா சொல்லிச் சொல்லிக் காட்டுவாள். "அசடு! கடா மாடு! தம்பியைப் பார்த்தாயா? அவன் புத்தி உனக்கு எங்கே வரப் போகிறது?" என்பாள்.

தம்பி படிப்பதற்குத் தன்னோடு தன் வகுப்புக்கு வந்து விட்டானே என்பதற்காக அண்ணன் பொருமைப்படவில்லை. காரணம், அவனோடு மாந்தோப்புக்கு வந்து குறி பார்த்துக் கல் வீசி மாங்காய் அடிக்கத் தம்பி அவனுக்கு உறுதுணையாயிருந்தான்; நண்பர்களோடு அடிக்கடி சண்டை ஏற்பட்டால் கைகொடுத்து உதவி வந்தான்.

உயர் நிலைப்பள்ளியிலும் அண்ணன்—தம்பி இருவரும் சேர்ந்தே படித்தார்கள். படிப்பில்

'பாலி, பாலி, பாலீ!'

வாழ்க்கையில் ஓர் உவப்பு, ஒருவித உணர்ச்சி வேகம், ஒரு துடிதுடிப்பு— இவைதான் பஞ்சாபியர்களின் விசேஷ குணங்கள். இவை அவர்களுடைய நாட்டு நடனமான 'பங்கரா'வில் நன்கு வெளிப்படும். நாட்டியமாடுவோர், 'பாலீ, பாலி, பாலீ' என்று அடிக்கடி களிப்புடன் கூவுவார்கள். அன்பு மொழியில் அதற்கு 'பிரேமைக்குரிய' அல்லது 'பிரியமான' என்று பொருள். இன்பவெறியில் திளைக்கும் இந்த மக்களுக்கு அரவிந்த் ஆடைகள் எவ்வளவு பிரேமைக்குரியனவாக இருக்கின்றன!

பாப்லின்கள்

மர்ஸரைஸ்ட் சான்போரைஸ்ட் வெள்ளை பாப்லின்	: கோல்ட் ட்ரிங்க்
	: விஜு மாஸ்டர்
மர்ஸரைஸ்ட் சான்போரைஸ்ட் கலர் பாப்லின்	: ட்ரூ வேர்ட்
	: டே ட்ரீம்

வேஷ்டிகள்

மர்ஸரைஸ்ட் வேஷ்டிகள்	: சிவரஞ்சனம் ; மருதூர் ராஜ ஸ்பெஷல் ; காம்ராஜ்
மர்ஸரைஸ்ட் கேஸ் வேஷ்டிகள்	: ராணி ஸ்பெஷல்

லான்கள், ட்வில்கள், கேம்பிரிக்குகள்

மர்ஸரைஸ்ட் லான்	: எவரெஸ்ட் : 5331
மர்ஸரைஸ்ட் ட்வில்	: லேடீ ஆப் பெங்கால்
ப்ரின்டுகள்	: ப்ரின்டெட் லான்கள்

வாயில்கள் ; பாப்லின்கள் ; ஸ்கிரீன் ; ப்ரின்ட் புடவைகள்.

செக்குப் புட்டாக்கள்

Arvind Quality FABRICS

அரவிந்த்

மில்ஸ் லி., அஹமதாபாத்-2.

·SANFORIZED·



சின்னவன் சூடிகையாயிருந்தான். ஒருவேளை அதனால் தானோ என்னவோ, எல்லோருமே அவனிடம் அன்பாயிருந்தார்கள். அவன் விஷமம் பண்ணினாலும் எல்லோரும், "அவன் சின்னவன்தானே? அவனுக்கு இருக்கும் அறிவு உனக்கு எங்கே இருக்கிறது?" என்று கேட்டு மடக்கி விடுவார்கள்.

பெரிய மாமா கூட அவன் தம்பியிடம் தான் அதிகப் பிரியம் வைத்திருந்தார்.

சமையற்காரன் பளபளவென்றிருந்த 'ட்ரே'யில் காப்பிக் கோப்பையும், தட்டில் ரொட்டியும் எடுத்துக் கொண்டு வந்தான். அவன் 'ட்ரே'யை ஜன்னல் விளிம்பில் வைத்து விட்டு மேஜை மீதிருந்த பத்திரிகைகளை அகற்றினான். அப்பொழுது தம்பியின் பார்வை கண்ணாடிக்குக் கீழே இருக்கும் படத்தில் பதிந்திருப்பதை ராஜன் கண்டான். வெண்ணெய் தடவியிருந்த ரொட்டித் துண்டுகள் நிறைந்த தட்டைச் சமையற்காரன் மேஜை மீது வைத்ததும், அதன் அடியில் படம் மறைந்துவிட்டது.

"நீ சாப்பிடு. நான் சாப்பிட இன்னும் நேரமாகும்."

சமையற்காரன் மேஜையைத் தம்பிக்கு அருகில் நகர்த்தினான்.

தம்பி அந்த வெள்ளித் தட்டைச் சிறிது நகர்த்திவிட்டு அப்படத்தைப் பார்க்கலானான். தம்பியின் இச்செய்கையைக் கவனித்த ராஜன், சுவரில் மாட்டியிருந்த படமொன்றைப் பார்க்கலானான். அதில் ஒரு புலி ஆற்றில் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது. ஒரு மூலையில் கடிகாரம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அதன் பெண்டுலத்தில் ஓர் அழகி ஊஞ்சலாடுவது போல் அமர்ந்திருந்தாள். பெண்டுலம் ஆடிக் கொண்டிருந்தது. அவளும் ஆடிக் கொண்டிருந்தாள். அதையும் படத்தையும் மாறி மாறிப் பார்க்கலானான்.

"ஒரு பொழுதும் திரும்பிப் பாராதே!"

அவனது மனவெழுச்சியைத் தம்பி பார்ப்பதாகத் தோன்றியது. எழுந்து மேலண்டைப் புறத்து ஜன்னலருகில் போய் நின்றான். சிறிது நேரத்துக்கு முன்பு சாத்திய ஜன்னலை மீண்டும் திறந்தான். வேகமாக அடித்த காற்று அவன் முகத்திலறைவது போலச் சீறிக் கொண்டு உள்ளே வந்தது. வெளியே ஜன்னலுக்குக் கீழே புதராக மண்டிக் கிடந்த சம்பங்கிக் கொடிகளைச் சுற்றி மின்மினிப் பூச்சிகள் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்தன.

தொலைவில் சாலையையும் தாண்டி ஒரே கொம்மாளமாயிருந்தது. அதன் மத்தியில் கிறிஸ்துமஸ் கேக்கைப் போன்று ஒரு மாளிகை காணப்பட்டது. இன்னும் சற்றுத் தொலைவில் சஹ்ய பர்வதத்தின் சிகரங்களில், கருமுகில்களும் வெண்முகில்களும் ஆரத் தழுவி விளையாடிக் கொண்டிருந்தன.

மேலேயிருந்த படுக்கை அறையிலிருந்து இனிமையான வேணுகானம் குளிர்ச்சியான அந்த நேரத்தில் காதுக்குக் குளிர்ச்சியாக ஒலித்துக் கொண்டிருந்தது. ராஜன் செவிமடுத்துக் கேட்டான். பாரி தூங்கவில்லை. அப்படியானால் அவளைக் கூப்பிடத்தான் வேண்டுமா?

திரும்பித் தம்பியைப் பார்த்தான். அவன் உதடுகளில் காப்பிக் கோப்பை அப்படியே நின்று விட்டிருந்தது. அப்படத்தின் மீது



அவன் பார்வை ஆடாமல் அசையாமல் அப்படியே படிந்திருந்தது. காது.....?

பாகி இப்போது வந்து தம்பியைப் பார்த்தால்.....?

கல்யாணத்துக்குப் பிறகு கணவனும் மனைவியும் வெகு ஜாக்கிரதையாகவே பேசிப் பழகி வந்தார்கள். பேச்சுப் போக்கில் தம்பியின் பேச்சு எழுந்து விடக் கூடாதே என்று இருவருமே அளந்து பேசி வந்தார்கள்.

குழந்தைப் பருவத்தில் பாகியும் தம்பியிடம் தான் அதிகப் பிரியம் காட்டி வந்திருக்கிறாள். ராஜுவை அவனுடன் சேர்த்துக்கொண்டு கேலிகூடச் செய்திருக்கிறாள். அதுமட்டுமா? அவனுக்கு ஒரு பட்டம் வேறு சூட்டியிருக்கிறாள்; எருமைக்கடாவென்று!

கோடை விடுமுறையின் பொழுது ஒரு மாதம் பெரிய மாமா வீட்டுக்குப் போயிருப்பார்கள் அவர்கள். பக்கத்தில்தான் இருந்தது பெரிய மாமாவின் வீடு. அங்கே போவதென்றால் அவர்களுக்கு ஒரே கொண்டாட்டம். பெரிய மாமா நல்ல பணக்காரர். பம்பாய்க் கம்பெனியொன்றில் பெரிய அதிகாரியாயிருந்தார். வயல்களை ஒட்டினாற் போலிருக்கும் மாளிகை போன்ற வீடு அவர் கட்டியதுதான்.

நிலவு எரிக்கும் இரவுகளில் முற்றத்தில் உட்கார்ந்து தம்பி கதைகதையாகச் சொல்லுவான். அவனுக்குப் பல கதைகள் தெரியும். அரசகுமாரி பறவையாக மாறிய கதை, தொட்டதெல்லாம் பொன்னாகும் கதை — இன்னும் எத்தனை எத்தனையோ கதைகள்! பாகி அதையெல்லாம் கவ சுவாரசியமாகக் கேட்டு அநுபவிப்பாள். அவனுக்கு நன்றாகப் பாடவும் தெரியும். பக்கத்து வீட்டில் குடியிருந்த வாத்தியாரம்மா அம்மணி அம்மா அவனுக்குப் பாட்டு சொல்லிக் கொடுத்து வந்தாள்.

கதை சொல்லும் பொழுது அண்ணன் அங்கே வந்து உட்காருவது அவர்களுக்குப் பிடிக்காது. தம்பி ஏதும் சொல்ல மாட்டான். ஆனால் பாகி மட்டும், "ராஜுவைக் கொஞ்சம் நகர்ந்து உட்காரச் சொல்லேன்!" என்பாள்.

அவன் அவளை வெறுக்க முயன்றான்.

ஒரு தடவை பாகியின் அம்மா சொல்வதை அவன் கேட்க நேர்ந்தது. 'சின்னவன் படித்துக் கெட்டிக்காரனாவான். என் பாகியை அவனுக்குத்தான் கொடுப்பதாயிருக்கிறேன்!'

அவன் இன்னும் அதிகமாக அவளை வெறுக்க முயன்றான்.

ஆனால் சிவந்த கிப்பாவில் கட்டுண்ட பாகியின் கூந்தல் மணமும் ரோஜாக் கன்னத்தில் எடுப்பாகக் காட்சியளித்த மச்சமும் அவனுக்கு மிகவும் பிடித்தவை. அவளது மேனி அழகு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்து வந்தது.

'பாகி தம்பிக்காமே!' யோசித்துப் பார்த்த பொழுது அவனுள்ளத்தில் வாரி மீதூர கோபம் கோபமாக வந்தது.

ஒரு நிகழ்ச்சி நினைவு வந்தது. அவன் யாருக்கும் தெரியாமல் ஒரு முட்டாள்தனம் செய்தான். அப்பொழுது அவன் ஒன்பதாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். மாடியிலே யாரும் இல்லை. அவன் பாகியின் அறைக்குச் சென்றான். அவளது சிவப்புப் பாவாடையை எடுத்துத் தன் கால்சட்டையின் மேலேயே அணிந்து அழகு பார்த்துக் கொண்டான். அவனுக்கு மயிர்க் கூச்செறிந்தது. அந்தப் பாவாடையிலிருந்து கமகமவென்று சோப்பு வாசனை வந்தது. ஆனால் ரகசியம் அம்பலமாகி விட்டது. கையும் மெய்யுமாகப் பிடிபட்டான். எல்லோரும் செய்த கேலியில், அவன் தலைநிமிர்ந்து நடப்பதே சிரமமாகி விட்டது. பாகியின் எதிரே போவதற்கே அவனுக்குத் துணிவு கொள்ளவில்லை. அப்பப்பா! எத்தனை பேருடைய பரிகாசத்துக்கு அவன் இலக்காகும்படியாகி விட்டது.

உள்ளத்திலே ஒரு தீப்பொறி உருவாகிப் பற்றலாயிற்று.

உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடிந்தது. தம்பி பள்ளியிலேயே முதல் மாணவனாகத் தேறினான். அதிர்ஷ்டவசமாக அவனும் எப்படியோ கரை தாண்டினான். மேலே படிக்க வைக்க அம்மாவினால் ஆகாது. எனவே, தன் அண்ணனுக்குக் கடிதம் எழுதினான்.

பெரிய மாமா இருவரில் ஒருவரைப் படிக்க வைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

"சின்னவன் படிக்கட்டும். பரீட்சையில் அவன்தான் நிறைய மார்க்குகள் வாங்கியிருக்கிறான்!" என்றாள் அம்மா. மாமியும் அதை ஆமோதித்தாள்.

ஆனால் அவனுக்கு அது பொறுக்கவில்லை. தம்பி படித்துப் பெரிய மனிதனாகி விடுவான். அதை அவன் காண வேண்டும். தம்பி பெரிய அதிகாரியாக வருவான். பாகி அவனுக்குச் சொந்தமாகி விடுவாள். அவன்...? பயிர்த் தொழில் — சாகுபடி என்று செய்து கொண்டு வீட்டோடு மீதி வாழ்க்கையை ஓட்டுவான்! அப்படித்தானே?

"என்னை மேலே படிக்க வைக்கவில்லை என்றால், நான் எங்கேயாவது ஓடிவிடுவேன்!"

"நீயே யோசித்துப் பாரடா! நான் சொல்வது......."

"என் முகத்தை அப்புறம் நீ பார்க்கவே முடியாது!"

அவன் பிடிவாதம் பிடித்தான். தம்பியும் விட்டுக் கொடுப்பவனாகத் தோன்றவில்லை. ஒரு நாள் அவனே தம்பியிடம் கேட்டான்: "நான் உன்னை விடப் பெரியவன் அல்லவா?"

தம்பி ஒன்றும் பதில் அளிக்கவில்லை.

"நீ பின்னால் படிக்கலாம். நீ வயதிலும் சிறியவன்."

ஒருநாள் அவன் உண்ணாவிரதமே இருக்கத் தொடங்கி விட்டான். பின்னாலிருந்த மேடையில் போய் உட்கார்ந்து கொண்டான்.

அப்பொழுது எதிர்பாராத்தனமாக, "அண்ணனே 'படிக்கட்டும்!'" என்று சொன்னான் தம்பி. அதைச் சொல்லும் பொழுது அவன் விழிகளில் நீர் பனித்திருப்பதை அண்ணன் கண்டான்.

அது வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பம்.


சமையல்காரன் குரல் கேட்டு அவன் துணுக்குற்றான்.

"குளியலறையில் வெந்நீர் தயாராயிருக்கிறது.....!"

"உம்!"

ஒருவர் இன்னொருவரைப் பார்க்காமலே எதிரும் புதிருமாக உட்கார்ந்திருந்தார்கள்.

தரை, சுவர்கள், சித்திர வேலைப்பாடுகள் ஆகியவற்றின் மீது தம்பியின் பார்வை ஓடி



ஒருவர் தம் மனைவியின் ஞாபகார்த்தமாக அவளுடைய உருவத்தைப் பெரிதாக எழுதும்படி ஒரு சித்திரக்காரரிடம் போனார். அந்த அம்மாள் போட்டோக்கள் ஏதேனும் இருக்கிறதா என்று சித்திரக்காரர் அவரைக் கேட்டார். "ஓ! இருக்கிறது!" என்று மேலேயுள்ள நான்கு படங்களையும் அவரிடம் கொடுத்தார் அவர். இதற்குச் சித்திரக்காரர் என்ன பதில் சொன்னார், தெரியுமா? (அடுத்த பக்கம் பார்க்கவும்)

மீண்டும் மேஜைக் கண்ணாடியில் வந்து பதித்தது. ஒரு குற்றவாளியைப் போல அண்ணனைப் பார்த்த பிறகு, அவன் எதிரேயுள்ள கண்ணாடியில் தன் பார்வையைச் செலுத்தினான். மின்சார வெளிச்சத்தில் அவனுக்குத் தன் பிரதிபிம்பமே அதில் தெளிவாகத் தெரிந்தது. வரவேற்பு அறையின் மனோரம்மியமான பகைப் புலனிலே, தனது விகாரமான உருவம் அவனுக்கு ஒரு குற்றவாளியின் கைரேகையைப் போலப் பட்டது.

அவன் இந்த அழகிய மாளிகையைக் கற்பனை செய்து பார்க்கவில்லை. அவனுடைய ஆசைகளும் அபிலாஷைகளும் ஒரு சின்னஞ்சிறு வீட்டுக்குள்ளேயே அடங்கி விட்டன. அங்கே சித்திர வேலைப்பாடுகள் அமைந்த தரையில்லை. வண்ண வண்ண ஓவியங்கள் இல்லை. கண்ணாடி போட்ட மேஜை இல்லை. ஆடும் அழகியின் உருவத்தைத் தாங்கிய கடிகாரம் இல்லை. ஆனால்....சிவப்புச் சிமெண்டு பூசிய தரையில், தன் எழிற் பாதங்களைக் குறுகக் குறுக வெகு அழகாக எடுத்து வைத்துக் கொண்டு நடமாடும் ஓர் இள மங்கையைக் கண்டான். அவள் தன் வீட்டு வேலைகளை வெகு நேர்த்தியாகச் செய்வதைக் கண்டான். ஆம், கற்பனைக் கண்களால் தான் கண்டான். அவள் சிவந்த கன்னத்திலே ஒரு மச்சம் இருப்பதையும் கண்டான்.

அண்ணன் மேலே படிக்கச் சென்றான். அவன் அதற்குத் தன் சம்மதத்தையும் தெரிவித்தான். அப்பொழுது அவன் அது ஒரு இனாமாக முடியும் என்று எண்ணவில்லை. அப்படி எண்ணிச் செய்வதனால் ஏதாவது பெரிய காரியங்கள் நிகழ்ந்திருக்கின்றனவா? காலம் எண்ணங்களையும் கருத்துக்களையும் மாற்றியும் எழுதக்கூடிய ஆற்றல் கொண்டது.

கல்லூரி விடுமுறை நாட்களில் அண்ணன் வீட்டுக்கு வந்தான்; ஒரேயடியாக மாறி வந்தான். முன்னைக் காட்டிலும் சற்றுப் பருத்திருந்தான் என்பது ஒருபுறமிருக்கட்டும்; விதம் விதமான உடைகள் தைத்துக் கொண்டிருந்தான் அவன் தனக்கென்று. நிமிஷத்துக்கு ஒரு உருவத்தில் காட்சியளித்தான். அவன் அருகாகச் சென்றால், பவுடரின் நறுமணம் மூக்கைத் துளைக்கும். அவன் தங்கு தடையின்றி எதுவும் பேசக் கற்றிருந்தான். அவனுக்குச் சொல்லவும் எத்தனையோ விஷயங்கள் இருந்தன. நகரப் புறத்து விசேஷங்கள். கல்லூரி — ஹாஸ்டல் கதைகள் என்று!

அப்பொழுது அவன் அந்த அறையில் — ஜன்னல் வழியே சிறிது ஒளி வரும் இடமாகப் பார்த்து உட்கார்ந்து தனக்குத்தானே ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தான்.

பாமிக்கு அவன் கதைகள் பிடிக்கவில்லை. அரசகுமாரிகளின் கதையைக் கேட்டுக் கேட்டு அவள் அலுத்து விட்டாள். அவள் இப்பொழுது பெரியவளாகி விட்டாள் அல்லவா?

அவள் நகரப் புறத்துச் செய்திகளைக் கேட்பதில் அதிக ஆர்வம் காட்டத் தொடங்கியிருந்தாள்.

"இதோ பார்! ராஜூ இதைக் கொடுத்தான்!" என்றான் அவன்.

அவள் பார்த்தாள். எழில் மிகுந்த செயற்கை மலர்கள்! செயற்கை முத்து மாலைகள்! பாமியின் அம்மாவுக்குக்கூட ராஜூவைப் பற்றிப் பேச எத்தனையோ செய்திகள் கூடை கூடையாகக் குவிந்திருந்தன.

கல்லூரி திறந்தாகி விட்டது. அண்ணன் நகரத்துக்குப் போய் விட்டான். தம்பி வெள்ளைப் பாத்திப் பக்கம் போனான்.

எப்படியும் கிராமத்தை விட்டாக வேண்டும். ஏதாவது வேலை பார்த்தாக வேண்டும். அவன் தினமும் மூன்று மைல் நடந்து சென்று செய்தித் தாளைப் பார்க்கவும், யாருக்கும் தெரியாமல் அவற்றில் வெளி வந்துள்ள விளம்பரங்களைக் குறித்துக் கொள்ளவும் செய்தான். அதோடு விண்ணப்பங்கள் எழுதித் தபாலிலும் சேர்த்தான்.

வேதனையும் ஆவேசமும் உந்த அவன் அந்தப் பேருண்மையைப் புரிந்து கொண்டான். பாமி அவனை விட்டு நாளுக்கு நாள் விலகிச் சென்று கொண்டிருக்கிறாள்!

அண்ணன் அம்மாவுக்கு எப்பொழுதாவது தான் கடிதம் எழுதுவான். மாமிக்கும் பாமிக்கும் அடிக்கடி கடிதம் எழுதி வந்தான். அதனால் அம்மா, "போ, போய் அவனைப் பற்றிய செய்தியை அறிந்து வா!" என்று அடிக்கடி தூண்டுவாள்.

அவன் முணுமுணுப்பான்.

"போமேன்! அவன் எங்கேயோ கண் காணாத தூரத்தில் இருக்கிறானே!" என்று கூறுவான் அவன்.

கடைசியில் சிறு பொறி கனிந்து பெருந் தீயாகப் பரிணமித்தது.

அப்பொழுது அண்ணன் பரிகாசத்தோடு அவமானப்படுத்தவும் செய்தான். "நான் என்ன செய்தேன்?"

"எதுவுமே செய்யவில்லையா? என்ன இருந்தாலும் நீ இப்படி எனக்குத் தீங்கு இழைத்திருக்க வேண்டாம்!" என்று குமைந்தான் தம்பி.

கேலிக் குரலில் அண்ணன் சொன்னான்: "போ, போ! உனக்குத் தங்கள் பெண்ணைத் தாரை வார்த்துக் கொடுக்க அவர்கள் தயாராகக் காத்திருக்கிறார்கள்!"

அன்று நடந்த பேச்சுக்கள் அத்தனையும் ஞாபக மறதி என்னும் குழியில் அமுந்திக் கிடப்பதே நல்லது.



சித்திரக்காரர்: ஏன்! உங்கள் மனைவியின் முகம் பார்க்க நன்றாயிருக்காதோ?

பாவிடம் சொல்வதற்கு அவன் உள்ளத்தில் எத்தனை விஷயங்கள் குமுறிக்கொண்டு கிடந்தன! ஒரு நாள் மத்தியானம் அவன் அவள் அறைக்குச் சென்றான். அவள் சாய்வு நாற்காலியில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். வாசற்படியில் நின்று கொண்டு ஒரு கணம் அவளைக் கண் நிறையப் பார்த்தான். அவள் இப்பொழுது பழைய கதைகள் கேட்கத் துடிக்கும் சிறுமி இல்லை. அவள் நெற்றியில் வியர்வைத் துளிகள் முத்திட்டுப் பனித்திருந்து கொண்டிருந்தன. கூந்தல் மார்பிலே புரண்டு விளையாடிக் கொண்டிருந்தது. அவன் ஆவலுடன் பாவையைப் பார்த்தான். தன்னடக்கம் என்னும் சங்கிலியில் முடிச்சுக்கள் அறுந்து விடும் போலத் தோன்றியது. தூங்கும் அவளை அப்படியே எடுத்து ஆரத் தழுவிக் கொண்டால்...? ஆசை வெறித்தெழுந்தது. ஆனால்.. யோசிக்க அவனுக்கு எத்தனையோ இருந்தது. அண்ணா, அம்மா, மாமா....அனைவரின் நினைவில் அவன் ஆவேசம் கரைந்து விட்டது.

மெதுவாக, கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்தால் அவள் விழித்துக் கொண்டு விடுவாளோ? ஊஹூம், அவனால் அப்படிச் செய்ய முடியவில்லை. வியர்வையில் தெப்பமாக நனைந்து திரும்பி விட்டான்.

அண்ணனுக்கு எல்லாம் கிட்டியது. பாவை அவனுக்குச் சொந்தமாகி விட்டாள். அந்தக் காட்சியைக் கண்டு அவன் மௌனமே உருவாக நின்றான். பட்டினத்தில் அண்ணனுக்காக மாமா ஒரு நல்ல உத்தியோகம் தயாராகப் பார்த்து வைத்திருந்தார். கல்யாணத்தன்று இரவு எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவன் ஓசைப்படாமல் எழுந்து புறப்பட்டு விட்டான். யாரிடமும் எதுவும் சொல்லவில்லை. எங்கே போவது என்றுகூட அவன் யோசிக்கவில்லை. புறப்பட்டு விட்டான். அதற்குப் பின் ஒன்பது ஆண்டுகள் வாழ்க்கைக் கடலில் அலை மோதிச் சென்று விட்டன.

அதன் மத்தியில்....வேண்டாம், வேண்டாம். அந்த நினைவு வந்தால் கண்கள் குளம் கட்டி விடும். எத்தனை இரவுகள் பசியும் பட்டினியும் வேதனையுமாக யார் யார் வீட்டுத் திண்ணையிலோ கழிக்க வேண்டியிருந்தது! எத்தனையோ பட்டணங்களில் ஹோட்டல்களில் இருந்த கள்ளர்களுக்கும் கறி ஆட்டைகளுக்கும் அருகில் ஒண்டிக் கிடக்க வேண்டியிருந்தது! அந்தக் கடந்த காலத்தை இப்பொழுது நினைத்தாலும் குலைநடுக்கம் எடுத்து விடும் போலிருந்தது.

ஒரு நாட்களுக்குப்பின் ஆசைகள் நிறைந்த அந்த நகரத்தின் எல்லை ஒதுக்கத்தில், ஒரு தெரு முனையில் கட்டிக் குன்றில் வதங்கிய கம்பளிக் குள்ளே மடங்கி முனகிக் கொண்டிருந்த ஒரு பெண்ணின் உருவம் அவன் கண்ணெதிரே தோன்றியது.

அவள் ஓர் இடையனின் மகள். அவன் பக்கத்து வீட்டில் குடியிருந்தாள். அம்மை வடுக்கள் நிறைந்த பெரிய உருண்டை முகம் அவளுக்கு. அவள் வயது ஒரு வேளை அவனைக் காட்டிலும் அதிகமாக இருக்குமோ என்னவோ? ஆயினும் அவன் அவளை மணந்து கொண்டான்.

அவன் அன்றைய இரவை நினைத்துப் பார்த்தான். ஆலையிலிருந்து ஒரு மாதச் சம்பளத்தை முன் பணமாகப் பெற்றிருந்தான். முழுசாக நாற்பது ரூபாய் கிடைத்திருந்தது. மாலை வீடு திரும்பும்பொழுது அவன் கால்கள் தரையில் பாவவில்லை. தடுமாறிக் கொண்டிருந்தன. அறிவும் மழுங்கிக் கொண்டிருந்தது. வீட்டு வராந்தாவை அணுகுவதற்குள் தூணைப் பிடித்துக் கொண்டு அவன் வாந்தி எடுத்து விட்டான்.

களைத்துப் போய் அப்படியே தரையில் உட்கார்ந்தான். மறுபடியும் வாந்தி எடுத்தது. அப்பொழுது வெண்கலக் காப்பு அணிந்திருந்த கையொன்று அவன் முதுகைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தது. கன்னத்

இலவசம்

கவர்ச்சி மிகுந்த


ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்

பாத்திரங்கள்

தேவைக்கு ஏற்பத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். மன மகிழ்வு பெறலாம்.




ஓ. கே. தயாரிப்புகளின் பரிசுக் கூப்பன்களைச் சேகரியுங்கள்.



- ★ ஓ. கே. வனஸ்பதி
- ★ ஓ. கே. டபிள் ரிபைண்ட் ஆயில்
- ★ கோல்டன் ஸலட் ஆயில்
- ★ ஓ. கே. சந்தன சோப்
- ★ ஓ. கே. ஓரியண்டல் ரோஸ் சோப்
- ★ ஓ. கே. நீம் சோப்
- ★ மியோகே சோப்
- ★ சோப் சிப்ஸ்

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு ஓ. கே. தயாரிப்புகளிலும் உள்ள பரிசுக் கூப்பன்களைச் சேகரியுங்கள். அவற்றிற்குப் பதிலாக, உங்கள் அருகிலுள்ள ஓ. கே. வியாபாரியிடமிருந்து, நீங்கள் விரும்பும் அளவிலும், வடிவிலும் கவர்ச்சி மிகுந்த ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களைப் பெறுங்கள்.

இந்த விசேஷமான பரிசுத் திட்டம் பற்றிய இதர விவரங்களை அறிய, உங்கள் ஓ. கே. வியாபாரியிடமிருந்து, படங்களோடு கூடிய 'போல்டரை' (folder) வாங்கிப் பாருங்கள்.



EP-EAC'3-TAM

தயாரிப்பாளர்கள்:

திஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், மதராஸ்-1

சென்னை, மைசூர், கேரளா & ஆந்திர ராஜ்யங்களிலுள்ளவர்கள் மாத்திரம் இந்தப் பரிசுத் திட்டத்தில் கலந்துகொள்ளலாம்

திறந்த பொழுது அவள் முன் அறையில் பார்த்திருந்தாள். அவள் விசித்தவாறு அருகில் உட்கார்ந்திருந்தாள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் அவள் அவனுக்குக் கெட்டியோராகக் குரல் கொடுத்தாள்.

"எழுந்திரு!"

அவன் சிரமப்பட்டு எழுந்தான். அவள் அவனைத் தாங்கிப் பிடித்தவாறு குளியலறைக்கு அழைத்துச் சென்றாள்.

"சட்டையைக் கழற்று!"

அவன் சட்டையைக் கழற்றினான்.

துண்டு ஒன்றைக் கொடுத்து "உடை மாற்றிக் கொள்!" என்றாள் அவள்.

அவன் அந்த உத்தரவுக்கேற்பவாக் கீழ்ப் படிந்தான்.

செம்பைக் கொண்டு தொட்டியிலிருந்து நீரை மொண்டு மொண்டு அவன் தலையில் ஊற்றினாள் அவள்.

தலையில் நீர் பட்டதும் அவனுக்குச் சிறிது அறிவு தெளிந்தாற் போலிருந்தது.

"எந்த ஜென்மத்திலும் நீ எனக்கு வேண்டும்!" அரற்றினான் அவன்.

மன்னிப்புக் கேட்கும் பாவனையில் அவன் அவளைப் பார்த்தான்.

அவள் கண்கள் கூறின. வெண்கலக் காப்புகளின் ஒலி விடாமல் எழுந்து கொண்டிருந்தது. சொறசொறப்பான கைவிரல்கள் அவன் மார்பைத் தடவி விட்டுக் கொண்டிருந்தன.

தூக்கிவாரிப் போட்டாற் போல அவன் விழித்தான்: கருப்புக் கம்பளிக்குள்ளே யாரோ நுழைந்து கொண்டிருப்பதுபோலத் தோன்றியது.

நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டு, அப்பொழுதுதான் விழித்தவன்போல், அவன் அழைத்தான்: "அண்ணா!"

ராஜனும் அதைக் கேட்டுத் தூங்கி விழித்தவன் போல விழித்தான். பிறகு கைகளைப் பிசைந்து கொண்டு தர்மசங்கடத்தில் சிக்கியவன் போல இங்குமங்கும் பார்க்கலானான்.

"முக்கியமான விஷயம் ஒன்று சொல்லத்தான் நான் உன்னிடம் வந்திருக்கிறேன்!" என்றான் தம்பி.

"சொல்லு!" ராஜன் அமைதியோடு கேட்பவனைப் போல நடித்தான்.

"என் மனைவி நோயாகக் கிடக்கிறாள். அவளை வேலூருக்கு அழைத்துப் போக வேண்டும். அதற்காக...." அவன் தயங்கினான். அதற்குள் அண்ணன் ஏதோ சொல்ல வாய் எடுக்கவே, அவனே முந்திக் கொண்டு அவசரம் அவசரமாகச் சொல்லலானான். "கிராமத்தில் நம் இருவருக்கும் வீடும் வயல்களும் இருக்கின்றனவே. அவற்றில் என் பங்கை விற்க விரும்புகிறேன். அப்பொழுதுதான் அவள் உயிர் பிழைப்பாள்!"

"பணத்துக்காகவென்றால்...."

"இல்லை. அந்தச் சொத்து இருப்பதனால் ஒன்றும் பிரயோஜனம் இல்லை. அதை விற்பதென்றால் உங்கள் சம்மதம் வேண்டும். அப்பொழுதுதான் வக்கீல் கொண்டு எழுத முடியும்."

வெகுநேரத்துடன் ராஜனும் அவன் சொல்லைக் கேட்டான். அவனும் அவனிடம் எத்தனையோ சொல்ல எண்ணினான். ஆனால் சொல்லவந்தது தொண்டையிலேயே அடைபட்டது போல அப்படியே நின்றான்.

"வக்கீல் கொண்டு எழுதினாலும் செய்து கொள்கிறேன். தங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லையே!"

"இல்லை" — ராஜன் எப்படியோ இந்தச் சொற்களைச் சொல்லி முடித்தான்.

அப்பொழுது அவன் கண்களில் நீர் கட்டி நின்றது. அவன் உடனே தன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

மேஜையிலிருந்த ரேடியோ பாடும் ஒலி கேட்டது. சுவரிலிருந்த கடிகாரம் — அரைமணிக்கு ஒருதரம் அடித்துக் கொண்டிருந்தபோலவே இப்பொழுது மணி அடித்தது.

"பத்தரை மணி ஆகி விட்டதா?" — தம்பி எழுந்து நின்றான். "நான் பதினொன்று மணி ஜனதா எக்ஸ்பிரஸில் போயாக வேண்டும்" என்றான்.

"இன்று இங்கே தங்கி...."

"இல்லை அவளுடன் அத்தானைக்கு யாருமே இல்லை." இதைச் சொல்லும் பொழுது கட்டிலில் கருப்புக் கம்பளிக்குள் முடங்கிக் கொண்டிருக்கும் பொன்னம்மா நினைவுக்கு வந்தாள்.

ராஜன் அதிகமாக நிர்ப்பந்தப் படுத்தவில்லை. தம்பி எழுந்தான். பிறகு போய் தன் குடையை எடுத்துக் கொண்டு போர்டிகோ பக்கம் சென்றான்.

ராஜன் கதவைத் திறந்து விட்டான். தம்பி படியிறங்கிச் சென்றான்.

"வக்கீலிடமிருந்து காகிதம் வந்ததும், தங்கள் சம்மதத்தை எழுத்து மூலம் தெரிவித்து விடுங்கள்!"

"சரி!"

"நான் வருகிறேன்!"

அவன் புறப்பட்டு விட்டான். வெளி இருளில் நிழல் போலச் சிறிது தெரிந்தது. கணமிக்ஸ் அதுவும் மறைந்து விட்டது.

தன் உணர்ந்த உதடுகளை நாக்கினால் ஈரமாக்கியவாறே ராஜன் உள்ளே சென்றான். வரவேற்பு அறை வாசலில் சென்றதும் மாடிப் படியிறங்கி வரும் ஒலி கேட்டது. ஒரு வேளை பாலியோ, என்னவோ?

"இன்று என்ன விசேஷம், போனவன் ஒன்றும் இன்னும் திங்கள் செய்யவில்லை போலிருக்கிறதே!"

பாலினியின் குரல் கேட்டு ராஜன் திரும்பிப் பார்த்தான். ஜன்னலிலிருந்து செய்தித் தாளைக் கண்ணாடி மேஜை மீது விரித்த வண்ணம், "எல்லாம் இதோ முடித்து விடுகிறேன்!" என்றாள்.

"யார் வந்திருந்தார்கள்?"

"கிராமத்திலிருந்து யாரோ வந்திருந்தார்கள்!"

"யார்?"

"உனக்கு அவர்களைத் தெரியாது."

படக் படக்கென்று படியேறி மாடிக்குச் சென்று விட்டான்.

உடலில் ஊடுருவிச் செல்லும் குளிர் காற்றைத் தாங்கிக்கொண்டு ராஜன் ஜன்னலருகில் சென்று அதன் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு நின்றான். முற்றத்திலிருந்து சம்பங்கிக் கொடிகளைச் சுற்றி மின்மினிப் பூச்சிகள் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்தன. — ர. வி.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.


அன்றுடம் அணியும் ஆடைகளுக்கு
அத்தனை வெண்மையும் பொலிவும்
அளிப்பது ஸன்லைட்
SUNLIGHT SOAP
அன்றுடத் துணிகளுக்கா அத்தனை புதுமைமிகு தூய்மை? அத்தனை வெண்மையும் பொலிவும்? 'ஆம், ஆம்' என்கிறது ஸன்லைட் சலவை. இல்லத்திலே சலவை செய்ய எல்லாத் துணிகளுக்கும் ஏற்றது...
ஸன்லைட் — நுரைவளமுள்ள தூய்மையான சோப்.
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

Registered No. M. 4392

Registered as a Newspaper in Ceylon

